ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரும் - -
- - அவருடைய காவியங்களும்

P. S. கிருஷ்ணன், B.Sc.,

|| श्रीः ||

ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரும்
: : அவருடைய காவ்யங்களும்

(ஓர் இலக்கிய விமர்சன நூல்)

பாலாமடை ஸ்ரீ P. S. கிருஷ்ணன் B. Sc.,
எழுதியது.

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய
ஸ்ரீ சாரதா பீடாதிபதிகளான
ஸ்ரீ சிருங்கேரி
ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமதபிநவவித்யா தீர்த்த ஸ்வாமிகள் அருளிய
திவ்ய ஸ்ரீ முகத்துடனும்

மதுரை வக்கீல் ஸ்ரீ N.S.விசுவநாதய்யர் B.A.B.L.,
அவர்கள் எழுதிய ஆங்கில முகவுரையுடனும்
கூடியது.

மயிலாப்பூர், ஸ்ரீராகவசிம்ஹம் பிரஸ்ஸில்
அச்சிடப்பட்டது.
1991

விலை ரூ. 12

முதற் பதிப்பு: — 1958
இரண்டாம் பதிப்பு 1991

இப்புஸ்தகம் கிடைக்குமிடம்
ஸ்ரீ ராகவசிம்மம் பிரஸ்
11/2, கேசவபெருமாள் மேலண்டை வீதி,
மயிலாப்பூர், சென்னை-4.
தொலைபேசி எண் : 75225

CONTENTS

		பக்கம்
श्रीमुखम्	...	I
ஸ்ரீமுகம் (தமிழ்)	...	III
Foreword	...	V
ஆசிரியரின் முன்னுரை	...	VII
இரண்டாம் பதிப்பு	...	X
1. ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர்	...	1
2. ஸ்ரீ நீலகண்டர் இயற்றிய நூல்கள்	...	21
3. ஸ்ரீ நீலகண்டரும் காவ்ய தத்துவமும்	...	98
4. நீலகண்டரின் கவிச் சிறப்பு		121
5. நீலகண்டருடைய நூல்களிலிருந்து நாம் அறிந்து கொள்வது	...	150
Appendix 1—4	...	161
Index of Verses	...	171

பிழைதிருத்தம்

Page	Line	பிழை	திருத்தம்
8	6	तदन जन्मनः	तदनन्तरजन्मनः
21	19	கிராமத்தில்	கிரமத்தில்
36	5	द्रष्टुमघमर्ण	द्रष्टुमधमर्ण
51	11	धाराशतः	धाराशतैः
54	12	செய்தவர்கள்	செய்த இவர்கள்
60	4	ना स्त	नास्ति
65	22	உதரித்தள்ள	உதறித்தள்ள
104	8	सहृ यो	सहृदयो
108	15	रथात्मकं	रर्थात्मकं
110	10	युवति	युवतिं
116	24	वाचरपति	वाचस्पति
126	2	अङ्ग भाङ्ग भपि	अङ्ग भाङ्गमपि
127	2	किलवूमपकाद्याः	किलचूतचम्पकाद्याः
131	1	वीरभाहेश्वरे	वीरमाहेश्वरे
132	25	नयाऽथ	नयाऽर्थो
136	21	दपदिंती	दम्पतिं
137	18	ममैतत्तर	ममैतत्तुर
140	8	णण्ड	चण्ड
143	19	இபத்தை	இன்பத்தை
144	1	तदाविरामी	तदाविरासी
144	24	'खवकृतं' इति	'सर्वकृतं' इति
,,	,,	पाठानन्तरम्	पाठान्तरम्
144	25	களின் கார்யம்' எறு	'அல்பர்களின் கார்யம்' என்று
145	20	तार्कक्स्य	तार्किकस्य
152	22	ताम्रपर्णोम्	ताम्रपर्णीम्



॥ ओम् ॥

॥ श्री शृङ्गेरी श्रीजगद्गुरुसंस्थानम् ॥

श्रीविद्याशंकर

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य पदवाक्यप्रमाण-पारावारपारीण यमनियमासनप्राणायामप्रत्याहारध्यान-धारणासमाध्यष्टाङ्गयोगानुष्ठाननिष्ठ तपश्चक्रवर्त्यना-द्यविच्छिन्न श्रीशंकराचार्यगुरुपरम्पराप्राप्तषड्दर्श-स्थापनाचार्य व्याख्यानसिंहासनाधीश्वर सकलनिगमागम-सारहृदय सांख्यत्रयप्रतिपादक वैदिकमार्गप्रवर्तक सर्वतन्त्र स्वतन्त्रादिराजधानी विद्यानगरमहाराजधानीकर्णाटक सिंहासनप्रतिष्ठापनाचार्य श्रीमद्राजाधिराजगुरुभूमण्डला-चार्य ऋष्यशृङ्गपुरवराधीश्वर तुङ्गभद्रातीरवासि श्रीम-द्विद्याशंकरपादपद्माराधक श्रीजगद्गुरु

श्रीचन्द्रशेखरभारतीस्वामिगुरुकरकमलसञ्जात

श्रीजगद्गुरु श्रीमदभिनवविद्यातीर्थस्वामिभिः

अस्मदत्यन्तप्रियशिष्य श्री पि. यस्. कृष्णार्यविषये विरचिताः श्रीमन्नारायणस्मरणपूर्वकाशिषः समुल्ल-सन्तुतराम् ।

वृत्ताध्ययनसम्पन्नानां विरचितनानाप्रवन्धानां चरमे वयसि 'पालामडै' ग्राममध्युषितानां प्रातस्स्मरणीय-सुप्रथितनामधेयानां ब्रह्मभावमितानां श्रीनीलकण्ठदीक्षि-तानां अन्ववाये जनिमलभन्त भवन्तः । पूर्वे बयसि आंग्ल विद्याप्रावीण्यं प्रापद्यन्त । सन्तानसम्प्रदायमनुसरन्तः नव्ये वयसि स्वयमेवोद्यम्य गीर्वाणवाणीसाहित्येऽपि सम्यक् परिचयं समपादयन् । आत्मनः सुरसरस्वतीपरिचयं सफलयितुकामाः श्रीनीलकण्ठदीक्षितविरचितान् सकलान् ग्रन्थान् गाढावगाहं परिचीय तत्र रसमनुभूय इतरानपि रसमास्वादयितुं तद्ग्रन्थगतैरेवोदाहरणैः तदीयं जीवन-चरितं प्रतिपादयितुं च "श्रीनीलकण्ठदीक्षितरुं अवरुडैय काव्यङ्गळुं" इति नामकं द्रविडभाषानिबद्धं पुस्तकं निर-मिमत । तच्च तत्र तत्र अस्मान् अश्रावयन्त । भवतां लेखनशैली प्रतिपदं चित्तमाह्लादयति । दीक्षितानां चरितं स्फुटयति । भवतां उद्यमः फलेग्रहिरभूत् । पुस्तकमिदं सर्वत्र पण्डितलोके प्रसारमवाप्य चिरतरं प्रकाशतामित्या-शास्महे ॥

हेमलम्ब पुष्यशुद्धद्वादशी
यात्रास्थानं पल्लत्तूरु.

श्री



ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்
தக்ஷிணாம்னாய ஸ்ரீ சாரதா பீடம், சிருங்கேரி

ஸ்ரீமத் பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்யவர்ய
ஸ்ரீ ஜகத்குரு சிருங்கேரி
அபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகள் அருளிய

ஸ்ரீமுகம்

ஸ்ரீவித்யாசங்கர

அஸ்மதத்யந்தப்ரிய சிஷ்யரான ஸ்ரீ பி. எஸ் கிருஷ்ணய்யர் விஷயமாக செய்யப்பட்ட நாராயண ஸ்மரண பூர்வகமான ஆசீர்வாதங்கள் விளங்கட்டும்.

ஆசாரமும் கல்வியும் நிறைந்து பலநூல்கள் இயற்றி கடைசிவயதில் பாலாமடை கிராமத்தில் வஸித்து ப்ரஹ்ம பாவமடைந்த மஹாப்ரஸித்தர் களான ஸ்ரீநீலகண்டதீக்ஷிதருடைய வம்சத்தில் பிறந்த நீங்கள் பால்யத்தில் ஆங்கிலக் கல்வியில் தேர்ச்சி பெற்று, பிறகு தன் வம்சம் பெருமைக்கேற்ப தன் முயற்சியாலே வாசித்து ஸம்ஸ்கிருத ஸாஹித் யத்திலும் மிகுந்த பரிசயம் பெற்றிருக்கிறீர்கள். தனக்குக் கிடைத்த ஸம்ஸ்கிருதக் கல்வியைப் பய னுறச் செய்வதற்கு ஸ்ரீநீலகண்டதீக்ஷிதர் இயற்றிய எல்லா நூல்களையும் ஆழ்ந்து வாசித்து அதிலுள்ள ரஸத்தை தான் அநுபவித்து பிறருக்கும் அந்த அநு பவம் கிடைப்பதற்காகவும் அவருடைய நூல்களைக் கொண்டே அவருடைய ஜீவிய சரிதத்தை எடுத்துக்

காட்ட ''ஸ்ரீநீலகண்ட தீக்ஷிதரும் அவருடைய காவ்யங்களும்'' என்ற பெயர் கொண்ட தமிழ் நூல் ஒன்றை இயற்றி அதிலிருந்து ஆங்காங்கு எங்களுக்கும் வாசித்துக் காட்டினீர்கள். உங்கள் நடை ஒவ்வொரு வார்த்தையிலும் மனதுக்கு ஆஹ்லாதத்தை கொடுப்பதுடன் ஸ்ரீ தீக்ஷிதருடைய சரித்திரத்தையும் நன்கு காட்டுகிறது. உங்களது முயற்சி பயனுள்ளதாக ஆகி இப்புஸ்தகம் பண்டித உலகத்தில் ப்ரசாரத்தை அடைந்து வெகுகாலம் விளங்கவேண்டும் என்று ஆசீர்வாதம் செய்கிறோம்.

ஹேமலம்ப-புஷ்யசுத்த-த்வாதசீ.
யாத்திராமுகாம்:பள்ளத்தூர்.

ஸ்ரீ:

FOREWORD

Sri P. S. Krishnan of Palamadai desires in his warmth for me that I should write a short foreword to his book 'Sri Nilakantha Dikshita and His Poetry'. I hasten to write one with exhilaration and pleasure because he has opened in his book opportunities for myself to explore the varied ways of appreciating an illustrious and eminent poet-philosopher in South Indian History of the medieval times. The life of Sri Nilakantha should have been extraordinarily busy and all the poems, dramas etc., that he has been able to write have been only out of the few small hours of leisure that he should have snatched. Sri Nilakantha, as a critic and connoisseur of good poetry speaks just in the same strain as Matthew Arnold in his 'Essays in Criticism' and it is a marvel how these two great minds have thought alike in the fundamentals of 'poetry'. Versati ity, keen sense of humour, arresting felicity depth of learning, comprehensive vision and at the back of all, a Vedic background of Dharma are the distinguishing marks of Sri Nilakantha's writings and Sri P. S. Krishnan's careful selection from the various works of Sri Nilakantha with his easy Tamil renderings stimulates our interest in researches in the literary works of

great poet-philosophers of the type of Sri Nilakantha. And what is of most absorbing interest is the way Sri P. S. Krishnan takes us through the varied stages and moods of the poet's mind as revealed by a careful study and analysis of his Granthas. Sri Krishnan's attempt is by itself, a re-markable psychological study. I, for myself, as a student of Dikshita's works, found my literary joys considerably augmented on a reading of Sri Krishnan's book. The Sanskrit and Tamil world of litterateurs should feel indebted to Sri P. S. Krishnan for his praise worthy achievement.

'Gita Vilas'
Madurai
10—3—1958

N. S. VISWANATHA IYER
B.A., B.L.,
Advocate

முன்னுரை

ஐந்து வருஷங்களுக்கு முன், ''திருநெல்வேலி இலக்கிய கழகத்தின்'' கூட்டம் ஒன்றில் ''ஸ்ரீநீல கண்டரும் அவருடைய காவ்யங்களும்'' என்ற பொருள் பற்றி, ஒரு கட்டுரையை எழுதி வாசித்தேன். இலக்கிய நண்பர்கள் சிலர், அக்கட்டுரையை ரஸித்ததோடு அல்லாமல் இம்மாதிரிக் கட்டுரைகள், தமிழ்மக்களுக்குஸம்ஸ்க்ருத இலக்கியத்தில் ருசியை உண்டாக்க உதவும் என்றும் அபிப்பிராயப்பட்டார்கள். மேலும், இந்தக் கட்டுரையில் கையாண்டிருந்த விஷயத்தை இன்னும் விரிவாக எழுதி புத்தக ரூபமாக வெளியிட்டால் நன்ருக இருக்கும் என்றும் அவர்கள் கூறினூர்கள். அந்த யோஜனையை மனத்தில் கொண்டு இந்நூலை எழுதலானேன். ஆதலால் இந்த வேலையில் ஊக்கத்துடன் என்னை ஈடுபடச் செய்தது மேற்கூறிய நண்பர்களின் நல்ல அபிப்பிராயமே.

தவிர, ஸ்ரீநீலகண்ட தீக்ஷிதரின் வம்சத்தில் பிறக்கும் பாக்கியத்தைப் பெற்றிருக்கும் நான், அம்மஹானின் காவ்யங்களை நன்கு பரிசீலனை செய்து, அவைகளின் சிறப்பை மக்களுக்கு எடுத்து விளக்குதல் என் கடமை என்றே கருதினேன். ஸ்ரீ தீக்ஷிதரின் காவ்யங்கள் ஓரளவு பிரகாசம் அடைந்திருப்பினும், நான் அறிந்த மட்டில் அவருடைய நூல்கள் எல்லாவற்றையும் பாங்காக விளக்கி ஒருவரும் இதுவரை எழுதவில்லை. நான் இதில் கையாண்டிருக்கும் விமர்சன முறையின் அடிப்படையில், ஒரு

கவியையும் அவருடைய காவ்யங்களையும் நோக்கு தல் நம்மிடை அவ்வளவாகக் காணப்படவில்லை. இது ஆங்கில இலக்கிய விமர்சன முறையை அனு சரித்திருக்கிறது எனலாம்.

ஸ்ரீ தீக்ஷிதருடைய நூல்களின் கதைச்சுருக்கத் தையும், அவைகளின் சிறந்த அம்சங்களையும் காவ்ய தத்துவம் குறித்து ஸ்ரீ நீலகண்டரின் கருத் தையும், அக்கருத்தின் அடிப்படையில் அவருடைய கவிதைகளின் சிறப்பையும், ஓரளவு பரிசீலனை செய்து விளக்கியிருக்கிறேன். ஏராளமாக அவரு டைய நூல்களிலிருந்து செய்யுட்களை எடுத்து, அவை களுக்கு முடிந்தவரையில் சரியான மொழி பெயர்ப் பும் கொடுத்திருக்கிறேன். ஸம்ஸ்க்ருதம் தெரியாத வர்களுக்கு இது பெரிதும் பயன்படுவதோடு, ஸாமான்யமாக ஸம்ஸ்க்ருதம் கற்ருேருக்கு அந்தப் பாஷையில் உள்ள ருசியை அதிகரிக்க உதவுமென் றும் நம்புகிறேன்.

என்னுடைய இம் முயற்சியையும் ஒரு பொருட் டாகக் கருதி அன்பு கூர்ந்து ஒரு அழகிய ஸ்ரீமுகம் தந்தருளிய ஸ்ரீஜத்ககுரு ஸ்ரீசிருங்கேரி ஸ்ரீஆசார்ய பாதர்களின் பாதாரவிந்தங்களில் என்பிரணமங்களை ஸமர்ப்பிக்கின்றேன்.

எங்கள் வம்ச்யரும், பிரபல வக்கீலும், ஸம்ஸ் க்ருத-ஆங்கில அறிஞரும் ஆகிய மதுரை ஸ்ரீ N. S. விவச்நாத அய்யர் அவர்கள் இப்புத்தகத்திற்கு ஒரு

அழகான ஆங்கில முகவுரை வழங்கியுள்ளார்கள். அவர்களுக்கு என் நன்றியும் வணக்கமும்.

இந்த நூலின் கையெழுத்துப் பிரதியை பரிசீலனை செய்து பல பிழைகளைத் திருத்தி அநேக இடங்களில் செய்யுட்களின் மொழி பெயர்ப்பையும் அழகுபடுத்தி அச்சாகும்பொழுது அவைகளைத் திருத்தி உதவிய ஸ்ரீரங்கம் ஸ்ரீசங்கர குருகுலம் லைப்ரேரியன் பிரஹ்ம ஸ்ரீ K. S. வெங்கடராம **சாஸ்திரிகள்** அவர்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு என் கிருதக்ஞதையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்கால ஸம்ஸ்க்ருத இலக்கியத்தின் வளத்தையும் குறிப்பாக ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரின் காவ்யங்களின் சிறப்பையும் விளக்க இந்நூல் ஒரளவு உதவினால் என் முயற்சி பயன் எய்தியதாகக் கருதி மகிழ்வேன்.

18, சிவபுரம்,
திருநெல்வேலி.

பி. எஸ். கிருஷ்ணன்

இரண்டாம் பதிப்பு

இந்நூலின் முதல் பதிப்பு 1958ம் வருடம் வெளியிடப்பட்டது. அதற்கு பொதுவாக நல்ல வரவேற்பு கிடைத்தது. 'ஹிந்து', 'பவன்ஸ் ஜர்னல்', தினமணி, வேதாந்த கேஸரி போன்ற பத்திரிகைகளிலும் நல்ல மதிப்புரைகள் வெளியிடப்பட்டன. அப்பதிப்பு முற்றிலும் விற்றுப்போய் விட்டபடியால், மறுபதிப்பு ஒன்று வெளியிட வேண்டும் என்ற எண்ணம் சில வருடங்களாக எனக்கு இருந்தது. பல அன்பர்களும் இவ்விஷயத்தில் என்னை வற்புறுத்தினார்கள். இந்நூல் வெளியாகிய பின் - ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரின் காவ்யங்களை பல பெரிய அறிஞர்கள் ஆய்வு செய்து நூல்கள் வெளியிட்டிருக்கின்றனர். அவைகளை எல்லாம் நன்கு ஆராய்ந்து இந்நூலை இன்னும் விஸ்தாரமாக வெளியிட வேண்டும் என்பது என் விருப்பம். ஆனால் வயதின் காரணத்தினாலும், அவகாசமின்மையாலும் அப்பணியைச் செய்ய இயலவில்லை. ஆகவே இந்நூல் ஒரு சில திருத்தங்களுடன் இப்பொழுது இரண்டாம் பதிப்பாக வெளியிடப்படுகிறது. ஸஹ்ருதயர்கள் இதை வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

இந்த நூலை அழகான முறையில் அச்சிட்டுத்தந்த ஸ்ரீ ராகவசிம்மம் பிரஸ் நிர்வாகிகளுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பதிப்பிற்கும் முன்போல் அன்பர்களின் வரவேற்பும் ஆதரவும் கிடைக்குமென்று நம்புகிறேன்.

பாலாமடைகிராமம்,
திருநெல்வேலி ஜில்லா.

பி. எஸ். கிருஷ்ணன்.

பாலாமடை ஸ்ரீ மங்களேஸ்வரி



த்வத் ஸந்நிதான ரஹிதோ மம மாஸ்து தேச:
த்வத் தத்வ போத ரஹிதா மமமாஸ்து வித்யா !
த்வத் பாதபக்தி ரஹிதோ மம மாஸ்து வம்ச:
த்வச்சிந்தயா விரஹிதம் மம மாஸ்து சாயு: !!

ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரின் அதிஷ்டானம்

பாலாமடை



12-4-57ல் ஸ்ரீ சிருங்கேரி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் விஜயம் செய்த போது எடுத்த படம்

।।श्रीः।।

ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரும் அவருடைய காவ்யங்களும்

ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர்

अर्पणं दीक्षितेन्द्रस्य नीलकण्टस्य शासनम् ।
उभे ते भावयन्नित्यं चन्द्रचूडं भजाम्यहम् ।। १ ।।
वन्देऽहं कुलकूटस्थं भरद्वाजं महामुनिम् ।
विद्याकल्पद्रुमं वन्दे श्रीमदप्पयदीक्षितम् ।। २ ।।
अवतारः पराशक्त्या इत्याहुर्यं मनीषिणः ।
नीलकण्ठमखीन्द्रं तं यतिवर्यं नमाम्यहम् ।। ३ ।।

श्रीशारदाम्बां द्रुहिणस्य पत्नीमभ्यर्चयन्तं प्रणिधाननिष्ठम्।
लोकस्य तापं सकलं हरन्तं श्रीदेशिकेन्द्रं शिरसा नमामि ।।

ஸம்ஸ்க்ருத கவியுலகத்தில் ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் அவர்களுக்கு ஒரு உயர்ந்த ஸ்தானம் உண்டு. அவர் செய்திருக்கும் கவிகளின் சிறப்பையும் வகைகளையும் நோக்குமிடத்து அவரை ஒரு மஹாகவியென்று தயக்கமின்றிச் சொல்லலாம். ஆனால் பிற்கால ஸம்ஸ்க்ருத இலக்கியத்தில் ஏற்பட்ட ஆர்வக் குறைவினாலும், தேசத்தின் தென் கோடியில் அவர் தோன்றியதாலும், அவருடைய

மேதை கணிசமான முறையில் அறியப்படவில்லை என்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஏன்? அவர் பெயரை அறியாத ஸம்ஸ்க்ருத அபிமானிகளே இல்லைஎன்று சொல்லக்கூடிய நம் தென்னாட்டிலேயே அவருடைய நூல்களை முற்றிலும் படித்தவர்கள் சிலரே. அவருடைய ஹாஸ்ய, நீதி, தத்துவமொழி கள் சிலவற்றை பிரசங்க மேடை உபயோகத்திற் காக கற்பதோடு தீக்ஷிதரிடம் உள்ள பரிசயம் நின்று விடுகிறது. ஒரு சிறந்த கவி என்ற ரீதியில் அவரை யும் அவருடைய நூல்களையும் நாம் தெரிந்துகொள் வது மிகவும் அவசியம்.

நம்மில் பெரும்பாலானவரிடையே ஸம்ஸ்க்ருத இலக்கியத்தைப் பற்றி ஒரு தப்பான அபிப்பிராயம் நிலவி வருகிறது. அதுவென்னவென்றால் ஸம்ஸ் க்ருத இலக்கியம் காளிதாசன் காலத்தில் மஹோன் னத நிலையை அடைந்து அவன் காலத்திற்குப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக க்ஷீணதசையை அடைந்து 12-வது நூற்றாண்டோடு ஸமாப்தியையும் அடைந்து விட்டது என்னும் ஸித்தாந்தமே. இது முற்றிலும் தவறு. ஸம்ஸ்க்ருத இலக்கியம் என்னும் நதி முழு வதும் வரண்டு போகவே யில்லை. அது மட்டுமன்று. இடை இடையே நல்ல கவிகள் தோன்றியபொழுது அது வெள்ளப் பெருக்கும் எடுத்திருக்கிறது.

தென்னிந்தியாவைப் பொருத்த மட்டில் 13-வது நூற்றாண்டு முதல் 17-வது நூற்றாண்டு முடிய உள்ள காலத்தில் ஸம்ஸ்க்ருதம் ஒரு சிறந்த மறு

மலர்ச்சியைப் பெற்றது. பல்வேறு துறைகளில் சிறந்த நூல்கள் ஆக்கப்பட்டன. ஸாயணரின் வேத பாஷ்யம், வித்யாரண்யர், தேசிகர், வித்யாதீர்த்தர், அப்பைய்ய தீக்ஷிதர் முதலியவர்களின் தத்துவ வேதாந்த நூல்கள், அன்னம்பட்டரின் தர்க்க ஸங்க்ரஹம், அப்பைய்ய தீக்ஷிதர், ஜகன்னாதர் இவர்களின் அலங்கார நூல்கள், கோவிந்த தீக்ஷிதர், வேங்கடமகி இவர்களின் ஸங்கீத நூல்கள் இவையெல்லாம் இக்காலத்தில் தோன்றியவைகளே. முக்கியமாக தனி இலக்கியம் என்று சொல்லக்கூடிய நூல்கள் நூற்றுக்கணக்கில் எழுதப்பட்டன. அவைகளில் ஒரு சிலவாவது ஸம்ஸ்க்ருத இலக்கியத்தில் நிரந்தரமான இடம் பெறும் என்பதில் சந்தேகமில்லை.

இந்தக் காலத்தில் நம் கவனத்தைக் கவரும் ஒரு விஷயம் இருக்கிறது. அடையப்பலம் என்னும் கிராமத்தைச் சேர்ந்த ஒரு அந்தணர் குலத்தில் தலைமுறைதோறும் இடைவிடாது கவிகள் தோன்றி வந்தனர். இவர்களில் மிகப் பிரக்கியாதி அடைந்தவர்கள் ஸம்ஸ்க்ருத உலகம் நன்கறிந்த அப்பைய்ய தீக்ஷிதர் அவர்களும், நீலகண்டதீக்ஷிதர் அவர்களும். அபிமானிகள் இவர்களை முறையே பெரிய தீக்ஷிதர், சின்ன தீக்ஷிதர் என்றே சொல்லிக் குறிப்பிடுவார்கள். அப்பைய்ய தீக்ஷிதர் நூற்றுக்குமேற்பட்ட கிரந்தங்கள் இயற்றியுள்ளார். பெரிய அறிஞர். தர்க்கத்தில் நிகரற்று விளங்கியவர். தத்துவ வேதாந்த நூல்களாகிய பரிமளம், சிவார்க்கமணி தீபிகை, ஸித்தாந்த லேச ஸங்க்ரஹம், ந்யாய

ரக்ஷாமணி, சதுர்மத ஸார ஸங்கிரஹம்—அலங்கார நூல்களாகிய சித்ர மீமாம்ஸை குவலயாநந்தம் — அவருடைய கிரந்தங்களில் மிகப் பிரசித்தமானவை. நீலகண்டர் தம்முடைய ''வைராக்ய சதகம்'' என்னும் நூலில் தம் பெரிய பாட்டனரின் அறிவைக் கீழ்க்கண்டவாறு பாராட்டுகிருர்.

अतिगम्भीरमनाविलमक्षोभ्यमदृष्टपारमविलङ्घ्यम् ।
अविरलतरङ्गसंकुलमैक्षिषि विज्ञानसागरं महताम् ॥

—வைராக்ய சதகம் சு 81

(மிகவும் கம்பீரமானதும், கல்மஷமற்றதும், கலக்க முடியாததும், கரைகாண முடியாததும், கடக்க முடியாததும், ஓயாது அலைமோதுவதுமான பெரியோர்களின் அறிவுக் கடலை நான் கண்டிருக்கிறேன்.)

ஆனல் ஒரு கவியென்ற முறையில் பெரிய தீக்ஷிதரைவிட நீலகண்டதீக்ஷிதர் சிறந்தவர் என்றே சொல்லவேண்டும். பெரியவரின் செய்யுள் நூல்களில் பெருமுயற்சியும், நிரடான சைலியும் ஒருங்கே சேர்ந்து கவிதையின் காடின்யத்தை நமக்கு உணர்த்துகின்றன. ஆனல் நீலகண்டர் ஒரு பிறவிக்கவி. அவருடைய கவிதையில் எளிமை, இனிமை, நயம், அணி எல்லாம் இயற்கையாகவே அமைந்து வாசிப்போருக்கு ஆனந்தத்தைக் கொடுக்கின்றன.

இந்த சந்தர்ப்பத்தில், அக்காலத்திலிருந்த சூழ்நிலையை நாம் கொஞ்சம் கவனிப்பது நல்லது. 1565ம் வருஷம் தலைக்கோட்டை யுத்தத்தில் விஜய

நகர மன்னர் முறியடிக்கப்பட்டார். அதுவரை தென்னிந்தியா முழுதுமே விஜயநகர ஸாம்ராஜ்யத்தின் கீழிருந்தது. விஜயநகர மன்னர்கள் நல்ல கலை ஆர்வமுள்ளவர்கள். வித்வான்களைப் போற்றி ஆதரித்தார்கள். அதனால் அவர்கள் ஆட்சியில் கலை, வளர்ச்சியும் வளமும் பெற்று விளங்கியது. விஜய நகர ஸாம்ராஜ்யம் சிதைந்ததும் ஆங்காங்கே-வேலூர், பெனுகொண்டா, ஜிஞ்சி, தஞ்சாவூர், மதுரை-போன்ற நகரங்களிலுள்ள சிற்றரசர்கள் சுயேச்சையாய் விட்டனர். இச்சிற்றரசர்களும் கலைஞருக்கு நல்ல ஆதரவு காட்டினார்கள். வேலூர் சின்னபொம்ம நாயக்கர் அப்பைய்ய தீக்ஷிதரை ஆதரித்தார். தஞ்சாவூர் சேவப்ப நாயக்கரிடம் கோவிந்த தீக்ஷிதர் ஸேவை செய்தார். ரத்னகேட தீக்ஷிதர் ஜிஞ்சிஸம்ஸ்தானத்தில் வித்வானாக விளங்கினார். மதுரை திருமலை நாயக்கரிடம் நீலகண்ட தீக்ஷிதர் மந்திரியாக இருந்து பணியாற்றினார். இதனால் இந்த நாயக்க மன்னர்களின் ஸம்ஸ்க்ருத பணியை நாம் நன்கு அறிய முடியும்.

தலைமுறை தலைமுறையாக ஒரே குடும்பத்தினரிடையே கவிகள் தோன்றுவது என்பது அதிசயமே. நமக்குத் தெரிந்த மட்டில் நீலகண்ட தீக்ஷிதரின் பாட்டனாருடைய பாட்டனாரின் காலத்திலிருந்து ஒவ்வொரு தலைமுறையிலும் சிறந்த கவிகள் தோன்றினர். நீலகண்டரின் பாட்டனாருடைய பாட்டனாராகிய ஆச்சாரிய தீக்ஷிதரை,

तस्य किल कृष्णराजवन्दितचरणारविन्दस्य भरद्वाजकुलचडामणेः

என்று நள சரித்திர நாடகத்தின் பிரஸ்தாவனையில் குறிப்பிட்டிருக்கிறது. ஒரு சமயம் விஜயநகர மன்னராகிய கிருஷ்ணதேவராயர், காஞ்சீபுரம் வரதராஜ பெருமாளை தரிசனம் செய்ய வந்த பொழுது அக் காலத்தில் மிகுந்த கியாதியுடன் விளங்கிய ஆச்சாரிய தீக்ஷிதரை ஒரு சுலோகம் கவனம் செய்யும்படி வேண்டிக் கொண்டார். உடனே அவர்

काञ्चित् काञ्चनगौराङ्गीं वीक्ष्य साक्षादिव श्रियम् ।
वरदः संशयापन्नो वक्षस्स्थलमवेक्षते ॥

என்னும் சுலோகத்தைச் சொன்னார். "தன் முன் ஸர்வாபரண பூஷிதையாய் ஸாக்ஷாத் லக்ஷ்மிதேவியைப்போல் வந்து நிற்கும் ஒரு அழகிய பெண்மணியைக் (கிருஷ்ணதேவராயரின் மஹிஷியை) கண்டதும் வரதப்பெருமான் ஸந்தேஹம் கொண்டவராய் தனது மார்பு பாகத்தை பார்த்துக் கொண்டார்" என்பது சுலோகத்தின் பொருள். ஸ்ரீ லக்ஷ்மியே தனது மார்பை விட்டுச்சென்று எதிரில் நிற்கின்றாளோ என்று நினைத்தாராம். இந்த சுலோகம் செய்ததிலிருந்து ஆச்சாரிய தீக்ஷிதரை ஜனங்கள் வக்ஷஸ்ஸ்தல ஆசாரியர் என்று அழைக்கத் தொடங்கினர். ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதர் தம்முடைய சித்திர மீமாம்ஸையில் இந்த சுலோகத்தை 'ஸஸந்தேஹா'லங்காரத்திற்கு உதாஹரணமாய்க் காட்டியிருக்கிறார்.

ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதரின் தகப்பனாராகிய ஸ்ரீ ரங்கராஜாத்வரீ

अद्वैतविद्यामुकुरविवरणदर्पणाद्यनेकप्रबन्धनिर्माता
शीलित एव **श्रीरङ्गराजाध्वरी ।**

என்று நீலகண்டரால் நள சரித்திரத்தில் சிலாகிக்கப் படுகிருர். நீலகண்டருடைய பெரிய பாட்டனுராகிய ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதரையோ ஸம்ஸ்க்ருத உலகம் நன்கு அறியும். அத்வைதத்திலும் சைவ, விசிஷ் டாத்வைத மத ஸித்தாந்தங்களிலும் ஒரு பெரிய ஸ்தானத்தைப் பெற்றவர். நூற்றுக்கு மேற்பட்ட நூல்கள் இயற்றியுள்ளார். அவருடைய காலத்தில் அவருக்கு நிகராக ஒரு வித்வானும் இருந்ததாகத் தெரியவில்லை. ஸ்ரீ நீலகண்டர் அனேகமாய்த் தம் முடைய எல்லா நூல்களிலும் பெரியவரைப் புகழ்ந்து பேசுகிருர். கங்காவதரணத்திலிருந்து சில சுலோ கங்களை இங்கு எடுத்துக்காட்டுவோம்.

मुनिरस्ति भरद्वाजः ख्यातस्त्रिभुवनेष्वपि ।
अन्नैर्यस्य जहौ रामोऽप्यरण्यभ्रमणश्रमम् ।।
तस्यान्वये महत्यासीत्क्षीरोद इव चन्द्रमाः ।
श्रीकण्ठचरणासक्तः श्रीमानप्पयदीक्षितः ॥
श्रीकण्ठदेशिकग्रन्थसिद्धान्तोद्योतचन्द्रिका ।
श्रीमती निर्मिता येन शिवार्कमणिदीपिका ।।
अमोषणीयैरक्षय्यैरमूल्यैरमलीमसैः ।
यत्प्रबन्धैः शतेनैव भारती परिकर्मिता ।।

यं विद्म इति यद्ग्रन्थानभ्यस्यामोऽखिलानिति ।
यस्य शिष्याः स्म इति च श्लाघन्ते स्वं विपश्चितः॥

—கங்காவதரணம் ஸ. 1—சு. 38, 39, 42, 44, 45

ஸ்ரீ நீலகண்டர் தம் பாட்டனரும் ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதரின் தம்பியுமாகிய ஸ்ரீ ஆச்சா தீக்ஷிதரையும்

तत्समानप्रभावस्य तदनु जन्मनः

என்று கங்காவதரணத்தில் குறிப்பிடுகிருர். இவரை குறித்து குருராம கவியென்பவர் செய்திருக்கும் ஒரு செய்யுளையும் இங்கு கொடுக்கிருேம்.

शब्दब्रह्म जगाहुषी जगृहुषी वैशेषिकं साहुषी
तर्कोन्मर्दमुपेयुषी श्रुतिशिखां भाट्टे पदं दाशुषी ।
साङ्ख्यार्थानधिजग्मुषी विविदुषी साहित्यमर्माखिलं
कस्मिन्नस्य हि शेमुषी नृपसभे नापूपुषद्वैदुषीम् ॥

—நள சரித்திரம் அ. 1, சு. 8

ஸ்ரீ நீலகண்டரின் தகப்பஞராகிய நாராயணத்வரீயும் சிறந்த வித்வாஞக விளங்கினுர்.

'साहित्यरत्नाकरमहावीरचरितादिप्रबन्धव्याख्यातुः कविलोकचूडामणेरम्बिकापुरुषावतारस्य तत्रभवतो नारायणाध्वरिणः...'

என்று நள சரித்திரத்தின் பிரஸ்தாவனையில் ஸ்ரீ நீலகண்டர் கூறுகிறார். அவர் மேலும்

नारायणाध्वरीन्द्राय नमोऽस्तु ज्ञानसिन्धवे ।
शारदा यत्कटाक्षाणां साप्यवेतनकिंकरा ॥

—கங்காவதரணம் ஸ. 1, சு. 5:
நள சரிதம் அ. 1, சு. 10.

என்று தகப்பனாரை வினயத்துடன் வணங்குகிறார். ஸ்ரீ நீலகண்டரின் தம்பியாகிய அதிராத்ர யஜ்வா என்பவரும் நல்ல கவியாக விளங்கினார்.

'नीलकण्ठमखीन्द्रस्यानुजन्मा कुशकुमुद्वतीयनाटकस्य प्रबन्द्धा प्रतिरघुवंशादिकर्ता चित्रमीमांसादोषधिक्कारस्य कवयिता अतिरात्रयज्वा'

என்று டி. எஸ். குப்புசாமி சாஸ்திரிகள் சிவலீலார்ணவத்திற்கு எழுதியிருக்கும் முன்னுரையில் கண்டிருக்கிறது. கடைசியாக ஸ்ரீ நீலகண்டரின் மூன்றாவது புதல்வராகிய கீர்வாணேந்திரர் **शृङ्गारकोशः** என்று ஒரு *பாணம் இயற்றியிருக்கிறார். அதில் கீழ்க் கண்டவாறு தன்னைக் குறிப்பிட்டுக் கொள்கிறார்.

तस्य भरद्वाजकुलजलधिकौस्तुभस्य कैयटव्याख्यानशिवतत्त्वरहस्याद्यनेकप्रबन्धनिर्मातुरद्वैतविद्यागुरोर्भगवत्याः परदेवताया एव पुरुषावतारस्य पवित्रकीर्तेर्नीलकण्ठमखिनस्तृतीयनन्दनेन तदीयचरणारविन्दपरिचरणलब्धनिःखल-

---

*திருச்யகாவ்யம் பத்து விதம். அதில் பாணமென்பதும் ஒன்று.

विद्येन तत्पुत्रतानुगुणसाहितीकेनाभिनिर्वर्तितः शृङ्गार-कोशो नाम भाणः ।

இப்பேற்பட்ட மஹா வம்சத்தில் தோன்றிய ஸ்ரீ நீலகண்டர் சிறந்த கவியாக விளங்கினார் என்பதில் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவருடைய வம்சத்தவருக்கு शारदा अवेतनकिंकरा—வாக்தேவி கூலியில்லா வேலைக்காரியாகவே இருந்து வந்தாள் என்று நிச்சயமாய் விளங்குகிறது.

ஸ்ரீ நீலகண்டரின் ஜீவிய சரித்திர வரலாறு பற்றி சந்தேகத்திற்கு இடமில்லாததும் முற்றிலும் நம்பத்தகுந்ததுமான குறிப்புக்கள் கிடைக்கவில்லை. இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. தேசத்தில் நிகழ்ந்த முக்கிய சம்பவங்களைக் குறித்தோ அல்லது தேசத்தில் தோன்றிய பெரியோர்களின் வாழ்க்கை வரலாற்றையோ பிற்காலத்தவர்கள் அறிந்து கொள்ளும் முறையில் சரித்திரப் புஸ்தகங்கள் எழுதும் பழக்கம் நம்மிடையே சற்றும் கிடையாது. இதன் விளைவாக ஆராய்ச்சித் துறையிலீடுபட்டவர்கள் கர்ண பரம்பரையாய் வழங்கி வரும் சில கதைகளைக் கொண்டே தங்கள் பணியைச்செய்ய வேண்டியிருக்கிறது. கதைகளில் அனேகமாய் உண்மையை மறைக்கும் சரக்குகள் நிறைய இருப்பதால் உண்மையை சிரமத்துடனேயே கண்டுகொள்ள முடியும். அதிருஷ்ட வசமாக ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரின் சரித்திரத்தைப் பற்றிய சில தகவல்கள் அவருடைய நூல்களிலும், அவருடைய சிஷ்யர்களின் நூல்களிலும் கிடைக்கின்றன.

சுமார் 1582ம் வருஷத்தில் அடையப்பலம் என்னும் கிராமத்தில் நாராயணுத்வரீ என்னும் அந்தணருக்கும் அவருடைய மனைவி பூமிதேவீ என்பவருக்கும் இரண்டாவது புத்திரராக ஸ்ரீ நீலகண்டர் பிறந்தார். இவருக்கு சகோதரர் நால்வர்.

जयन्ति तनयास्तस्य पञ्च सौभ्रात्रशालिनः ।
गर्भदासा महेशस्य कवयश्च विपश्चितः ॥
तेषामहं द्वितीयोऽस्मि भूमिदेवीतनूभुवाम् ।
नीलकण्ठ इति ख्यातिं नीतः शंभोः प्रसादतः ॥

—கங்காவதரணம் ஸ. 1-சு. 49, 50.

சிறு வயதிலேயே தம்முடைய பாட்டனுரையும், தகப்பனுரையும் இழந்து விட்டபடியால், இவரையும், இவர் தாயார், சகோதரர்களையும் ஸம்ரக்ஷணை செய்ய வேண்டிய பொறுப்பை ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதர் வகிக்க நேர்ந்தது. பெரியவரைப்பற்றி ஸ்ரீ நீலகண்டர் தம்முடைய நூல்களில் குறிப்பிட்டிருக்கும் முறையிலிருந்து அவர் தம் பெரிய பாட்டனுரால் அன்புடனும் ஆதரவுடனும் வளர்க்கப்பட்டார் என்று அறிகிறோம். தவிர, அவருடைய அளவிட முடியாத அறிவாற்றல் தானும் தன் பாட்டனுரைப் போல் புகழுடன் விளங்க வேண்டும் என் னும் அவாவையும் அந்தச் சிறுவனுக்கு உண்டாக்கியது

பெரியவரும் தம் பேரனிடம் மிகுந்த அன்பு காட்டியது டன் அவனுடைய இயற்கை மேதையைக் கண்டு அவனிடம் விசேஷ சிரத்தையும் காட்டினுர்.

ஸ்ரீ நீலகண்டருடைய பன்னிரண்டாவது வயதில் அப்பைய்ய தீக்ஷிதர் தம் குடும்பத்தாருடன் சிதம்பரத்திற்குச் சென்ருர். தம் அந்திய காலத்தை தில்லையில் கழிக்க வேண்டும் என்பதே பெரிய தீக்ஷிதரின் விருப்பம். அங்கு சென்ற சில காலத்திற்குள் அவர் காலகதியை அடைந்திருக்க வேண்டும் என்று நினைக்க இடமிருக்கிறது.

இவ்விடத்தில் நிகழ்ந்த ஒரு உருக்கமான சம்பவத்தை கர்ணபரம்பரை நமக்குத் தருகிறது. பிதுரார்ஜித சொத்தை பாகம் பண்ணும் விஷயத்தில் ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதர் அவர்களுக்கும் அவருடைய புத்திரர்களுக்கும் சிறிது அபிப்பிராய பேதம் இருந்து வந்தது. தம்முடைய தம்பியின் வாரிசுகளுக்கு நியாயம் செய்ய வேண்டுமென்பதே பெரியவரின் விருப்பம். அவ்வாறு செய்வதில் புத்திரர்கள் உடன் பாடாக இல்லை. இதனுல் மனத்தில் சற்று வேதனை யடைந்த ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதர் தம்முடைய பிரியத்திற்கு பாத்திரமாயிருந்த ஸ்ரீ நீலகண்டரை அழைத்துக் கீழ்க்கண்டவாறு வினவினுர்.

அப்பைய்ய தீக்ஷிதர்:—குழந்தாய்! எனது அந்திம காலம் நெருங்கி விட்டதை நான் உணர்

கிறேன். நான் இறந்த பின் உன்னையும் உன்னைச் சேர்ந்தவர்களையும் எவ்வாறு காப்பாற்றிக் கொள்ளப் போகிருயோ?'

நீலகண்டர்:—தாத்தா! நீங்களே அதற்கு ஏற்பாடு செய்து விட்டீர்களே! உங்களுடைய ஸந்ததியை மஹேசனிடம் ஒப்படைத்து விட்டீர்களே. அவர் எங்களை கைவிட்டு விடுவாரா? எங்களுக்கு என்ன கவலை? என்ருர்.

ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதர் இயற்றியிருக்கும் ஆத்மார்ப்பண ஸ்துதியில் தம்மையும், தம்மைச் சேர்ந்தோரையும் ஈசுவரனிடம் அடைக்கலம் செய்து கொள்கிருர்.

अद्यैव त्वत्पदनलिनयोरर्पयाम्यन्तरात्मन्
आत्मानं मे सह परिकरैरद्रिकन्याधिनाथ ।
नाहं बोद्धुं शिव तव पदं न क्रियायोगचर्याः
कर्तुं शक्नोम्यनितरगतिः केवलं त्वां प्रपद्ये ॥

ஆத்மார்ப்பண ஸ்துதி சு-15

இந்த சுலோகத்தை ஞாபகத்தில் வைத்துக் கொண்டுதான் ஸ்ரீ நீலகண்டர் பெரியவரிடம் மேற்கண்டவாறு பதிலளித்தார். இதே அபிப்ராயத்தை தாம் செய்திருக்கும் ஆனந்தஸாகர ஸ்தவத்திலும் வெளியிட்டிருக்கிருர்.

त्वय्यर्पितं प्रथममप्पययज्वनैव
स्वात्मार्पणं विदधता स्वकुलं समस्तम् ।

का त्वं महेशि कुलदासमुपेक्षितुं मां
को वानुपासितुमहं कुलदेवतां त्वाम् ।।

—ஆனந்தஸாகரஸ்தவம் சு. 43

பன்னிரண்டு வயதே அடைந்திருந்த அந்தச் சிறுவனின் தேவதா விசுவாசத்தைக் கண்டு பெரியவர் மனமகிழ்ந்தார். அடுத்தபடியாக சொத்துப் பிரிவினை விஷயத்தை பிரஸ்தாபித்தார். சிறுவன் தயக்கமின்றி பதிலுரைத்தான். ''என் அன்பிற்கும் மதிப்பிர்கும் உரியவர்களே! எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் எனக்குப் பிதா, போஷகர், குரு எல்லாம் தாங்களே. தங்களுடன் இருந்த பாக்கியத்தினுல், தேவர்களுச்கும் கிடைக்க அரிதாகிய ஒரு அதிர்ஷ்டம் எனக்குக்கிடைத்திருக்கிறது நான் இப்பொழுது வேண்டுவதெல்லாம் தங்களுடைய பரிபூர்ண ஆசியே!'' இவ்வாறு சொல்லியவாறே பெரியவரின் அடிபணிந்தான் அச்சிறுவன். அவனை வாரியெடுத்து அணைத்துக் கொண்டு அப்பைய்ய தீக்ஷிதர், ''என் கண்ணே! என்னுடைய மனமுவந்த ஆசிகள் உனக்கு உரித்தாகுக! உலகத்திலுள்ள பணமெல்லாம் கொடுத்தாலும் கிடைப்பதற்கரிதாகிய ஒரு வஸ்துவை நான் உனக்கு அளிக்கிறேன்! இதோ நான் பூஜை செய்து வரும் பஞ்சலிங்கங்கள் இருக்கின்றன. இனி இவைகளை நீயே வைத்துப் பூஜை செய்துவா. தவிர இதோ இரு ஓலைச்சுவடிகள். என் கையால் எழுதியவைகள்—தேவீ மாஹாத்ம்யமும், ரகுவம்சமும்—இவைகளையும் உனக்கே கொடுக்கின்றேன். நீ பிற்காலத்தில்

நல்ல கீர்த்தியுடன் வாழ்வாய்'', என்ருர். நீல கண்டர் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார்.

பெரிய பாட்டனுர் காலமான பின்பு, ஸ்ரீ நீல கண்டர் தெற்கே தஞ்சாவூர் நோக்கிச் சென்றிருக்க வேண்டும். அக்காலத்தில் காவேரிப் பிராந்தியத் தில், அதுவும் தஞ்சாவூர் ஸம்ஸ்தானத்தில்-சிறந்த ஸம்ஸ்க்கிருத பண்டிதர்களும், கவிகளும் வாழ்ந்து வந்தனர். தம்முடைய படிப்பை ஸ்ரீ நீலகண்டர் இங்குதான் விருத்தி செய்து கொண்டார். ஸ்ரீ வேங்கடேச்வரமகீ என்னும் பெரியாரைத் தமது குருவென்று ஸ்ரீ நீலகண்டர் குறிப்பிடுகிருர்.

वार्तिकाभरणग्रन्थनिर्माणव्यक्तनैपुणः ।
श्रीवेङ्कटेश्वरमखी शिष्ये मय्यनुकम्पते ॥

கங்காவதரணம் ஸ. 1, சு. 51.

இவர் ஸ்ரீகோவிந்த தீக்ஷிதரின் குமாரர். வார்த்திகாபரணம், சதுர்த்தண்டிப் பிரகாசிகா ஆகிய நூல்களை ஆக்கியவர்.

ஸ்ரீ நீலகண்டருக்கு ஸ்ரீ வித்யா உபதேசம் செய்தவர் ஸ்ரீ கீர்வாணயோகீந்திரர் என்றும் தெரி கிறது.

अर्धं तनोरद्रिसुतामयोऽस्मी-
त्यहंयुना किं फलमादियूना ।
गीर्वाणयोगीन्द्रमुपास्महे तं
सर्वात्मना शैलसुतात्मको यः ॥

—சிவலீலார்ணவம் ஸ. 1, சு. 5

இவரைப் புகழ்ந்து குருராஜஸ்தவம் என்னும் நூலை ஸ்ரீ நீலகண்டர் செய்திருக்கிறார்.

அடுத்த படியாக ஸ்ரீ நீலகண்டர் மதுரை மாநகரம் சேர்ந்தார். நாள்தோறும் இரவில் ஸ்ரீ மீனாக்ஷியம்மன் கோவில் பொற்றாமரைக் குளக்கரையில் அவர் தேவீ மாஹாத்ம்யத்தை பிரவசனம் செய்வது வழக்கம். அவருடைய வாக்விலாஸத்தினால் ஏராளமான கூட்டம் அங்கு வர ஆரம்பித்தது சீக்கிரமே அவருடைய புகழ் மதுரை மன்னன் திருமலை நாயக்கரின் காதிற்கு எட்டியது. அரசன் அவரைத் தன் ஸபைக்கு அழைத்து, ஸமஸ்தான வித்வானாகவும் நியமனம் செய்தான். அதன் பிறகு அவருடைய உத்தியோக வாழ்க்கையைப்பற்றித் தெளிவான விபரங்கள் இல்லை. இருந்தாலும் வடக்கேயிருந்து வந்த இந்த அன்னியர் வெகு சீக்கிரத்திலேயே நாயக்கரின் மந்திரியாக இருக்கும் உயர் நிலையை அடைந்தாரென்பதே அவருடைய அறிவுக்கும் ஆற்றலுக்கும் சான்றாகும். தம்முடைய ஸௌபாக்ய தசையில் ஸ்ரீ நீலகண்டர் தம்முடைய பெரிய பாட்டனாரின் ஆசீர்வாதத்தை நினைந்து மகிழ்ந்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை. நமக்கும் பவபூதியின் அழகான சுலோகம் ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது.

आविर्भूतज्योतिषां ब्राह्मणानां
ये व्याहारास्तेषु मा संशयोऽभूत् ।

भद्रा ह्येषां वाचि लक्ष्मीर्निषक्ता
नैते वाचं विप्लुतार्थां वदन्ति ॥

—உத்தரராம சரிதம் அ. 4, சு 18.

(தேஜஸ்விகளான பிராம்மணர்களின் வார்த்தைகளில் அவநம்பிக்கை உண்டாகாமலிருக்கட்டும். ஏனென்றால் அவர்களுடைய மொழிகளில் மங்களகரமான லக்ஷ்மியின் கடாக்ஷம் இருக்கின்றது. அவர்கள் பொய்க்கும் மொழி பேசவே மாட்டார்கள்)

அவர் மந்திரியாயிருந்த காலத்தில் நாடு நல்ல சுபிக்ஷமாயும், ஜனங்கள் சந்தோஷமாயுமிருந்ததாக தெரிகிறது. மிகப்பிரசித்தி பெற்ற புதுமண்டபம் இவர் காலத்தில்தான் கட்டப்பட்டது. டெய்லர் துரை மொழி பெயர்த்திருக்கும்-'ஓரியண்டல் ஹிஸ்டாரிகல் மானுஸ்கிரிப்ட்ஸில்' மண்டப நிர்மாணத்தின் போது நடந்த ஒரு சர்ச்சையைப்பற்றி ஒரு ரஸமான குறிப்பு இருக்கிறது. ஏகபாத மூர்த்தியின் சிலையைத் தாங்கிய தூணை மண்டபத்தில் அமைப்பது விஷயமாக சைவர்களுக்கும் வைஷ்ணவர்களுக்கும் இடையே விவாதம் நடந்தது. ஏகபாத மூர்த்தியில் விஷ்ணுவும் பிரம்மாவும் சிவனுடைய அம்சங்களாகக் காட்டப்பட்டிருக்கின்றனர். இந்த விவாதத்தில் சைவர்களுக்குத் தலைவராக ஸ்ரீ நீலகண்டர் வாதம் புரிந்து வெற்றியுமடைந்தார். ஏகபாத மூர்த்தியைத் தாங்கிய தூண் மண்டபத்தில் இடம் பெற்றது.

(See Appendix I)

ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் கோவிலின் திருப்பணியையும் ஸ்ரீ நீலகண்டர் விஸ்தாரமாகச் செய்தார். முக்கியமாக தேவதா பிரதிஷ்டை, கோவில் பூஜாவிதிகள், உத்ஸவங்கள் முதலிய விஷயங்களில் ஸ்தல புராணங்கள், ஆகம சாஸ்திரம், ஹாலாஸ்ய மாஹாத்ம்யம் இவைகளுக்கிணங்க ஏற்பாடு செய்தார்.

வயது ஆக ஆக ஸ்ரீ நீலகண்டருக்கு அரச சபையில் ஸேவை செய்வதில் அலுப்புத்தட்ட ஆரம்பித்தது. படிப்பினாலும், பண்பினாலும் ஆத்மீக வாழ்க்கையிலேயே அவருக்கு மனநாட்டமிருந்தது. ஆனால் சந்தர்ப்ப விசேஷத்தால் அவர் வாழ்க்கை வேறு பாதையில் சென்றது. திருமலை நாயக்கரின் முதன் மந்திரியாய் அவர் பணியாற்றிய காலத்திலும் கூட தர்ம வாழ்க்கையிலும் மதப்பிரசாரத்திலுமே அவர் உள்ளம் ஈடுபட்டது. நாளடைவில் இம்மாதிரி லௌகிக வாழ்க்கையில் அலுப்புத்தட்டியது. ஆத்மீக வாழ்க்கையை நாடி நிற்கும் ஒரு அந்தணருக்கும், பிடிவாதமும் ராஜஸ தாமஸ குணங்களும் மேலோங்கிய ஒரு அரசனுக்கும் விசேஷமாய் ஒற்றுமை கொஞ்சமும் இல்லை. ஸ்ரீ நீலகண்டர் சாஸ்திரங்களை பால்யத்திலேயே நன்கு பயின்றார். லௌகிக வாழ்க்கையில் மகத்தான வெற்றியையும் கண்டார். ஆனால் அவருடைய கவிதா உள்ளம் நிம்மதியைப் பெறவில்லை. ஸௌபாக்கியம் அவர் தலைக்கேறவில்லை. தம்முடைய யஜமானரைப்பற்றி ஸ்துதி பாட வேண்டும் என்னும் எண்ணம் அவருக்கு ஒருபொழுதும் உண்டாகவில்லை.

वर्णयन्ति नराभासान्वाणीं लब्ध्वापि ये नराः ।
लब्ध्वापि कामधेनुं ते लाङ्गले विनियुञ्जते ॥

—கலிவிடம்பனம் சு. 38

என்று சொன்ன அவர் அவ்வாறு செய்யமுடியாது அல்லவா!

உண்மையில் தம்முடைய வாழ்க்கையில் ஒரு அங்கலாய்ப்பும், மிகுந்த பிரயாசைப்பட்டுத் தாம் பெற்ற சாஸ்திர ஞானத்தை தவருன வழியில் பிரயோஜனப் படுத்திவிட்டோமே என்ற வருத்தமுமே அவருடைய கவிகளில் தொனிக்கின்றன.

आ कौमाराद्गुरुचरणशुश्रूषया ब्रह्मविद्या-
स्वास्थायास्थामहह महतीमार्जितं कौशलं यत् ।
निद्राहेतोर्निशि निशि कथाः शृण्वतां पार्थिवानां
कालक्षेपौपयिकमिदमप्याः कथं पर्यणंसीत् ॥

—சாந்திவிலாஸம் சு. 8

(சிறு வயதிலிருந்து ஆசார்யனுக்குப் பணிவிடை செய்து எல்லேமீறிய ஆவலுடன் பாடுபட்டுத் திரட்டிய வேதாந்த சாஸ்திரத்திலுண்டான ஒரு திறன் முடிவில் இரவுதோறும் தூக்கம் வரும் பொருட்டுக் கதைகளேக் கேட்கும் அரசர்களின் பொழுது போக்கிற்கு உபாயமாகவல்லவா முடிந்தது! அந்தோ பரிதாபம்!)

இப்படிப்பட்ட உணர்ச்சி ஏற்பட்டபின் அரசனிடம் பணி செய்வது முடியாதாயிற்று. ஆதலால் திருநெல்வேலிக்கு அருகாமையிலுள்ள பாலாமடை என்னும் கிராமத்திற்கு வந்து ஓய்வு பெற்ருர். நிம்மதியான இக்கிராமத்தில் தம் கடைசிக் காலத்தை சாந்தியுடன் கழித்து முடிவில் ஸன்யாஸத்தை மேற்கொண்டு நிர்வாணத்தையும அடைந்தார். கிராமக் கோவிலின் பிராகாரத்திலுள்ள இவருடைய ஸமாதியின் மேல் ஒரு சிறு கோவில் அமைக்கப்பெற்று அங்கு ஸ்ரீ விச்வநாதர், விசாலாக்ஷி விக்ரஹங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. பாலாமடைக்கு நீலகண்டசமுத்திரம் என்ற பெயருமுண்டு. கிராமத்தில் பெரும்பாலானவர் இவருடைய வம்சத்தவரே.

ஸ்ரீ நீலகண்டர் இயற்றிய நூல்கள்

ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதருடைய பெரிய பாட்டனர் விஷயத்தில் ஏற்பட்டது போல் இவர் இயற்றிய நூல்களிலும் பல மறைந்துவிட்டன. இப்பொழுது நமக்குத் தெரிந்த விபரப்படி கீழ்க்கண்ட நூல்கள் அவருடையன என்று சொல்லலாம். 1. முகுந்த விலாஸம் 2. ரகுவீரஸ்தவம், 3. சண்டீரஹஸ்யம். 4. சிவோத்கர்ஷ மஞ்ஜரி. 5. நளசரித்திர நாடகம். 6. குருராஜஸ்தவம் 7. கங்காவதரணம் 8. அன்யா பதேச சதகம் 9. நீலகண்ட விஜய சம்பூ. 10. கையட வியாக்கியானம். 11. கலி விடம்பனம் 12. ஸபா ரஞ்ஜன சதகம். 13. வைராக்ய சதகம். 14. சாந்தி விலாஸம். 15. ஆனந்த ஸாகரஸ்தவம். 16. சிவ லீலார்ணவம். 17. சிவதத்வ ரஹஸ்யம்.

மேற்குறித்த நூல்களை கவனத்துடன் ஆராய்ந் தால், கவியின் மேதை எவ்விதம் படிப்படியாக வளர்ந்து வந்தது என்பதை ஊகிக்க முடியும். அத் துடன் எந்தக் கிராமத்தில் அந்நூல்களை அவர் வரைந்திருப்பார் என்பதையும் ஓரளவு நிர்ணயிக் கலாம். செய்யுட்களின் நடையிலிருந்தும் அவை களில் பிரதிபலிக்கும் மனோ நிலையிலிருந்தும் நாம் இதைச்செய்ய முடியும்.

கவிகள் பலர் தோன்றிய ஒரு வம்சத்தில் பிறந்த ஸ்ரீ நீலகண்டருக்கு கவி செய்வதில் ருசி இயற்கை

யில் எதிர்பார்க்கக் கூடியதே. மேலும் அப்பைய்ய தீக்ஷிதரின் கண்காணிப்பில் வளர்ந்த அவருக்கு தம் பாட்டனாரைப்போல் தாமும் கவி பாடவேண்டும் என்ற ஆசையும் சேர்ந்தது. ஆகவே சாஸ்திரப் பயிற்சி மற்றும் இதரப் படிப்புக்கள் முற்றுப் பெற்றதும் அவர் கவி செய்யத் தொடங்கினார். **गर्भदासो महेशस्य** என்று அவர் தம்மை குறிப்பிட்டிருக்கிறார். பரம சைவராகிய அப்பைய்ய தீக்ஷிதரின் பராமரிப்பில் வளர்ந்தவர். ஆதலால் சிவபரமாகவே முதலில் பாடத்தொடங்கியிருக்க வேண்டும். சிவோத்கர்ஷ மஞ்ஜரி என்னும் நூலே அவருடைய முதல் காவ்யம் என்று தோன்றுகிறது. நடையின் போக்கும் புராண இதிகாசங்களிலிருந்து ஏராளமான குறிப்புக்களும் இருப்பதும் புதிதாய்ப் படிப்பை முடித்தவரின் நூல் என்பதை உணர்த்துகின்றன. இந்த ஸ்துதி சார்தூல விக்ரீடிதம் என்னும் விருத்தத்தில் 52 சுலோகங்களால் அமைந்தது. ஒவ்வொரு செய்யுளும்

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ।

என்னும் மகுடத்துடன் முடிவடைகிறது. சுலோகங்களின் நடை எளியதாயிருந்தபோதிலும், பிரயாசையுடன் செய்தது என்பது தெரிகிறது. சிவ அஷ்டோத்தர மந்திரங்களுக்கு வியாக்கியானமாயமைந்த சிவதத்வ ரஹஸ்யமும்*கையட வியாக்கியானமும் இதே காலத்தில் செய்யப்பட்டிருக்கலாம்.

---

*இது இதுவரை கிடைக்கவில்லை.

ரகுவீர ஸ்தவம் என்னும் சிறிய நூலும்-வஸந்த திலக விருத்தத்தில் 32 செய்யுட்களுடையது-சண்டீ ரஹஸ்யமும்-இதுவும் வஸந்த திலக விருத்தத்தில் 36 செய்யுட்களாலாக்கப்பட்டது-ஸ்ரீ நீலகண்டருடைய ஆரம்பக் காவ்யங்களே. முதல் நூல் ஸ்ரீமத் ராமாயணத்தின் ஸாரத்தையும், இரண்டாவது நூல் ஸர்வ சக்தி வாய்ந்த சண்டிகையின் மஹிமையையும் விளக்குகின்றன. அழகிய செய்யுட்கள்-முக்கியமாக சண்டீரஹஸ்யத்தில் சில இருக்கின்றன. என்றாலும்-பால்ய தசையில் சற்று முயற்சியுடன் செய்யப்பட்டவை என்றே தோன்றுகின்றன. இங்கும் புராண இதிகாசங்களில் அவருக்கிருந்த ஒரு அபாரமான தேர்ச்சி நன்கு விளங்குகின்றது. ஸ்ரீகீர்வாண யோகீந்திரரைப் போற்றிப் பாடிய குருராஜ ஸ்தவமும் இந்தக் காலத்திலேயே செய்யப்பட்டிருக்க வேண்டும். இந்த நூல் முடிவு வரை எழுதப்படவில்லை. பாதியிலேயே நின்றுவிடுகிறது.

ஸ்துதிகள் இயற்றிக்கொண்டிருந்தால் மட்டும் போதுமா? கவிதா உலகத்தில் கீர்த்தி உண்டாக வேண்டுமானால் மஹா காவ்யங்கள் நாடகங்கள் முதலியவைகளைச் செய்வது அவசியமல்லவா? தவிர, லௌகிக வாழ்க்கையையும் ஸௌகரியமாய் நடத்துவதற்கும் அவைகளை எழுதுவதால் பயன் கிடைக்கும். ஆகையால் அவருடைய அடுத்த முயற்சிகள் மஹாகாவ்யம், நாடகம் இவைகளின் ஆக்கத்தில் திருப்பப்பட்டன. முகுந்த விலாஸம், நள சரித்திர

நாடகம், கங்காவதரணம் இவை மூன்றும் ஒன்றன் பின் ஒன்ருக எழுதப்பட்டன. முகுந்த விலாஸம் என்னும் காவ்யம் இதுவரை பிரசுரமாகவில்லை. ஏட்டுப் பிரதி ரூபமாக அடையாறு லைப்ரரியில் இருப்பதாகத் தெரிகிறது. நள சரித்திர நாடகத்தின் பிரஸ்தாவனையில்

अयं तु मुकुन्दविलासस्य काव्यस्य निबद्धा ।

என்னும் ஸூத்ரதாரனின் வாக்யத்திலிருந்து முகுந்த விலாஸம் நள சரித்திரத்திற்கு முற்பட்டது என்று அறிய முடிகிறது. நள சரித்திர நாடகமும், கங்காவதரணமும் கவி காவேரி பிராந்தியத்திலிருக்கும் பொழுது எழுதியது என்பது தெரிகிறது.

सति सह्य सुतातीरे सति त्रय्यन्तशीलने ।
गन्तुं निश्चितवानस्मि गङ्गां केनापि हेतुना ॥

கங்காவதரணம் ஸ. 1-54

''காவேரி தீரவாஸமும், வேதாந்த விசாரமும் (சிரேயஸ் ஸாதனமாக) கிடைத்திருந்தும் என்ன காரணத்தாலோ கங்கை செல்வதாக தீர்மானித்திருக்கிறேன்'' என்பது கங்காவதரணத்திலுள்ள சுலோகம், நளசரித்திர நாடகத்தின் பிரஸ்தாவனையில்

सूत्रधारः – अपि नाश्रूयन्त भगवतः काञ्चीपुरनाथस्य कामाक्षीपरिणयोत्सवयात्रागतानामाज्ञाक्षराणि सामाजिकानाम् ।

என்றிருப்பதால், இந்நாடகம் கவி காஞ்சீபுரத்திலிருக்கும் பொழுது எழுதப்பட்டிருக்க வேண்டு

மென்று சிலர் அபிப்பிராயப்படுகிருர்கள். ஆனல் இவை நாடகத்தை அரங்கத்தில் ஸமர்ப்பிப்பதற்காக உபசார முறையில் சொன்ன வார்த்தைகளாகத் தோன்றுகின்றனவே அல்லாது காஞ்சீபுரத்திற்கு அந்த ஸமயத்தில் ஸ்ரீ நீலகண்டர் சென்ருர் என்று தோன்றவில்லை. மேலும் நாடகத்திலுள்ள கீழ்க் கண்ட ஸம்பாஷணையைக் கவனிப்போம்.

पारिपार्श्वकः-कथमयं कविरन्तर्मुखस्त्वत्यन्तविचार-प्रवृत्तोऽपि करोति स्म नाटकेऽप्यभिरुचिम् ।

सूत्रधारः - यतोऽयमीदृशस्तत एवोक्तमत्रापि विषये तेनैव ।

कालं जेतुमुपायौ द्वौ कलिकल्मषसंप्लुतम् ।
कथा वा निषधेशस्य काशी वा विश्वपावनी ।।

—நளசரித்ரம் 1-11

பாரிபார்ச்விகன்:— வேதாந்த விசாரத்தில் மூழ்கியிருக்கும் இந்தக் கவி நாடகம் செய்வதில் எவ்வாறு ஆர்வத்தை அடைந்தார்?

ஸூத்ரதாரன்: — அது எவ்வாறு ஏற்பட்டது என்னும் விஷயத்தை அவரே சொல்லியிருக்கிருர், கேள்.

''கலியின் கொடுமைக்கு வசப்பட்ட இக் காலத்தை வெல்லுவதற்கு இரு உபாயங்கள் இருக்கின்றன. நளனுடைய கதையை சிரவணம் செய்வது ஒன்று. மற்ருென்று பூமியில் புனிதமாகிய காசியை அடைவது''

வேதாந்த விசாரம் செய்து கொண்டிருந்தார், காசியைப் பற்றிய நினைவுடனேயே இருந்தார் என்னும் இந்த விஷயங்களை, நாம் முன் கூறிய கங்காவதரண சுலோகத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். தவிர இரண்டு நூல்களிலும் ஏழு சுலோகங்கள்-மாறுதலின்றியோ அல்லது சிறு மாறுதல்களுடனே காணப்படுகின்றன. (See Appendix II) இரண்டு நூல்களிலும் கவியைப்பற்றி புகழ்ச்சி வாசகங்கள் நிறைய இருக்கின்றன. தற்காலத்தவருக்கு இம்மாதிரி தற்புகழ்ச்சி விரஸமாகப்படும். ஆனல் இது ஸம்ஸ்க்ருத ஸம்பிரதாயத்தில் அனுமதிக்கப்பட்டதே. பவபூதி போன்ற கவிகள்-ஏன் காளிதாஸன் கூட மாளவிகாக்னிமித்ரத்தில்-இதைக் கையாண்டிருக்கிறுர்கள். தவிர கவி புனைய ஆரம்பித்த ஒருவனுக்கு அதைப்பொதுஜனங்கள் கவனிக்க மாட்டார்களோ என்ற பயத்தினுல் தம்முடைய வம்ச பெருமையையும், அறிவின் விரிவையும் எடுத்துச் சொல்ல வேண்டுமென்கிற ஆசை ஏற்படுவது இயல்பே. எது எப்படியாயினும் நமக்கு இங்கு லக்ஷ்யம் நள சரித்திர நாடகத்திற்கும், கங்காவதரணத்திற்கும் உள்ள தொடர்பே. கங்காவதரணத்தைப்பற்றி நள சரித்திர நாடகத்தில் பிரஸ்தாபம் இல்லாததால் அது நாடகத்திற்கு பிற்பட்டது என்பது தெளிவாகிறது.

இப்பொழுது நமக்குக் கிடைத்திருக்கும் சுவடிகளில் நள சரித்திர நாடகம் முற்றிலும் கிடைக்கவில்லை. ஆருவது அங்கத்தின் மத்தியில் நாடகம்

நின்றுவிடுகிறது. நாடகத்திற்கு மூலம் மஹாபார தத்தில் வனபர்வத்திலுள்ள நளோபாக்கியானம் (49வது அத்தியாயம் முதல் 77வது அத்தியாயம் முடிய) மஹாபாரதத்தில் இந்தக் கதை வெகு அழ காகவும், கவி நயத்துடனும், உயர்ந்த கருணு ரஸத் துடனும் எழுதப்பட்டிருக்கிறது. அதன் எழில் எளிதில் கையாளப்படக் கூடியதல்ல. அதைத் தழுவி எழுதப்பட்டிருக்கும் காவ்யங்கள் மூலக்கதையின் அழகான காதல் சித்திரத்தைச் சிதைத்து கேவலம் காம சாஸ்திர விஸ்தார நூல்களாக அமைந்திருக் கின்றன. ஸ்ரீ நீலகண்டரைப் பொறுத்த மட்டில் இவ்விதக் குறைகளை நாம் காணவில்லை. நளன் தமயந்தி-இவர்களுடைய காதலை மிகவும் நயமாக வும் உணர்ச்சியுடனும் அவர் சித்தரித்திருக்கிறார். விசேஷமாக நள தமயந்தியின் பிரிவை சூசிப்பிக்கும் கடைசி இரண்டங்கங்களும் வெகு அழகாக அமைந் திருக்கின்றன. கருணு ரஸம் ததும்புகின்றது. அதனால்தான் நாடகம் முற்றுப்பெருமல் நின்று விட்டதோ என்னும் வருத்தம் நமக்கு ஏற்படுகிறது. நாடகத்தின் கதைச் சுருக்கம் கீழ்வருமாறு:-

நிஷத தேசத்து அரசனுன நளன் ஸ்வப்னத்தில் மிகச்சிறந்த அழகு வாய்ந்த ஒரு மங்கையைக்கண்டு அவள் பால் காதல் கொள்கிருன். அந்த நிமிடம் முதல் அவளையே நினைந்து உருகுகிருன். பின்னுல் விதூஷகன் யோஜனைக் கிணங்க தான் ஸ்வப்பனத் தில் கண்ட பெண்ணைப்போல் ஒரு சித்திரம் வரைந்து

ஜோதிஷ சாஸ்திர நிபுணரான ஸத்யாசாரியாரிடம் அப்படத்தைக் காண்பிக்க, அவர் ஸாமுத்ரிகா சாஸ்திர ரீதியாக அப்பெண் ஒரு அரசகுமாரி யென்றும் ஏழு த்வீபங்களுக்கும் அதிபதியான ஒரு மன்னனே அவளை மணப்பானென்றும் சொல்லுகிறுர். இது நளனைத்தான் குறிக்க முடியும். சோதிடர் விடை பெற்றுச் சென்றதும் ஸரஸ்வதி தேவியினுல் அனுப்பப்பட்ட ஒரு கடிதத்தை அவளுடைய ஹம்ஸம் நளனிடம் ஸமர்ப்பிக்கின்றது. அதில்,

निर्माय रत्नं किमपि त्रिलोकी-
लावण्यसारेण पितामहो वः ।
निर्माणवैफल्यभियादिशन्मां
भोक्तारमस्यानुगुणं वरीतुम् ॥

—நள சரித்ரம் I-45.

என்று ஸரஸ்வதி குறிப்பிடுகிருள்.

(மூன்று லோகத்திலுமுள்ள லாவண்யத்தை ஒருங்கே திரட்டி ஒரு பெண்மணியை சிருஷ்டி செய்து', அவளைப் படைத்தது பயனற்றுப் போய்விடுமோ என்ற பயத்தினுல், பிரமன் அவளுக்குத் தகுந்த கணவனை தேர்ந்தெடுக்குமாறு எனக்கு உத்திரவிட்டுள்ளார்) அவளுக்குகந்த தலைவன் நளன்தான் என்றும், சீக்கிரமே அவளை அடையும் பொருட்டு விதர்பதேசம் வருமாறும் அக்கடிதத்தில் ஸரஸ்வதீ தேவீ குறிப்பீடுகிருள்.

இரண்டாவது அங்கம் தேவலோகத்தில் நடக்கிறது. நாரதர் மூலம் தமயந்தியின் அழகைப்பற்றி அறிந்த இந்திரன் அவளை அடையும் உபாயம் யாது என்ற ஆலோசனையில் ஆழ்கிருன். அவனுடைய பேதமையைக் கண்டு தேவகுருவான பிருஹஸ்பதி வருந்துகிருர்.

प्रकृत्या कामुके शक्रे प्राप्तोऽयं वैणिको मुनिः ।
प्रागेव कलुषं चक्षुः पांसुना तच्च दूषितम् ॥

—நள சரித்ரம் II-8

இயற்கையிலேயே சபல புத்தியுள்ள இந்திரனிடம் வீணுதாரியான நாரதர் வந்தது, ஏற்கனவே கலங்கிய கண்ணில் புழுதி விழுந்து உபத்திரவம் செய்வது போல் ஆயிற்று'' என்கிருர். ஸரஸ்வதி தேவியே நளன் விஷயத்தில் அக்கரையுடனிருப்பதால், இந்திரன் இந்தக் காரியத்தில் ஜயத்தை விரும்பினுல் நளனையே தன்பொருட்டு தமயந்தியிடம் தூதுவனுகப் போகும்படி கேட்டுக்கொள்ள வேண்டுமென்கிருர். இந்திரன், தன்னுடைய ஸகாவான விச்வாவஸுவுடன் விதர்ப தேசத்தை அடைகிருன். தமயந்தியின் ஸ்வயம்வரம் நடக்கவிருக்கிறது. நளனுடைய சிநேகிதன் பத்ரமுகனைப்போல் நடித்து, விச்வாவஸு தமயந்தியின் உண்மையான நிலையை அறிந்து கொள்ளுகிருன்.

आयस्तापि मनोभवेन बहुशः पृष्टा सखीभिश्च वा
ध्यायन्ती कमपि स्वयं न खलु सा दत्ते गिरं कामपि ।

ब्रूते यद्यच्च जातु किञ्चन तदा नैकं वचः प्राक्तनं
नव्यः किन्तु नलो नलो नल इति व्याहार एकः श्रुतः ॥

—நள சரித்ரம் II-33

''விரஹதாபத்திஞல் பீடிக்கப்பட்ட அவள், தன் ஸகீ ஜனங்களால் அடிக்கடி கேட்கப்பட்ட போதிலும் பதிலொன்றும் சொல்லாது, ஏதோ விஷயத்தை தனக்குள்ளேயே யோசிப்பது போலிருக்கிருள். ஏதாவது சமயங்களில் அவள் வாயினின்று வார்த்தைகள் வெளிப்பட்டாலும் அவை முன் அவள் பேசுவது போலல்லாது, 'நள, நள, நள' என்னும் புதிதான இந்த ஒரு வார்த்தையே கேட்கப்படுகிறது'' இந்நிலையை அடைந்த தமயந்தி இந்திரனை ஒருக்காலும் விரும்பமாட்டாள் என்பது விச்வாவஸுவுக்கும், இந்திரனுக்கும் தெரிகின்றது.

காதலால் வாடிய தமயந்தியின் நிலை மூன்ருவது அங்கத்தின் ஆரம்பத்தில் வெகு அழகாய் வர்ணிக்கப்படுகிறது. ஸரஸ்வதி தேவியின் சொற்படி தங்களுடைய குலதெய்வமாகிய கௌரியை வணங்கும் பொருட்டு அவளுடைய ஆலயத்திற்கு தமயந்தி தன் தோழிகளுடன் செல்லுகிருள். அந்த சமயத்தில் மறைவாகவிருந்த நளனும் அவனுடைய விதூஷகனும் அவர்கள் முன் தோன்றுகிருர்கள். எல்லோரும் இதைக்கண்டு ஆச்சரியமும், ஸந்தோஷமும் அடைகிருர்கள். கௌரியின் ஸன்னிதியிலேயே ஸரஸ்வதி தேவி தமயந்தியின் கையில் தாம்பூலத்

தைக் கொடுத்து, அதை நளன் கையில் வைக்கிருள் அதே சமயத்தில் நளனை இந்திரன் அழைப்பதாக விதூஷகன் தெரியப்படுத்துகிருன்.

இந்திரன் வேண்டுகோளிற்கிணங்க நளன் தமயந்தியிடம் தூது செல்லுகிருன். ஆனல் அவனை வழியில் ஸாவித்ரி சந்தித்து வீணே தமயந்தியிடம் செல்ல வேண்டாமென்றும், அவள் நளனை கணவனுக வரித்துவிட்டாளென்றும் கூறுகிருள்.

मानद स्मरशरार्दितां चिरात् मां यदि त्वमनुमन्यसेऽधुना ।
ईदृशीं च यदि वावमन्यसे सर्वथासि मम जीवितेश्वरः ।।

— நள சரித்ரம் IV-1

என்பது தமயந்தியின் ஸந்தேசம். ஆதலால் நளன் எக்காரணம் பற்றியும் அவள் மனதை மாற்ற முயல கூடாது என்று ஸரஸ்வதியின் தோழியாகிய ஸாவித்திரியால் கட்டளையிடப்படுகிருன். நடந்த விஷயங்களை விதூஷகன் மூலம் இந்திரனுக்கு நளன் தெரிவிக்கிருன். இந்திரன் கோபமடைகிருன். தன்னை நளன் அவமதித்து விட்டபடியால் அதற்குத் தகுந்தபடி தானும் இனி நடந்துகொள்ளப் போவதாக நளனுக்கு அறிவிக்கிருன்.

நளனுக்கும் தமயந்திக்கும் விவாஹம் நடந்த பின் ஸரஸ்வதி தேவி ஸத்யலோகம் செல்லுகிருள். அவளுடைய பிரிவைத் தாங்காமல் வருந்தும் தமயந்தியை நளன் தேற்றுகிருன். அதிக களைப்

பினல் தமயந்தி நித்திரை போகிருள். தூக்கத்தில் கெட்ட ஸ்வப்னம் ஏதோ கண்டு, ''கானகத்தில் என்னைத் தனியே விட்டுச் செல்வது நியாயமா, நாதா!'' என்று புலம்புகிருள். அதைக்கேட்ட நளன் அவளை எழுப்பி, அவள் கண்டது ஸ்வப்னம்தான் என்றும், வீணுக வருத்தப்பட வேண்டாமென்றும் சொல்லி அவளை சமாதானம் செய்கிருன்.

நளனுடைய மந்திரியாகிய காமந்தகன் சில அப சகுனங்கள் தென்படுவதாலும், நிஷத தேசத்தில் அங்கங்கே தோன்றும் சில துர்நிமித்தங்களாலும் அரசனுக்கு ஏதோ பெரிய கெடுதல் ஏற்படப் போகிறது என்று ஊகிக்கிருன். இத்துடன் நாடகம் நின்று விடுகிறது.

தமயந்தியின் சித்திரத்தை நளன் வரைதல் ஸரஸ்வதியின் லிகிதம், ஸ்வயம்வரம் இல்லாமலே நள தமயந்தி விவாஹம் இவைகள் மூல கதையிலிருந்து நீலகண்டர் செய்திருக்கும் மாறுதல்கள். நளன், தமயந்தி, இந்திரன், பிருஹஸ்பதி, ஸத்யாசாரியார் விதூஷகன்-நாடகத்தின் சிறந்த குணச்சித்திரங்களாக அமைந்திருக்கின்றனர். நாடகத்தின் நடை இயற்கையாகவும், விறுவிறுப்பாகவும் இருக்கிறது. வசன நடையில் ஒரு கடினமான ஸமாஸமாவது காணமுடியாது. செய்யுள் நடையில் சில சில இடங்களில் கொஞ்சம் கடினமான பதங்களைக் காணலாம். சுமார் பன்னிரண்டு வகை விருத்தங்களை

கவி கையாளுகிருர். நீண்ட விருத்தங்கள்—அதிலும் சார்தூல விக்ரீடிதம்-அதிகமாக உபயோகமாகி யிருக்கின்றன.

அடுத்த நூலாகிய கங்காவதரணம், கபில முனி வரின் கோபத்திற்கு இரையான ஸகர புத்திரர்களை கரையேற்றுவதற்காக, பகீரதன், கங்கையை பாதாள லோகத்திற்குக் கொண்டு வந்த கதையின் வரலாற்றைச் சொல்லுகிறது. வால்மீகி ராமா யணத்தில் பாலகாண்டத்தில் கங்காவதரணக் கதை காணப்படுகிறது. இதை ஸ்ரீ நீலகண்டர் எட்டு ஸர்க்கம் கொண்ட ஒரு மஹா காவ்யமாக அமைத் திருக்கிருர்.

சூரிய வம்சத்தரசனுன பகீரதன் மனுநீதியி லிருந்து சற்றும் வழுவாது அயோத்தி மாநகரத்தில் அரசு செலுத்தி வருகிருன். ஒரு சமயம் தன் உற வினர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது தன் முன்ஞேர்களான ஸகர மன்னனின் புத்திரர்கள் கபில முனிவரின் கோபத்தால் எரிக்கப் பட்ட விருத்தாந்தத்தையும், அவர்கள் நல்ல கதி அடையாமல் உழலுவதைய்ம் கேட்டு வருத்தமடை கிருன். அவர்களை உய்விக்கும் வழி யாது என்று மன்னன் குலகுருவாகிய வசிஷ்டரை வினவுகிருன். தேவலோகத்தில் இருக்கும் கங்கா நதியின் ஜலத்தை பாதாள லோகத்திற்குக் கொண்டுவந்து ஸகரபுத்திரர்களின் சாம்பல் மீது பாயவிட்டால் அவர்கள் கடைத்தேறுவார்கள் என்று வசிஷ்டர் தெரிவிக்கிருர். இந்த மஹத்தான காரியத்தை சாதிக்க உறுதிகொண்டவனுய், பகீரதன் தன் ராஜ்

யத்தை மந்திரிகளிடம் ஒப்படைத்துவிட்டு, தென் சமுத்திரக் கரையில் ஒரு ஆச்ரமத்தையமைத்து பிரம்மனைக் குறித்து ஒரு ஆயிரம் வருஷம் கடுமை யான தவம் புரிகின்ருன். அவனுடைய தவத்தினுல் ஸந்தோஷமடைந்த பிரம்மனும் அவன் முன் தோன்றி அவன் விரும்பியபடி கங்கையை கீழ் லோகத்திற்கு இட்டுச்செல்லலாம் என்று கூறி மறை கிருர். ஆனல் மன்னனுக்கு புதிய இடையூறு ஒன்று ஏர்படுகிறது. கங்காதேவி மிகுந்த அஹந்தையுடன் பகீரதனை நோக்கி வினவுகிருள்:-''தன் மூதாதை யர்களைக் கரையேற்றினர் என்று உனக்கு கிடைக்க போகும் புகழ் ஒன்றையே நீ விரும்புகிருய். ஆனல் உன் விருப்பம் நிறைவேறினல் அதன் மூலம் மூன்று உலகிலும் என்னுடைய வெள்ளப் பெருக்கால் எவ் வளவு நாசம் விளையும் என்பதைக் கவனித்தாயில்லை'

यदि त्वलङ्घ्यं गुरुशासनं त्वया
यतस्व भूमाववतारणे मम ।
स्मृता स्मृता संनिदधामि तावदि-
त्युदीर्य तं दिव्यनदी तिरोदधे ॥

—கங்காவதரணம் ஸ. 3-சு. 26

''(இவ்வளவு சொன்ன பிறகும்) உன் குருவின் கட்டளை மீறத்தகாதது என்று நீ கருதினல் பூலோ கத்திற்கு என்னைக்கொண்டு போவதற்கு முயற்சி செய். நீ என்னை எப்பொழுது நினைத்தாலும் நான்

உன் முன் தோன்றுகிறேன் என்று கூறி அந்தப் புனிதமான நதி (கங்காதேவி) மறைந்தாள்'',

பகீரதன் மறுபடியும் கவலை அடைகிருன். கங்கையின் வேகத்தைத்தாங்கக்கூடிய சக்தியுடையவன் யார் என்று ஆலோசித்து ஒன்றும் தோன்ருது வருந்தும் சமயத்தில் பிரம்மன் அவன் முன் தோன்றி ''பரமசிவனே இந்த அஸாத்தியமான காரியத்தைச் செய்ய வல்லவர்'' என்று கூறி அரசனுக்கு பஞ்சாக்ஷரத்தையும் உபதேசம் செய்கிருர். பகீரதனும் சிவனைக் குறித்துக் கடும் தவம் புரிகிருன். இந்த இடத்தில் ஹேமந்த ருதுவின் வர்ணனை மிக அழகாய் அமைந்திருக்கிறது பகீரதனின் தவத்தின் தன்மை,

द्वौ हि तेजस्विनौ लोके सविता स च पार्थिवः ।
तस्थतुस्तौ विभज्येव दक्षिणोत्तरयोर्दिशोः ॥
नृपतिस्त्रिजगद्दाहनिदानेन तपोऽग्निना ।
हेमन्तं हिमवन्तं वा नाचिन्तयत चेतसा ॥

--கங்காவதரணம் ஸ. 4-21, 32

''உலகத்தில் மஹா தேஜஸ்விகளான சூரியன், பகீரதன் இவ்விருவர்களும் ஏதோ ஒப்பந்தப்படி தெற்கேயும் வடக்கேயுமாய்ப் பிரிந்து இருந்தது போல் தோன்றிற்று. முவ்வுலகத்தையும் எரிப்பதற்குக் காரணமான தவத்திஞல் ஏற்பட்ட வெப்பத்தால் அரசன், குளிர் காலத்தையோ. இமயமலை

அடியில் தான் இருந்ததையோ மனதால்கூட எண்ணவில்லை'' என்று கூறப்படுகிறது. இந்த மா தவத்தினால் மகிழ்ந்த பரமசிவன் அவனுக்கு தரிசனம் கொடுக்க வருவதை,

हरः प्रतस्थे तं द्रष्टुमघमर्षण इव ह्रिया ।

—கங்காவதரணம் ஸ. 4-39

"கடன்கொண்டவன் போல் ஸங்கோசத்துடன் அவனைக் காணப் பரமசிவன் புறப்பட்டார்'' என்று வெகுநயமாகக் கவி சொல்லுகிறார். அரசன் கேட்கும் பிரகாரம் கங்கையைத் தாம் தம் தலையால் தாங்கிக் கொள்வதாகப் பரமசிவன் ஒப்புக்கொள்ளுகிறார். அதன் பிறகு பகீரதன் கங்கையை பூலோகம் வருமாறு பிரார்த்திக்கிறான். கங்காதேவி தன்னுடைய எல்லையற்ற அகந்தையினால், பிரம்மனிடம் பரமசிவனைப் பழித்துப் பேசுகிறாள்.

त्वद्गृहे स्थितवती चिरादहं त्वामनेन परितोषये ततः ।

त्वच्छिरोलवनकर्मदुर्मदं संनिपात्य गिरिशं रसातले ।।

सावलेपनिपतन्मदूर्मितासंप्लवैककबलीकृतो हरः ।

संततः पयसि शंखशुक्तिभिनन्दिना ननु गवेषयिष्यते ।।

कालकूटमिव मन्यते शिवो मामकं प्रकृतिदुर्मदं पयः ।।

— கங்காவதரணம் ஸ. 5-சு. 6, 7, 8

"உங்கள் வீட்டில் வெகுநாளாய் நான் இருந்திருக்கிறேன். இப்பொழுது உங்கள் தலையைக்

கொய்த பரமசிவனை பாதாள லோகத்தில் தள்ளி உங்களை சந்தோஷமடையச் செய்கிறேன். என்னுடைய பிரவாஹ அலைகளினால் அடித்துச் செல்லப்பட்ட சிவன் சங்கு சிப்பிகளின் மத்தியில் நந்தியினால் தேடப்படட்டும். என்னைக் கேவலம் காலகூட விஷம் போல் கருதுகிறார் போலும்'' என்கிறாள். மிகுந்த ஆவேசத்துடன் ஸத்யலோகம், தேவலோகம் வழியாக அந்த உலகங்களில் ஏராளமான சேதத்தை விளைவித்துவிட்டு, ஆகாசத்திலிருந்து பரமசிவன் தலையில் கடுமையான வேகத்துடன் விழுகிறாள். ஆனால் அவளுடைய அஹம்பாவப் பேச்சு வெறும் பேச்சாகவே முடிகிறது.

अप्रतर्क्यमसमीक्षितावधिं तं कपर्दवलयं पिनाकिनः ।
आपगा दिविषदामवाङ्मुखी पन्नगीव कलशं समाविशत् ।।
तज्जटापटलकन्तरोदरस्वीकृताः सुरनदीमहोर्मयः ।
लेशतोऽपि किल नाललक्षिरे सत्क्रिया इव कृतघ्नगोचराः
मूर्ध्नि तस्य मुहुराहितभ्रमा प्राप सा न पदवीं निर्वतितुम्
दुर्लभं ननु जगत्सु देहिनां तं प्रविश्य विनिवर्तन पुनः ।।

—கங்காவதரணம் ஸ. 5-சு. 57, 59, 60.

அறிவுக்கெட்டாததும், எல்லை காண முடியாததுமான மஹேசனின் அந்த சடை வளையத்திற்குள் கீழ்நோக்கி வந்த தேவர்களின் நதி குடத்திற்குள் பாம்பு நுழைவது போல் நுழைந்தாள். அந்த சடை

களின் இடைகளில் வாங்கிக்கொள்ளப்பட்ட தேவ நதியின் அலைகள், செய்ந்நன்றி கொன்றவர்களுக்கு செய்யும் நல்ல காரியங்கள் போல் சிறிதளவுகூட தென்படவில்லை. அவன் முடியில் சுற்றிச் சுற்றி வருகின்ற அந்நதி மீண்டும் வெளியில் வரும் நிலையை அடையவில்லை. உலகத்தில் அவனையடைந்த ஜீவன்களுக்கு மீண்டும் வருகை என்பது அரிதல்லவா?''

கங்கையின் கர்வத்திற்கு பங்கம் ஏற்பட்டாலும், பகீரதனுக்கு மறுபடியும் மனவேதனை உண்டாகிறது மஹேசனை ஸ்துதித்து தன்னுடைய முன்னோர்களை நற்கதி அடையச் செய்வதற்காக கங்கா ஜலத்தை ஒரு சிறிதளவாவது வெளியில் விடுமாறு கேட்கிறான் பக்தனுக்கு இரங்கி பரமசிவனும் அவ்வாறே செய்கிறார். பகீரதன் முன் செல்ல அவன் பின்னால் கங்கா நதி செல்லுகிறாள். வழியில் இருந்த ஜஹ்னு முனிவரின் ஆசிரமத்தில் அவருடைய யக்ஞசாலையை தன்னுடைய வெள்ளப்பெருக்கினால் நாசம் பண்ணுகிறாள் இதைக் கண்டு சினமடைந்த ஜஹ்னு மஹரிஷி கங்காநதி முழுவதையும் பானம் செய்துவிடுகிறார்.

पुरा पतन्ती मुकुटे पुरारेर्लेभे फलं या किल दुर्विनीतेः ।
भूयोऽपि सैवापचकार जह्नोः कुतः प्रकृत्या कुटिलोपशाम्येत्

—கங்காவதரணம் ஸ. 6 சு. 36

''முன்பு பரமசிவனின் தலையில் விழும்பொழுது கங்கை தன் துஷ்டச் செய்கையின் பலனை அடைந்

தாள். அவளே மீண்டும் ஜஹ்னுவிற்குத் தீங்கு செய்தாள். இயற்கையில் துஷ்ட ஸ்வபாவமுள்ளவள் எங்கனம் திருந்த முடியும்?''

பகீரதன்பால் கருணை கொண்டு ஜஹ்னு கங்கையைத் திரும்பவும் தன் காதுவழியாக வெளியில் விடுகிறார். கங்கை பின் தொடர பகீரதன் காசி க்ஷேத்திரத்தை அடைகிறான். காசியின் மகிமையைக் கவி விரிவாகப் பாடுகிறார். காசியில் கோவில் கொண்டிருக்கும் விச்வேச்வரரைக் கண்டு பகீரதன் ஸ்தோத்திரம் செய்கிறான். அதன் பிறகு பகீரதன் கங்கையை பாதாள லோகத்திற்கு ஸமுத்திரத்தின் அடி வழியாக இட்டுச் செல்லுகிறான். முடிவில் கபில முனிவரின் ஆசிரமத்தையடைந்து ஸகர புத்திரர்களின் சாம்பல் மீது கங்கையை ஓடச்செய்து, அவர்களுக்கு தான் தர்ப்பணமும் செய்து அவர்கள் உத்தம கதியை அடையுமாறு செய்கிறான். மகத்தான காரியத்தை செய்து முடித்து அயோத்திக்குத் திரும்பும் மன்னனை ஜனங்கள் வெகு குதூஹலத்துடன் வரவேற்கிறார்கள்.

இந்த காவியத்தில் அழகான வர்ணனைகள் மலிந்து கிடக்கின்றன. பகீரதனின் தவம், கங்கையின் வீழ்ச்சி, விசுவேசுவர ஸ்துதி, கோடைகாலம், குளிர் காலம்—இவையெல்லாம் இந்த அம்சத்தில் சிறந்து விளங்குகின்றன. கர்வமே உருவெடுத்தது போன்ற கங்காதேவி காவ்யத்தின் உயர்ந்த குணச்சித்திரமாய் விளங்குகிறாள். யாப்பு விஷயத்திலும்

கவி குறைகூற இடம் வைக்கவில்லை. பதினைந்து வகை விருத்தங்கள்-அனுஷ்டுப், சார்தூல விக்ரீடிதம், சிகரிணீ, ஸ்வாகதா, வஸந்த திலகம், வம்சஸ்தம், மஞ்சு பாஷிணீ, ரதோத்ததா, பிருதிவீ, ஹரிணீ, உபேந்திர வஜ்ராவைதாலியம், த்ருதவிலம்பிதம் முதலியவை கையாளப்பட்டிருக்கின்றன.

மதுரையை அடைந்து ராஜ ஸேவையில் அமர்வதற்கு முன் அந்யாபதேச சதகம் என்னும் நூலை நீலகண்டர் எழுதியிருப்பார் என்று தோன்றுகிறது. நூறு சுலோகம் கொண்டது இந்நூல். சார்தூல விக்ரீடித விருத்தத்தில் அமைந்திருக்கிறது. அந்யாபதேசம் என்னும் காவ்ய மார்க்கம் ஸம்ஸ்க்ருதத்தில் ஒரு வகை. சுலோகத்தின் யதார்த்தமான பொருள் வாசிப்போருக்கு உடனே விளங்கும். ஆனால் அதன் உட்பொருளொன்று அதிலிருந்து புகட்டப்படுகிறது. த்வனியினால் அது உணர்த்தப்படுகிறது. அதைக் கண்டுகொள்வது அவ்வளவு சுலபமல்ல. குரு சிஷ்ய பரம்பரையில் பாடம் கேட்டவர்களே சந்தேகத்திற்கிடமில்லாமல் பொருளை உணர்த்த முடியும். இவ்வகைச் செய்யுட்களைச் செய்வதும் கஷ்டம்தான். அவ்வாறு செய்தாலும் செய்யுளின் போக்கு கடினமாக அமையும். இதை மனதில் ஞாபகம் வைத்துக் கொண்டு நீலகண்டரின் அந்யாபதேச சதகத்தைப் பரிசீலனை செய்தால் அவர் மகத்தான வெற்றியை அடைந்திருக்கிறார் என்றே சொல்வோம். ஒவ்வொரு செய்யுளும் அற்புதமாய் வாய்ந்

திருக்கின்றது. உட்பொருள் விளங்காவிடினும் சுலோகங்களின் வியக்தமான பொருளே கௌரவமும், காம்பீர்யமும் கொண்டதாக இருக்கின்றது. கவியின் அறிவும், அவர் இயற்கைப் பொருள்களையும், மற்றும் ஜீவராசிகளையும், அவைகளின் தன்மையையும் எவ்வளவு நுட்பமாக கவனித்திருந்தார் என்பதும் புலப்படும். அறிவுக்களஞ்சியம் என்றே இந்நூலைக் குறிப்பிட வேண்டும்.

திருமலை நாயக்கரிடம் உத்தியோகம் பெற்று பணியாற்றிய காலத்தில்—தம் வேலையில் முன்னுக்கு வருவதற்காக பாடுபட்ட காலத்தில்-நீலகண்ட விஜய சம்பூ எழுதப்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால்

यः संरम्भः कृतिविरचने दुष्कवीनामभेद्यो
यच्चैकाग्र्यं तदुचितपदान्वेषणे चित्तवृत्तेः ।
लभ्यं तच्चेदपि कवयतामन्ततस्त्रीण्यहानि
स्यादेवं किं सरसकविताराज्यदुर्भिक्षयोगः ॥

—நீலகண்ட விஜய சம்பூ 1-4

நல்ல கவிதா சக்தியுள்ளவர்களுக்குப் போதுமான அவகாசமிருந்தால் ஸரஸ கவிதை என்னும் ராஜ்யத்தில் பஞ்சம் ஏற்படுமா? என்று அவர் வருத்தப்பட்டுக் கூறுகிறார். இதிலிருந்து நீலகண்டர் தமக்குப் போதுமான அவகாசம் கிடைக்கவில்லை என்பதை த்வனியாக வெளிப்படுத்துகிறார்.

போதுமான அவகாசமில்லாத காலத்தில் எழு

தப்பட்டது என்பதால், நீலகண்ட விஜய சம்பூ பாதிக்கப்பட்டிருக்கிறது என்று கருதவேண்டாம். நீலகண்டரின் மிகச்சிறந்த நூல்களில் இந்த சம்பூ ஒன்று. காலஞ்சென்ற மஹாமஹோபாத்யாய S. குப்புசாமி சாஸ்திரியார், நீலகண்ட விஜய சம்பூ விற்கு வழங்கியிருக்கும் முகவுரையில் ஸம்ஸ்க்ருதத் தில் சம்பூ என்று சொல்லப்படும் காவ்ய வகையில் இந்நூலே மிக உயர்ந்தது என்று கூறியிருக்கிருர். ராமாயண சம்பூ, விச்வகுணுதர்ச சம்பூ போன்ற பல நூல்களுக்கு மத்தியில் இவ்வளவு பெருமையை ஒரு பெரியார் இதற்கு அளிக்க வேண்டுமாஞல் இது எவ் வளவு சிறந்ததாயிருக்கவேண்டுமென்பது விளங்கும் உண்மையில் இந்நூலே வாசித்தவர்கள் சாஸ்திரியார் இதற்கு அளித்திருக்கும் புகழுரையில் ஒரு சிறிதே னும் உயர்வு நவிற்சி இருப்பதாகக் கருதமாட்டார் கள். இந்த அருமையான காவ்யம் ஒரு ஆயிரம் வரு ஷத்திற்கு முன் எழுதப்பட்டிருந்தால் அதற்கு உரித் தான பெயரும் புகழும் கிடைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லே.

சம்பூவின் விஷயமாய் அமைந்திருக்கும் கதை நாம் எல்லோரும் நன்கறிந்த புராணக் கதையே. தேவர்களே காப்பாற்றுவதற்காக பரமசிவன் ஹாலா ஹல விஷத்தைப் பருகிய கதைதான் அது. ஆனல் இந்தச் சிறு கதையில் அருமையான வர்ணனைகள், உயர்ந்த ஹாஸ்ய ரஸம், சுவை மிகுந்த சம்பா ஷணைகள் இவைகளேப் புனைந்து ஒரு அதிருசியான காவ்யாம்ருதத்தை நமக்குக் கவி அளிக்கிருர்.

கட்டுக்கோப்பு என்று சொல்லப்படும் அம்சத்தில் இக்கதைக்குச் சமமாக ஸம்ஸ்க்ருத இலக்கியத்தில் வெகுசில நூல்களையே காணமுடியும். ஆரம்பமுதல் முடிவுவரை கதையை வாசிப்பவருக்கு ஒரு சிறிதும் அலுப்புத்தட்டாது. சில இடங்களில் உயர்ந்த நாடக பாவத்துடன் சம்பவங்கள் சித்தரிக்கப்பட்டிருக் கின்றன. மனித சுபாவத்தைப் பற்றிய அறிவும் ராஜ தந்திரத்தில் அவருக்கிருந்த அனுபவமும், எல்லாவற்றிற்கும் மேலாக அவருடைய உயர்ந்த கலைப்பண்பும் ஒருங்கே நம் மனதைக் கவருகின்றன.

தமக்கே அபசாரம் செய்த—தம் பிரஸாதத்தை அவமதித்ததின் மூலம் தேவர்களிடம் பரிவுகாட்டி அவர்களுக்கு மாபெரும் இடர் வந்தபொழுது அவர் களின் கண்ணீர் துடைத்து துயர் தீர்த்த பரம சிவனின் எல்லையற்ற கருணையை, நீலகண்டர் இந்தக் கதையில் விளக்கியிருக்கும் அழகை வாசித்து அனுபவிக்க வேண்டும். மூர்த்தி பேதங்களின் அடிப் படையில் பூசல் செய்து வரும் சமயத்தவருக்கும்— மூன்றும் ஒன்றே, ஒன்றே மூன்றாக இயங்குகிறது என்னும் பரம தத்துவத்தையும் போதிக்கிறார். கர்ம மார்க்கத்தில் ஈடுபட்டு வாழ்நாள் முழுதும் யாகங் கள் செய்யும் மனிதர்களை அவர் இரக்கம் கலந்த ஏளனத்துடன் நோக்குகிறார். மேலும், ஸ்வர்க்க லோகத்திலும் நிரந்தரமான ஆனந்தம் இல்லை என் பதையும், தேவேந்திரனும், தேவர்களும் படும் பாட்டை வெகு விஸ்தாரமாக வர்ணிப்பதன் மூலம் நமக்குக் காட்டுகிறார். இகலோக, பரலோக போகத்

திலிருந்து மனத்தை வைராக்ய வழிக்குத் திருப்பி பகவானிடத்திலேயே அதை லயிக்க வைத்து உத்தம புருஷார்த்தமாகிய மோக்ஷத்தை அடைய வேண்டு மென்பதே காவ்யத்தின் பரமதாத்பர்யம். ஆகவே கதையின் பிரதான ரஸம் சாந்தம்.

यथा यथा विपर्येति लोकतन्त्रमसारवत ।
तथा तथा विरागोऽत्र जायते नात्र संशयः ।।

என்னும் நியாயத்தை அனுசரித்து தேவர்கள் அடைந்த கஷ்டங்களை நன்கு விளக்கி, அவர்கள் பாடுபட்டடைந்த சுகத்தின் தன்மையையும் நன்கு விவரிக்கிருர். 'நூறு அசுவமேத யாகங்களால் சந்திர சேகரனை சந்தோஷிக்கச் செய்து, அஸுரர்களாலும் (தன்னை விரட்டி) அனுபவிக்கப்படும் தேவராஜ் யத்தை அடைய வரம் கேட்டான். குபேரனே வெறும் பிசாசு போல் தனக்கு தனுதிபத்தியத்தை யாசித்தான். அக்னியோ தேவர்களுக்கு அன்னத் தைக் கொண்டு சேர்க்கின்றவனுகயிருக்க வேண்டும் என்று வரம் கேட்டு அதனுல் தான் ஸாபல்யம் அடைந்ததாக நினைக்கிருன்.

हन्त चिरादिमान् देवपशूनद्राक्ष्म ।
किं न निगृह्णन्ति मनः किं न भजन्ते जनाः शिवं शरणम्।
अभिसंधिभेदमात्रान्मोक्षापायेन बध्यन्ते ।।

—நீலகண்ட விஜய சம்பூ II-5

என்று பிரம்ம லோகத்தில் மஹரிஷிகள் சொல்லுவதிலிருந்தும்,

ननु प्रातरागतस्य पुरुहूतनाम्नो दिवस्पतेः कतितमः पुरन्दरो नामायम्?

कतीन्द्राः कति लोकेशाः कति विश्वसृजोऽथ वा ।
श्वासे श्वासे प्रजायन्ते प्रलीयन्ते च शार्ङ्गिणः ॥

—நீலகண்ட விஜய சம்பூ II-30

என்னும் ஸூக்திகளாலும், தேவர்களின் காலமும் எவ்வளவு குறுகியதென்பதையும் துர்வாஸரின் தபோ பலத்தின் முன் இந்திரனின் சக்தி எவ்வளவு துச்சமானதென்றும் நிரூபித்துக் காட்டி உண்மையில் இந்த ஸௌபாக்யமெல்லாம் நிலையற்றது, அதனால் சாச்வதமானதும், நிரந்தர ஆனந்த ஹேதுவுமாகிய மோக்ஷத்தையடைய பகவானிடத்தில் நமது மனத்தைச் செலுத்த வேண்டுமென்பதை நயமாக வெளிப்படுத்துகிருர். இனிச்சம்பூவின் கதையை வரைவோம்.

தேவர்களின் பிரதான நகரமாகிய அமராவதியில், ஒரு நாட்காலையில், மந்தாகினியில் ஸ்னைம் செய்து, பரமசிவனை விதிப்படி ஆராதித்து, தன்னுடைய வாகனமாகிய ஐராவதத்தில் ஏறி இந்திரன் பவனி வருகின்ருன். அந்த சமயத்தில் அவ்விடம் அகஸ்மாத்தாக துர்வாஸ முனிவர் தோன்றுகிருர். அவர் ஸாக்ஷாத் அம்பிகையின் பிரசாதமாகிய ஒரு மாலையை இந்திரனிடம் ஸமர்ப்பிக்கிருர். ஆனல்,

'आ चतुराननादा च कीटपतङ्गेभ्यस्तुल्यवदेव प्रभवन्त्या भगवत्या भवितव्यतताया विलासेन त्रिभुवनाधिपत्यमदान्धीकृतलोचनो धीमानपि सहस्रलोचनो......।'

''பிரம்மன் முதல் புழு பூச்சிகள் வரை ஒரே அளவில் ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கும் விதியின் விலாஸத்தினுல், மூன்று உலகங்களுக்கும் அதிபதி யென்னும் அகந்தையினுல் ஆயிரம் கண்ணனும் கண்ணற்றவன் போலவே'' முனிவரிடம் நடந்து கொள்கிருன். முனிவருக்குரிய மரியாதையைச் செய்யாது, அவர் கொடுத்த மாலையை அலக்ஷ்யமாய் ஒரு கையால் வாங்கி யானையின் தலைமீது அதை வைக்கிருன். யானையும் தலையை அசைத்து மாலையைக் கீழே தள்ளி தன் காலால் மிதிக்கிறது. இதைக்கண்ட முனிவர் சினமடைந்து இந்திரனை நோக்கி ''எந்த ராஜ்ய லக்ஷ்மியானது உன்னை இவ்வாறு வழிதவறி நடக்கச் செய்கின்றதோ, அது விரைவிலேயே உன்னை விட்டகன்று உன் விரோதிகளிடம் செல்லக் கடவது'' என்று சபித்துவிடுகிருர். ஆனுல் கோவிந்தனின் கிருபையால் சாப விமோசனம் ஏற்படுமென்றும் முனிவர் கூறி மறைந்து விடுகிருர். முனிவரின் சாபத்தைப் பற்றிக் கேள்வியுற்ற அஸுரர்கள் இதுவே தக்க சமயமென்று தீர்மானித்து தேவர்களுடன் யுத்தத்திற்கு வருகின்றனர். சண்டையில்,

वाय्वर्कशक्रवरुणानलदैवतान्य-

प्यस्त्राणि निर्जरवरैरभिमन्त्रितानि ।

ईशांबभूवुरसुरेषु न शासनानि
राज्याच्च्युतस्य नृपतेरिव नागरेषु ॥

—நீலகண்ட விஜய சம்பூ 1-39

''தேவர்களால் பிரயோகிக்கப்பட்ட அஸ்திரங்கள், வாயு, சூரியன், இந்திரன், வருணன் அக்னி முதலிய தேவதைகள் அஸ்திரங்களின் தேவதைகளாயிருந்தும், அஸுரர்கள் விஷயத்தில், ஜனங்களிடம் ராஜ்யமிழந்த அரசனின் கட்டளைகள் போல் பயனற்றவையாயின'' முடிவில் தேவர்கள் தோல்வியடைந்து, மந்தரமலையருகே சென்று அங்கு வசித்து வருகின்றனர்.

அங்கு ஆயிரம் வருஷங்கள் தேவர்கள் தவத்திலிருக்கின்றனர். அதன் முடிவில் தேவ குருவாகிய பிருஹஸ்பதி அவர்கள் முன் தோன்றி அவர்களை பிரம்மலோகத்திற்கு அழைத்துச் செல்லுகிருர். பிரம்மனும் பிரஹஸ்பதியின் மூலம் தேவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களைக் கேள்வியுற்று, நாராயணிக்கு இழைத்த அபசாரத்திற்கு பரிகாரம் சொல்லக் கூடியவர் அந்த நாராயணியின் அவதாரமாகிய விஷ்ணுவே என்கிருர். ஆகையால் தேவர்களும், பிரம்மாவும் வைகுண்ட லோகத்திற்கு அங்கிருந்து புறப்படுகின்றனர். பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் பத்மநாபனை தரிசிக்கின்றனர். தேவர்கள் தங்கள் பழைய நிலையை அடைவதற்கு யாது உபாயம் என்பதை கோவிந்தன் பிரம்மனிடம் சொல்லுகிருர்.

संधानं कुरुतासुरैः प्रथमतो मन्थानमुर्वीधरं
कृत्वा मन्दरमर्णवे क्षिपत ते यूयं समेतास्ततः ।
बध्वा वासुकिनाथ मथ्नत ततः संपत्स्यते या सुधा
तामास्वाद्य गमिष्यथाप्यमरतां यूयं न वः शत्रवः

—நீலகண்ட விஜய சம்பூ II-46

"உடனடியாக அசுரர்களுடன் சமாதானம் செய்து கொண்டு, நீங்களும் அவர்களும் சேர்ந்து பூமிக்கு ஆதாரமாயிருக்கும் மந்தர பர்வதத்தை மத்தாகச் செய்து ஸமுத்திரத்தின் நடுவில் அதை ஸ்தாபனம் செய்யுங்கள். அம்மலையை வாசுகியினால் சுற்றி வளைத்து ஸமுத்திரத்தைக் கடையுங்கள். பின்னால் அதிலிருந்து கிடைக்கும் அமிருதத்தை உண்டு நீங்கள் அமரபதவியை அடைவீர்கள். உங்கள் விரோதிகளுக்கு அது கிட்டாது. மேலும் இந்தக் காரியத்தில் வெற்றி கிடைக்க பரமசிவனை பஜிக்க வேண்டும்" என்று கூறுகிறார்.

அரசர்களுடன் உடன்பாடு செய்து கொள்ளுவது எங்ஙனம்? இந்த விஷயத்தில் தூது செல்லும்படி இந்திரன், பிருஹஸ்பதியை வேண்ட, அவர் சொல்லுகிறார்.

"नहि किंचिदवमं नाम कर्मास्ति राजोपजीविनाम् ।"

"அரசர்களிடம் ஸேவை செய்பவர்களுக்கு செய்யக்கூடாத காரியம் ஒன்றும் கிடையாதுதான்" இருந்த போதிலும்,

अनालोच्य निजां शक्तिमदृष्ट्वा कार्यगाधताम् ।
औत्सुक्यादवगाहन्ते मन्दा मज्जन्ति चातलम् ॥

—நீலகண்ட விஜயசம்பூ III-4

தங்களின் சக்தியை கவனியாது செய்ய வேண்டிய காரியத்தின் தன்மையையும் அறியாமல் மூடர்கள் கேவலம் ஆவலினுல் கார்யம் செய்வதில் முனைகிருர்கள். அதனுல் படுகுழியில் மூழ்கிப்போ கிருர்கள். அசுரர்கள் இப்பொழுதிருக்கும் மஹோன்னத நிலையில் தேவர்களிடமிருந்து ஒரு தூதன் சென்ருல் அவனை அவர்கள் ஏறெடுத்தும் பாரார்கள். வீண் அவமானம் தான் ஏற்படும்'' என்று. மறுபடியும் இந்திரன், ''மஹாவிஷ்ணுவே இவ்வாறு கூறியிருப்பதால் இது செய்யத் தகுந் தது'' என்று பிருஹஸ்பதியை வேண்ட, அவர் அசுர குருவாகிய சுக்ராசார்யாரின் நிலையத்திற்குச் செல்லுகிருர். அங்கு அவ்விரு பெரியாருக்கு மிடையே சாதுர்யமான வாதம் நடைபெறுகிறது. கடைசியில் சுக்ராசார்யர், பிருஹஸ்பதியை பலிச் சக்கரவர்த்தியிடம் அழைத்துப் போகிருர். ஒருவருக் கொருவர் க்ஷேம சமாசாரங்களைப் பேசிய பிறகு, பிருஹஸ்பதி தம்மிடம் சொன்ன விஷயங்களை சுக்ரா சார்யார் எடுத்துரைத்து, அமிருதத்தை அடைந்து அசுரர்கள் பயனடையலாமாதலால் அவ்வாறே செய்யலாம் என்கிருர். பலியும் இதை ஆமோதிக்க, அசுரர்களும் தேவர்களும் சந்தித்து மேற்செய்ய வேண்டியதைப்பற்றி ஆலோசிக்கிருர்கள். சிவனின் கிருபையால் மந்தரகிரியை பாற்கடலில் ஸ்தாபிக்

கிருர்கள். ஆனுல் அது சமுத்திரத்திற்குள் மூழ்கி விடும் போலிருக்கும் சமயத்தில் பகவான் விஷ்ணு கூர்மாவதாரம் எடுத்து அதைத் தன் முதுகில் தாங்கு கிருர். அடுத்தபடியாக வாசுகியைக் கொண்டுவர அசுரர்கள் பாதாள லோகம் செல்லுகிருர்கள். வெகு சிரமத்துடன் அசுரர்கள் வாசுகியை சுமந்து வரு வதை நோக்குங்கால், பின்னுல் அவர்களுக்கு அமி ருதம் கிடைக்கப் போவதில்லே என்பதை எண்ணி னுல் நமக்கு அவர்களிடம் ஒரு அனுதாபம் ஏற்படு கிறது.

पायंपायं पवनमभितः स्थौल्यमापाद्यमानं
वाहंवाहं फणधरपतिं विश्लथस्कन्धबन्धाः ।
प्रत्युद्यातैः सुरपरिबृढैर्भारविश्रान्तिहेतोः
सार्धं दैत्या भुवि निदधिरे संनिधौ शार्ङ्गपाणेः ॥

—நீலகண்ட விஜயசம்பூ III-67

''காற்றை உண்டு உண்டு பருத்திருக்கும் வாசு கியை சுமந்து சுமந்து தோள்கள் நெகிழ்ந்தவர் களாய், களேப்புத் தெரியாமலிருக்கும் பொருட்டு தேவர்களால் எதிர்கொண்டு அழைக்கப்பட்டவர் களாய், அசுரர்கள் சாரங்கபாணியின் முன்னுள்ள பிரதேசத்தில் அந்த வாசுகியை வைத்தார்கள்''.

அதன் பிறகு சமுத்திரத்தில் ஸ்தாபிக்கப்பட்ட மந்தர மலேயை வாசுகியால் வளேத்துக் கட்டி, வாசு

கியின் தலைப்பக்கத்தில் அசுரர்களும், வால்பக்கத்தில் தேவர்களும் நின்று சமுத்திரத்தைக் கடைய ஆரம்பிக்கின்றனர். சிறிது நேரம் கடைந்ததும், சமுத்திரத்திலிருந்து உண்டான விவரிக்க முடியாத ஒரு உஷ்ணம் அசுரர்களையும் தேவர்களையும் வாட்டுகிறது. அது மட்டுமல்ல; மூன்று உலகங்களுமே அந்த வெப்பத்தினால் நாசமாகிவிடுமென்று தோன்றுகிறது. தேவர்களின் நிலையை கவி வர்ணிக்கிறார்.

ऊष्माणावववहद्विभावसुरुभौ सांसिद्धिकागन्तुकौ
सस्यन्दे क्वथितं शरीरमभितः पाथोमयं पाशिनः ।
सर्वाङ्गीणदृगन्तकन्दळदतिस्फाराश्रुधाराशत
सेकंसेकमनुक्षणं तु मघवा गात्रं दधौ जीवितम् ।।

—நீலகண்ட விஜயசம்பூ IV-8

''சூரியன் இருவகை உஷ்ணங்களை—தன்னிடம் இயற்கையிலே உள்ள உஷ்ணத்துடன் இப்பொழுது புதிதாய்த் தோன்றிய உஷ்ணத்தையும்-தாங்கினான் வருணனுடைய ஜலமயமான சரீரம் கொதித்து ஆவியை கக்கிற்று. இந்திரனுடைய ஆயிரங்கண்களின் ஓரங்களின் வழியாக வழிந்த கண்ணீரே அவனுடைய உடலை திரும்பத் திரும்ப நனைத்து அவன் உயிரைக் காப்பாற்றியது''.

பிரம்மாவோ ஒன்றும் தெரியாது திகைக்கிறார்.

नासौ वह्निर्न हि खलु भवत्यग्निनाऽग्नेःप्रणाशो
नापि क्ष्वेळो न हि गरळतो हानिराशीविषाणाम् ।
नेदं सृष्टं सकृदपि मया नोपदिष्टं त्वया वा
किं व्याहारैर्मम च किमपि क्षुभ्यतीवान्तरात्मा ।

—நீலகண்ட விஜயசம்பூ IV-10;

''இது நெருப்பல்ல. ஏனென்ருல் ஒருக்காலும் நெருப்பிஞல் நெருப்புக்கு நாசம் உண்டாகாது இது விஷமுமல்ல, ஏனென்ருல் விஷத்திஞல் விஷ ஜந்துக்களாகிய ஸர்ப்பங்களுக்கு இடர் ஏற்படாது. இது என்ஞல் ஒருக்காலும் சிருஷ்டிக்கப்படவில்லை. உங்களாலும் அறிவிக்கப்பட்ட வஸ்துவாகத் தோன்றவில்லே. வார்த்தைகளால் என்ன பயன்? என் உள்ளத்தையே இது கலக்கமடையச் செய்கிறது'' என்கிருர். மஹாவிஷ்ணுவின் நிலேயைக் கவனிப்போம்.

म्लायन्त्यां वैजयन्त्यामथ कनकपटे धूसरे धूमजालै-
श्चक्रे निर्ज्वालचक्रे सपदि परिणतस्फोटशङ्के च शङ्खे।
उत्सर्पन्तं समन्तादपि परिकलयन्नुद्भटं कालकूटं
कालात्मा पद्मनाभो मनसि विनिदधे [1]कालसंघर्षयोगम् ।।

—நீலகண்ட விஜயசம்பூ IV-11

1. 'காலஸங்கர்ஷ யோகம்' என்னும் யோகத்தால் பர தேவதையை மனதில் தியானம் செய்தார் என்றும் இதற்குப் பொருள் கூறுகின்றனர்.

"வைஜயந்தி மாலே வாட, பொன்னுடை புகை யால் அழுக்கடைய, சக்கரம் நெருப்பு ஜ்வாலேகள் அற்றுப்போக, சங்கம் விண்டிடுமோ என ஐயமுண் டாக, எங்கும் சூழ்ந்து பரவும் காலகூட விஷத்தை இது ஒருவராலும் தாங்க முடியாதது என்பதை உணர்ந்தவராய், பகவான் மஹாவிஷ்ணு போராத காலபலத்தால் ஏற்பட்டதாக அறிந்தார்".

மிகவும் பயங்கரமான இந்த விபத்திலிருந்து தேவர்களேக் காப்பாற்றக் கூடியவள் சிவசக்தியே என்பதை அறிந்த மஹாவிஷ்ணு மிகுந்த உருக்கத் துடன் அம்பாளே மூன்று சுலோகங்களால் ஸ்துதி செய்கிருர். கருணமூர்த்தியான பரமசிவன் தேவர் கள் முன் அம்பிகா ஸமேதராய்த் தோன்றுகிருர். உலகங்களே அந்த பயங்கரமான ஆபத்தினின்று உய்விக்கும் பொருட்டு, கொடிய விஷமாகிய ஹாலாஹலத்தை தம் உள்ளங்கையிலெடுத்து, வெண்ணேயை விழுங்குவது போல் விழுங்குகிருர் அடுத்த நிமிஷம் பகவானின் உதரத்திலிருக்கும் உலகங்களுக்கு ஆபத்து வரக்கூடாதே என்று எண் ணினவளாய் அவர் கழுத்தை தன் மெல்லிய கரங் களினுல் அம்பிகை வருடுகிருள், பகவானின் மகத் தான இந்த செயலேக்கண்ட விஷ்ணு, பிரம்மா, இந்திரன், பலி, விரோசனன், மற்றும் ஸனகாதி முனிவர்கள் முதலான எல்லோரும் பக்தியில் மூழ்கி மனமுவந்து, அவரை ஸ்தோத்திரம் செய்கின்றனர்

भुञ्जीथा न हलाहलं यदि महादेव त्वमेवंविधं

भुञ्जीरन् किमिमे सुराश्चरुपुरोडाशादिहव्यं मखे ।

आसीथा न यदि स्वयं पितृवने भूतानि संमोह्य-
न्नासीरन् किमिमे जनाः सुकृतिनो हर्म्येषु सौधेषु च ॥
त्वत्प्रसूतास्त्वया गुप्तास्त्वया व्यापारिता वयम् ।
त்वां विदन्तोऽविदन्तो वा त्वामेव प्रीणयामहे ॥

—நீலகண்ட விஜய சம்பூ IV-39, 40

''ஹே மஹாதேவ! இந்த ஹாலாஹலத்தை நீங்கள் பருகவில்லையேல் இந்த தேவர்களெல்லாம் யாகத்தில் கொடுக்கப்படும் சரு, புரோடாசம் முதலிய ஹவ்யங்களை எங்ஙனம் உண்டு மகிழ முடியும்? நீங்கள் மயானத்திலிருந்து கொண்டு பூதகணங்களை மயக்கி வைத்துக் கொண்டிருக்காவிடில் எங்ஙனம் பாக்கியம் செய்தவர்கள் மாடமாளிகைகளிலே வாழ முடியும்? நாங்கள் உங்களுடைய குழந்தைகள் உங்களால் பாதுகாக்கப்படுகிறோம்; உங்கள் சக்தியால் கார்யங்களைச் செய்கின்றோம். தெரிந்தோ தெரியாமலோ உங்களையே பக்திபூர்வமாய் வழிபடுகின்றோம்'' இவ்வாறு ஸ்தோத்திரம் செய்யும் தேவர்களுக்கு அனுக்கிரஹம் செய்து பரமசிவன் மறைகின்றார்.

மறுபடியும் பாற்கடலைக் கடைய ஆரம்பிக்கின்றனர். ஒன்றொன்றாகக் கடலிலிருந்து ஐராவதம், உச்சைசிரவம், காமதேனு, பஞ்ச விருக்ஷங்கள், சந்திரன், அப்ஸர கணங்கள் வெளிவருகின்றன. அதன் பிறகு மஹாலக்ஷ்மியின் அவதாரம் வருணிக்கப்படுகின்றது. ஸமுத்திரத்திலிருந்து வெளிவரும் காக்ஷி.

अभ्यग्रावतरिष्यदर्णवसुताहस्ताग्रसंभावना-
संहृष्यत्कनकारविन्दकलिकासौरभ्यसारस्पृशः।
मन्दं मन्दममन्दचन्दनकिरः पस्पन्दिरे मारुताः
कालोन्निद्रकदम्बडम्बरमभूद्येनाङ्गमङ्गं हरेः ॥

—நீலகண்ட விஜய சம்பூ V-17

என்ற செய்யுளில் வெகு அழகாக அமைந்திருக்கின்றது.

லக்ஷ்மிதேவியும் மஹாவிஷ்ணுவை தன் பதியாக வரித்து அவருடைய வக்ஷஸ்தலத்தை அடைகிருள். மறுபடியும் ஸமுத்திர மதனம் ஆரம்பமாகிறது. தேவர்களும் அசுரர்களும், அவர்களுடைய சிரமத்தின் பயனை அமிருதம் ஒரு கலசத்தில் தன்வந்தரியால் கொண்டு வரப்படுவதை பார்க்கின்றனர். பகவான் பாதத்தில் கலசம் சமர்ப்பிக்கப்படுகிறது. அமிருதத்தைப் பார்த்தார்களோ இல்லையோ அசுரர்கள் அதைத் தாங்களே பருகவேண்டுமென்று தீர்மானித்து தேவர்களுடன் சண்டைக்கு ஆரம்பிக்கின்றனர். அதே சமயத்தில் பகவானும் தேவர்களுக்கு அனுக்கிரஹம் செய்ய ஒரு உபாயத்தை நினைந்தவராய் மறைந்து விடுகிருர். தேவர்களும் அசுரர்களும் ஒருவரோடு ஒருவர் சண்டை செய்து இரு கட்சியிலும் படுகாயங்கள் ஏற்படக் களைப்பு மேலிட்டவர்களாய் ஓர் இடத்தில் அமருகின்றனர். நாலாபக்கமும் பார்வையைச் செலுத்துகின்றனர். அப்பொழுது ஒரு ஆச்சரியமான காக்ஷியைக் காணு

கின்றனர். சோபை மிகுந்த ஒரு நந்தவனம். அங்கே ஓங்கி வளர்ந்த ஸால விருக்ஷங்கள், அவைகளின் கிளைகளில் கோகிலங்கள் இனிமையாய்க் கூவுகின்றன. இந்த ரமணீயமான தோட்டத்தின் நடுவே,

विद्युतमिव विश्रमितुमागतां,साल भञ्जिकामिव संचारशालिनीं, रत्नशलाकिकामिव लब्धजीविकां, शारदचन्द्रिकामिव संपन्नविग्रहां, सौन्दर्यसंपदमिव सान्द्रीभूतां, सांराज्यदेवतामिव तारुण्यस्य, संप्रदायविद्यामिव मदनागमस्य, कामप्यदृष्टचरीं कन्यकामुपलेबिरे ।

"இளைப்பாற வந்த மின்னலோ, நடமாடும் பதுமையோ, உயிர்பெற்ற மாணிக்கக் குன்ருே (கட்டியோ), உருவெடுத்த சரத்கால வெண்ணிலாவோ, திரண்டு வந்த வடிவழகோ, யௌவனப் பருவமென்னும் ஸாம்ராஜ்யத்தின் அதிதேவதையோ, காமகலையின் உண்மை விளக்கமோ என்று பிரமிக்க வைக்கும், முன் ஒரு காலத்திலும் கண்டிராத ஒரு மங்கையைக் கண்டனர்''. கண்டதும் அசுரர்கள் அவளது அழகினுல் மதிமயங்கினவர்களாய் தங்களையே மறந்தவர்களாகின்றனர். அவர்களின் நிலையை ஒரு சிறந்த தன்மை நவிற்சி (ஸ்வபாவோக்தி) அணியின் மூலம் கவி நமக்கு விளக்குகிருர்

भ्रामं भ्रामं करकिसलयं कन्दुके पातयन्ती

स्रस्तं स्रस्तं कुचकलशयोरर्पयन्त्युत्तरीयम् ।

उद्गायन्ती किमपि किमपि स्वैरमुत्कूलरागं
चित्रन्यस्तं कुलमकृत सा दारुणं दानवानाम् ॥

—நீலகண்ட விஜய சம்பூ V-43

''தளிர் போன்ற கையைச் சுழட்டிச் சுழட்டி பந்தின் மேல் வீசியும், நழுவி நழுவி விழுகின்ற மேல் ஆடையை மார்பு பாகத்தில் திரும்ப அணிந்து கொண்டும், மனம் போனபடி ஏதோ அழகான ராகத்தை இதற்கு முன் ஒருவருமே கேட்டிராத அபூர்வமான முறையில் பாடிக்கொண்டும் அவள் அந்த கொடிய சுபாவமுள்ள அசுரக் கூட்டத்தையே, திரையில் எழுதியசித்திரம்போ அசைவற்றிருக்கச் செய்தாள்''. இவ்வாறு மோஹினியாகத் தோன்றி பகவான் அமிருதத்தை இரு சாராருக்கும் சண்டையின்றி தாமே பகிர்ந்து தருவதாகக் கூறி முதலில் தேவர்களுக்கு அமிருதம் முழுவதையும் பரிமாறி வெறும் கலசத்தைக் கீழே வைத்துவிட்டு மறைந்து விடுகிறுர். அமிருதத்தால் புதிய வலிவு பெற்ற தேவர்கள் அசுரர்களுடன் மறுபடியும் போர் தொடுத்து அவர்களே முறியடித்து, பாதாள லோகத்திற்கு துரத்திவிடுகின்றனர். அதன் பிறகு பரம சிவனே வணங்கி தங்கள் இருப்பிடமாகிய ஸ்வர்க்க லோகத்தை அடைகின்றனர். இந்திரன் முன் போல் சக்கரவர்த்தியாய் விளங்குகின்றுன்.

கதையில் செய்யுட்கள் பலவகை விருத்தங்களில் அமைக்கப் பெற்றிருக்கின்றன. அவைகள் மிகவும் எழிலுடன் விளங்குகின்றன. கத்யம் என்று சொல்

லப்படும் வசனப்பகுதிகள் வெகு அழகாகவும், கம்பீரமாகவும், சற்றும் கடினமின்றியும் பாவத்திற்கேற்ற நடையுடனும் கையாளப்பட்டிருக்கின்றன. விசேஷமாக, இந்திரன் பவனி, வைகுண்ட வர்ணனம், ஹாலாஹலத்தின் தோற்றம், பரமசிவனின் ஆவிர்பாவம், தேவர்கள் செய்யும் பரமசிவ ஸ்துதி, மோஹினி அவதாரம் இவ்விடங்களில் உள்ள கத்யங்கள் ஒலி வடிவங்கள் என்றே சொல்ல வேண்டும்.

நீலகண்ட விஜய சம்பூவிற்குப் பிறகு பேரிலக்கியத்திற்கு ஒரு சிறு விடுமுறை அளிக்கிறார் கவி. மந்திரியாய்ப் பணியாற்றியதால் நீண்டகால அவகாசத்துடன் இலக்கிய வேலையைச்செய்ய முடியவில்லை. ஆனால் ராஜ ஸபையில் வேலை செய்வதின் மூலம் அவருக்குண்டான பரந்த அனுபவமும் பல வகையான மனிதர்களின் பழக்கமும், அக்காலத்தில் அவருக்கிருந்த மன உற்சாகமும் சில சிற்றிலக்கியங்களாக வெளிப்பட்டன. 'கலி விடம்பனம்', 'ஸபாரஞ்ஜன சதகம்'-ஒவ்வொன்றும் அனுஷ்டுப் விருத்தத்தில் நூறு சுலோகங்கள் கொண்டன. இவ்விரண்டும் வாழ்க்கையின் விநோதத்தையும், ஆக்கியவனின் மகிழ்ச்சி நிறைந்த நிலையையும் காட்டுகின்றன. உத்தியோக அலுவல்களால் ஏற்பட்ட களைப்புக்கு ஒரு மருந்தாக அவர் இவைகளைக் கருதியிருக்க வேண்டும். ஒருக்கால் மாலை வேளைகளில் வீட்டில் பல நண்பர்களுடன் அவர் ஸல்லாபம் செய்யும் வழக்கமிருந்திருக்கலாம். அந்த சமயங்களில் சுவை

நிறைந்த இந்த சுலோகங்களை நண்பர்கள் கேட்டு ரசிப்பதற்காக அவர் செய்திருக்கலாம்.

கலி விடம்பனம்-முற்றிலும் ஹாஸ்ய காவ்யமே. கலிகாலத்தின் போக்கை நோக்குகிறார் கவி. பல் வேறு தொழில்களைச் செய்து வருபவர்கள்– புரோ ஹிதர், மந்திரவாதி, வைத்தியன், சோதிடர், குடித்தனக்காரர், போலி ஸந்யாஸி—ஒவ்வொரு வரையும் நையாண்டி செய்கிறார். கலி காலத்தின் லக்ஷணத்தைக் குறித்துச் சொல்லுகிறார்—

यत्र भार्यागिरो वेदा यत्र धर्मोऽर्थसाधनम् ।
यत्र स्वप्रतिभा मानं तस्मै श्रीकलये नमः ॥

—கலிவிடம்பனம் சு. 100

''மனைவியின் மொழிகளே மறைகள்; பணந் திரட்டவே தருமம்; தன் புத்தியில் தோன்றுவதே பிரமாணம்; இல் லக்ஷணங்களைக் கொண்ட கலியை வணங்குகின்றேன்''.

சோதிடர் ஒருக்காலும் தவரமாட்டார்.

पुत्र इत्येव पितरि कन्यकेत्येव मातरि ।
गर्भप्रश्नेषु कथयन्दैवज्ञो विजयी भवेत् ॥

—கலிவிடம்பனம் சு. 15

''கர்ப்பந்தரித்திருக்கும் தாயிடம் பெண் பிறக்கு மென்றும், அவள் கணவனிடம் பிள்ளை பிறக்குமென் றும் சொல்லி சோதிடர் வெற்றியையே அடைவார்''

ஆனல் இப்படிப்பட்ட சோதிடரிடம்தான் ஜனங்களுக்கு எவ்வளவு நம்பிக்கை!

अपि सागरपर्यन्ता विचेतव्या वसुन्धरा ।
देशो ह्यरत्निमात्रोऽपि नास्ति दैवज्ञवर्जितः ॥

—கலிவிடம்பனம் சு. 20

"நாடு முழுவதிலும்-கடல் கரை வரை-சென்று பார்த்துவிட்டேன். சோதிடர் இல்லாத ஒரு முழம் இடத்தைக்கூட நான் காணவில்லை".

வைத்தியரையும் கவி விடவில்லை.

भैषज्यं तु यथाकामं पथ्यं तु कठिनं वदेत् ।
आरोग्यं वैद्यमाहात्म्यादन्यथात्वमपथ्यतः ॥

—கலிவிடம்பனம் சு. 25

"தன் விருப்பம் போல் மருந்து; கடினமான பத்தியம். நோயாளி குணமடைந்தால் வைத்யரின் மஹிமை; இல்லையேல் அபத்தியத்தின் விளைவு".

மனைவி அவள் சுற்றத்தார் இவர்களிடம் சிக்கிக் கிடக்கும் குடித்தனக்காரரின் நிலையைக் காட்டுகிறார்

गृहिणी भगिनी तस्याः श्वशुरौ श्याल इत्यपि ।
प्राणिनां कलिना सृष्टाः पञ्च प्राणा इमेऽपरे ॥

—கலிவிடம்பனம் சு. 4

"மனைவி, மைத்துனி, மாமனர், மாமியார்,

மைத்துனன்-இவர்கள் ஐந்து பேர்களே குடித்தனக் காரருக்குக் கலியால் சிருஷ்டிக்கப்பட்ட ஐந்து பிராணன்கள்''.

புதுப்பணக்காரனின் அகந்தையையும் அவர் காண்கிருர்—

प्रामाण्यबुद्धिः स्तोत्रेषु देवताबुद्धिरात्मनि ।
कीटबुद्धिर्मनुष्येषु नूतनायाः श्रियः फलम् ॥

—கலிவிடம்பனம் சு. 60

''புகழ்ச்சியில் தீர்மானமான நம்பிக்கையும், தன்னைத் தெய்வத்திற்கு நிகராகக் கருதும் மதியும், பிறரைக் கேவலம் புழுக்களென்றே கருதும் சுபாவமும் புதுப்பணத்தின் விளைவாம்''.

காலக்ஷேபத்திற்கு சுலபமான வழியை நமக்குக் காட்டுகிருர் கவி—

सदा जपपटो हस्ते मध्ये मध्येऽक्षिमीलनम् ।
सर्वं ब्रह्मेति वादश्च सद्यः प्रत्ययहेतवः ॥

—கலிவிடம்பனம் சு. 90

''கையில் எப்பொழுதும் ஜபமாலை; இடை இடையே கண்களை மூடுதல்; எல்லாம் பிரஹ்மம் என்னும் பேச்சு; காலக்ஷேபத்திற்கு கைகண்ட வழி இதுவே''.

ஸபாரஞ்ஜன சதகத்தின் அமைப்பு வேறு விதம்

இதில் வெறும் ஹாஸ்யம் இல்லே. கற்ருேரைக் களிப்பிப்பதற்காக எழுதப்பட்டது. கல்வியின் உயர்வு, கவியின் சக்தி, வீரத்தின் மஹிமை, விதியின் விளேயாட்டு, பொறுமையின் பெருமை, தருமத்தின் உன்னதம், பொருளின் அவசியம், இல்வாழ்க்கையின் இன்பம்—இவையெல்லாவற்றையும் நுட்பமாயும் எழிலுடனும் வருணிக்கிருர்.

उद्यन्तु शतमादित्या उद्यन्तु शतमिन्दवः ।
न विना विदुषां वाक्यैर्नश्यत्याभ्यन्तरं तमः ॥

—ஸபாரஞ்ஜனம் சு. 3

"நூறு சூரியர்கள் உதிக்கட்டும்; நூறு சந்திரர்கள் உதிக்கட்டும். கற்ருேர் மொழிகளன்றி மனிதனின் அஞ்ஞான இருள் அகலாது".

शास्त्रेषु दुर्ग्रहोऽप्यर्थः स्वदते कविसूक्तिषु ।
दृश्यं करगतं रत्नं दारुणं फणिमूर्धनि ॥

ஸபாரஞ்ஜனம் சு. 14

"சாஸ்திரங்களில் கடினமாய்த் தோன்றும் அதே கருத்துக்கள் கவிகளின் செய்யுட்களில் எளிதில் விளங்குகின்றன. ஸர்ப்பத்தின் முடிமேலிருக்கும் பொழுது பயத்தைக் கொடுக்கும் ரத்னம் உள்ளங்கையிலிருந்தால் அழகுடன் விளங்குகிறது".

कः प्रसूते पुरोवातं कः प्रेरयति वारिदम् ।
प्राप्ते तु श्रावणे मासि भवत्येकार्णवं जगत् ॥

—ஸபாரஞ்ஜனம் சு. 63

''மேல் காற்றை ஆக்குபவன் யார்? மேகத்தை ஏவுகின்றவன் யார்? ஆவணித் திங்கள் பிறந்தால் உலக முழுதும் ஜல ஸமுத்திரமாக ஆகவில்லையா?''

किं दातुरखिलैर्दोषैः किं लुब्धस्याखिलैर्गुणैः ।
न लोभादधिको दोषो न दानादधिको गुणः ॥

—ஸபாரஞ்ஜனம் சு. 36

''கொடுப்பவனிடம் எவ்வளவு குறைகளிருந் தாலென்ன? கருமியிடம் எவ்வளவு குணங்களிருந் தாலென்ன? கொடையினும் சிறந்த குணமுமில்லை; லோபத்தினும் இழிவான குற்றமுமில்லை''.

இவ்வாறு பேசுகிருர் வாழ்க்கையில் வெற்றி கண்ட நீலகண்டர். ஆனல் இம்மனோநிலை நீடித் திருக்கவில்லை. உற்சாகம் குன்றி ஏதோ ஒரு வித மான சஞ்சலம் மனத்தில் தோன்றுகிறது. அரண் மனையில் வேலை பார்த்து வருவதில் ருசி குறை கின்றது. மதுரைக்கு வருமுன் தாம் நடத்திய வாழ்க் கையை எண்ணிப்பார்க்கிருர். அது ஒரு புது சோபையுடன் காட்சியளிக்கிறது. ஏது! தாம் பிற் காலத்தில் தமக்குகந்த முறையில் வாழ்க்கையை வகுத்துக் கொள்ளவில்லை போலிருக்கிறதே என்னும் ஓர் ஸந்தேகம் தோன்றி மனதில் மட்டற்ற வேத னையை உண்டு பண்ணுகிறது. இம்மனோ நிலையின் விளக்கமாக அமைந்திருக்கிறது ''சாந்தி விலா ஸம்'' என்னும் உருக்கமான காவ்யம். தம் வாழ்க்கை அனுபவத்தை முழுவதும் பரிசீலனை செய்து கேவலம் உலக வாழ்க்கையில் எவ்வளவு வெற்றி கண்டாலும் மனதிற்கு நிம்மதி கிடைப்ப

தில்லை என்று தெரிந்து கொள்ளுகிருர். இதன் பயனுக சாந்தியை நாடிச்செல்லும் ஜீவனின் மனோநிலையை அவர் விவரிக்கிருர். உள்ளடங்கியிருக்கும் ஒரு சோகம் ஆனால் அந்த சோக நிலையிலும் உயர்ந்த ஹாஸ்யத்தின் (irony) சேர்க்கை, இக் காவ்யத்திற்கு ஒரு தனி ருசியை அளிக்கிறது. இந்த காவ்யத்தில் அவர் கையாண்டிருக்கும் விருத்தம் 'மந்தாக்ராந்தா' என்ற பெயர் கொண்டது. உணர்ச்சி மிகுந்த ஒரு உள்ளத்திலிருந்து கருத்துக் கள் வெளிப்படும் பொழுது அவை தயங்கித் தயங்கியே வரும். இந்த பாவத்திற்கேற்ப, ஒவ்வொரு பாதத்திலும் 4வது அக்ஷரம், 10வது அக்ஷரம், 17 வது அக்ஷரம் இவைகளில் யதியை உடைய விருத் தத்திற்கு 'மந்தாக்ராந்தா' என்ற பெயரே காரணப் பெயரோ என்று தோன்றுகிறது.* காதலியை நினைந்து வருந்தும் ஒரு யக்ஷனின் சோகத்தை விளக்கக் காளிதாசன் மேகஸந்தேசத்தில்

---

*मन्दाक्रान्तायां प्रतिपादं प्रथमतः चतुर्षु, पश्चात् षट्सु, परस्ताच्च सप्तस्वक्षरेषु यतेर्विद्यमानतया विरहविक्लबस्य नायकस्य सन्देशावसरे क्रमेण किंचिद्विलम्ब्य विलम्ब्य निश्वासविच्छेदः सुकर इति तदिदं वृत्त- मानुभाविकेन महाकविना समनुसृतमिति ब्रूमः। अत एव चेदं वृत्त. क्रमेण आरोहस्य मन्दमाक्रमणान्मन्दाक्रान्तापदेन व्यपदिश्यत इति च कलयामः ॥

[R. V. Krishnamachariar in his introduction to 'Meghasandesa' published by Sri Vani Vilas Press—Srirangam.]

இந்த விருத்தத்தைக் கையாண்டான். சீதாதேவி யின் பிரிவால் துயருற்ற ராமபிரானின் சோகத்தை விளக்க வேங்கடநாதர் (தேசிகர்) இதே விருத் தத்தை ஹம்ஸ ஸந்தேசத்தில் உபயோகப்படுத் தினர். இச்சிறு காவ்யத்தில், ஈசுவரனிடமிருந்து பிரிந்து உழலும் ஜீவனின் நிலையை அதே மந்தா க்ராந்தா விருத்தத்தால் விளக்கியிருப்பது பொருத் தமே. ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத நீதி சுலோகங்களாலாக்கப்பட்டதல்ல இந்நூல். கவி யின் வாழ்க்கை அனுபவம் முழுவதையும் அடிப் படையாகக் கொண்டிருக்கிறது.

மனைவியை மகிழ்விக்க தாம் எடுத்துக்கொண்ட பிரயாசை, மக்களின் படிப்பிலும் போஷிப்பிலும் தாம் காட்டிய சிரத்தை, பந்துக்களுக்குச் செய்த உதவி, மன்னனை மகிழ்விக்கப் பட்டபாடு— எல்லாம் முடிவில் ஒரு பிரயோஜனமும் அளிக்கவில்லை. நாம் பரலோக யாத்திரை செய்வது என்னவோ நிச்சயம். அதனல் அங்கு செல்வதற்கு ஆயத்தம் செய்தல் அவசியமே. எனினும் சரீரத்தில் நமக் குள்ள அபிமானம், போகத்தில் உள்ள தேட்டம், மனதை அடக்குவதில் உள்ள அசக்தி இவைகளை உதரித்தள்ள முடியவில்லை.

அவர் தீட்டியிருக்கும் வயோதிக தசையின் சித் திரம் இயற்கையாக இருக்கிறது. வயோதிகம் மிகவும் கஷ்டம் என்ருர் பர்த்ருஹரி. நீலகண்டரோ அந்தக் கஷ்ட தசையிலும் சரீரத்தைக் காப்பாற்றி

உயிருடன் வாழவேண்டும் என்று எண்ணும் மடமையைக்கண்டு ஏளனம் செய்கிறார்:-

चक्षुष्यन्धे चलति दशने श्मश्रुणि श्वेतमाने
सीदत्यङ्गे मनसि कलुषे कम्पमाने कराग्रे ।
दूतैरेतैर्दिनकरभुवः शश्वदुद्बोध्यमाना-
स्त्रातुं देहं तदपि भिषजामेव सान्त्वं वदामः ।।

—சாந்திவிலாஸம் சு. 11

''பார்வையிழந்த கண்கள்; ஆடும் பற்கள் நரைத்த ரோமங்கள்; சோர்வடைந்த அவயவங்கள்; கலங்கிய மனது; நடுங்கும் விரல்கள்-(இவ்வித நிலைமையிலும்) இந்த யமதூதர்களால் அடிக்கடி எச்சரிக்கப்பட்டும் தேகத்தை எப்படியாவது காப்பாற்றிக் கொள்ளலாம் என்று நினைத்து நல்வார்த்தை கூறி வைத்தியரை அழைக்கிறோம்''

காலத்தின் போக்கை அபூர்வமாய் உணர்த்துகிறார்:-

यामे यामे गलति वपुषः स्रंसते संधिबन्धः
श्वासे श्वासेऽपि च विचलति क्षीयते दीर्घमायुः ।
भुक्ते भुक्तेऽपि च सुखलवे लुप्यते पुण्यराशिः
कृत्ये कृत्ये निरवधि पुनर्वर्धते पातकं नः ।।

—சாந்திவிலாஸம் சு. 16

''நிமிஷத்திற்கு நிமிஷம் நம் சரீரத்தின் கட்டு தளர்ச்சியுறுகிறது. மூச்சுக்கு மூச்சு நீண்ட ஆயுளும் குறைகின்றது. இன்பத்தை நுகர நுகர நமது புண்ணியக் குவியல் குறைகின்றது. (கர்மத்தை) செய்யச் செய்ய நம் பாபமூட்டை பருக்கின்றது''

ஆழ்ந்து யோசனை செய்தால் ஓரளவு வைராக்ய புத்தி நமக்கு உண்டாகிறது. ஆனால் பிரகிருதியின் ஆதிக்யம் எளிதில் வெல்லக் கூடியதில்லை.

आयान्त्यग्रे ननु तनुभवा उत्तमर्णा इवेमे
शय्यालग्नाः फणभृत इवाभान्ति दारा इदानीम् ।
कारागेहप्रतिममधुना मन्दिरं दृश्यते मे
तत्र स्थातुं प्रसजति मनो न क्षणं न क्षणार्धम् ॥
जातं जातं गतमपि गतं बाल्यतो लौल्यतो वा
नेतः स्थेयं क्षणमपि गृहे मुञ्चतः को मुहूर्तः ।
इत्यत्यन्तव्यवसितधियो निःसरन्तोऽपि गेहा-
दावर्तन्ते झटिति रुदतां सान्त्वहेतोः शिशूनाम् ॥

—சாந்திவிலாஸம் சு. 21, 22

''எதிரில் அங்குமிங்கும் உலாவும் பிள்ளைகளைக் கண்டால் கடன்காரரைப்போல் தோன்றுகிறது; மனைவியைப் பார்த்தால் படுக்கையில் உரையும் பாம்பு போல் தோன்றுகிறது. வீடோ ஒரு பெரிய

சிறையாய் காணுகின்றது. அவ்விடத்தில் ஒரு க்ஷணமும் ஏன் அரை க்ஷணம்கூட மனம் இருக்க விரும்பவில்லை'' ''சிறு பிள்ளைத்தனத்தாலோ சாபல்யத்தாலோ நடந்தது நடந்துவிட்டது. போனதும் போய்விட்டது. இனிமேல் தாமதிப்பானேன். துறந்து செல்வதற்கு முஹூர்த்தமா பார்க்க வேண்டும்? இவ்வாறு ஒரே தீர்மானத்துடன் வீட்டை விட்டுச் சென்ற போதிலும் உடனே குழந்தைகள் அழுவதைக் கேட்டு அவைகளை சமாதானம் செய்வதற்காக திரும்பி வந்துவிடுகிருன்''

வைராக்யம் எளிதில் வரக்கூடியதல்ல. அதுவும்

भव्ये देहे पटुषु करणेष्वालये श्रीसमृद्धे
कौमारान्ते वयसि कथमप्यप्रवृत्ते च दुःखे ।
प्रत्यक्पुष्पीप्रसवविधया यस्य पुंसो निसर्गात्
प्रत्यग्वक्त्रं भवति हृदयं कस्ततोऽप्यस्ति धन्यः ॥

—சாந்திவிலாஸம் சு 48

''திடமான சரீரம்; நல்ல முறுக்குடன் விளங்கும் இந்திரியங்கள்; பூரண லக்ஷ்மீ கடாக்ஷமுள்ள வீடு. சரியான யௌவனப் பருவம்; கஷ்டம் என்பதே தெரியாத நிலை; (இவ்வளவும் ஒருங்கே அமையப் பெற்ற) எந்த ஒரு மனிதன் உள்நோக்கிப் பூக்கும் நாயுருவி புஷ்பம் போல் தன் மனதை உள்ளே திரும்பச் செய்கிருனே அவனிலும் பாக்கியசாலி யுளனே'' என்று சொல்லும் பொழுது தமக்கு அந்த

நிலை கிட்டுமோ என்று கவி ஸந்தேகப்படுகிருர் என்று தோன்றுகிறது. இவ்வாறு தத்தளிப்பதைக் காட்டிலும் ஈசுவரனிடம் பிரபத்தி பண்ணித் தன்னை ஈடேற்றும் பொறுப்பை அவரிடம் ஒப்படைப்பதே சிறந்தது என்று எண்ணி அவ்விதமே செய்கிருர். அதனுல் மனம் அடங்கிய ஒரு நிலையை அடைகிருர். இதுவே சாந்தியின் விலாஸம்.

சாந்தி விலாஸத்தில் வைராக்யத்தின் அவசியத்தை உணர்த்திஞர். இனி வைராக்யத்தின் லக்ஷணத்தையும், அதன் உயர்வையும் அதை சம்பாதித்துக் கொள்வதற்கான வழியையும் "வைராக்ய சதகத்தில்'' விளக்குகிருர். ஆர்யா, உபகீதி என்னும் இருவகை (ஜாதி) விருத்தங்கள் காவ்யத்தில் கையாளப்படுகின்றன. ஒரு நயமான ஹாஸ்யம் காவ்யத்தின் முக்கியச் சிறப்பென்று சொல்லலாம். பூலோக ஸ்வர்க்கலோக போகங்களின் தன்மையை விளக்கி அவைகள் நிலையற்றவை என்பதை நிருபிக்கிருர்.

दाराः पुत्रेषु रताः पुत्राः पितृधनपरिग्रहव्यग्राः ।
रोदनशरणा जननी परलोकगतस्य को बन्धुः ।।

வைராக்ய சதகம் சு. 29

மனைவியோ மக்களிடம் பிரியத்தைச் செலுத்துகிருள். பிள்ளைகளோ தகப்பஞரின் சொத்தைப்பற்றுவதிலேயே கருத்துடையவர்களாயிருக்கின்றனர்.

தாயாரோ அழுகையே அடைக்கலமென்றிருக்கிருள் அவ்வுலகம் செல்பவனுக்கு உறவினன் யார்?

कुल्या: कृता विशाला: कुड्यान्युपलैर्निबद्धानि ।
क्रीता बलिनो महिषा: कृतकृत्या: स्म इति मन्यन्ते ।।

—வைராக்ய சதகம் சு. 34

"வாய்க்கால்களை துலக்கி விட்டோம்; நல்ல கற்களால் சுவர்களை கட்டி விட்டோம்; கொழுத்த எருமைகளை விலைக்கு வாங்கி விட்டோம்; இவைகளினுல் நம் கடமைகளை (சரிவர) செய்துவிட்டோம் என்று மனிதர்கள் நினைக்கின்றனர்'' என்ன பேதமை!

தவிர வாழ்க்கையில் வேண்டாத விஷயங்களில் எவ்வளவோ காலத்தை வீணுக்குகிருேம்.

वङ्गा: कथमङ्गा: कथमित्यनुयुङ्क्ते वृथा देशान् ।
कीदृक्कृतान्तपुरमिति कोऽपि न जिज्ञासते लोक: ।।

—வைராக்ய சதகம் சு. 76

"வங்க தேசம் எத்தன்மையானது, அங்கதேசம் எத்தன்மையானது என்றெல்லாம் தேசங்களைப்பற்றி பயனில்லாமல் விசாரிக்கின்ருேம். ஆனுல் யமதர்மராஜனின் தேசம் எத்தன்மையானது என்பதை அறிய விரும்புகிறவன் இந்த உலகில் ஒருவனைக் கூடக்காணுேம்''

நல்ல கர்மாவிஞல் ஸ்வர்க்க லோகத்திற்குச் செல்லுவதாக வைத்துக் கொள்வோம். அங்குதான் என்ன கிடைத்துவிடுகிறது?

निमिषन्त्यत्र तरुण्यस्तत्र तरुण्यो न निमिषन्ति ।
ईदृक्षो हि विशेषः स्वर्गः स्वर्ग इति किं तत्र ॥

—வைராக்ய சதகம் சு. 60

''இங்குள்ள மங்கையர் கண் சிமிட்டுகின்றனர்; அங்குள்ள மங்கையர் கண் சிமிட்டுவதில்லை. இந்த ஒன்றே ஸ் வ ர் க் க த் தி ல் விசேஷம். ஸ்வர்க்கம் ஸ்வர்க்கம் என்று (கொண்டாடப்படும்) அந்த இடத்தில் வேறு என்ன இருக்கிறது? (ஒரு விசேஷமும் இல்லை).

गच्छत्वमरावत्यां गच्छतु चतुराननस्य वा नगरे ।
पुनरागन्तव्यं यदि पुंसा किं साधितं भवति ॥

—வைராக்யசதகம் சு. 62

''அமராவதிக்குச் செல்லட்டும், அல்லது பிரம்மாவின் நகரத்திற்கே செல்லட்டும். (புண்ய பலன் கழிந்ததும்) திரும்பவும் பூலோகத்திற்கு வரவேண்டுமாஞல் மனிதஞல் அடையப்பட்டதுதான் என்ன?''

அழிவற்ற ஆனந்தத்தை அடைய வேண்டுமாஞல் அதற்கு உபாயம் என்ன என்பதைக் கவியே நமக்கு உபதேசம் செய்கிருர்:—

त्यज संसारमसारं भज शरणं पार्वतीरमणम् ।
विश्वसिहि श्रुतिशिखरं विश्वमिदं तव निदेशकरम् ॥

—வைராக்யசதகம்சு. 91

''சுவையில்லாத இஹலோக வாழ்க்கையிலுள்ள பற்றை விடு; ஸாக்ஷாத் உமாபதியை தஞ்சமடைந்து வழிபடு. உபநிஷத் வாக்யங்களில் முழு நம்பிக்கையையும் வை—இந்த உலகம் முழுவதும் உன் ஆக்ஞைக்கு உட்படும்''

இவ்வாறு மனதை வைராக்ய நிலைக்கு இட்டுச் செல்லுகிறார். ஒரு அழகான உருவகத்தின் மூலம் வைராக்யத்தின் லக்ஷணத்தை நமக்கு போதிக்கிறார்

धीसचिवं धैर्यबलं संकल्पविरोधि शान्तिधनम् ।
विश्वत्रयविषयमिदं वैराग्यं नाम साम्राज्यम् ।।

—வைராக்யசதகம் சு. 2

''வைராக்யம் என்றோர் ஸாம்ராஜ்யம் இருக்கின்றது. புத்தி அதன் மந்திரி; மனோதைர்யமே அதன் படை; ஆசை அதன் பகைவன்; சாந்தி (மன அமைதி) அதன் சொத்து; மூவுலகங்களும் அதன் பரப்பு''

வைராக்யம் அடைந்தவனையும் நமக்கு நன்கு தெரியப்படுத்துகிறார்:—

भिक्षाप्रदा जनन्यः पितरो गुरवः कुमारकाः शिष्याः ।
एकान्तरमणहेतुः शान्तिर्दयिता विरक्तस्य ।।

—வைராக்யசதகம் சு. 4

துறவிக்கு—அன்னம் படைப்பவள் அன்னை; கல்வி புகட்டும் ஆசாரியன் தகப்பன்; கற்கும் மாண

வர்கள் எல்லோரும் மக்கள்; தனிமையில் ஆனந்த மாயிருப்பதற்குக் காரணமாகிய மன அமைதியே மனைவி''

ஆனால் நம் ஆயுள்காலம் எப்பொழுது முடியும் என்று அறிய முடியாத நாம் எவ்வளவு காலம் வைராக்யத்திற்காகச் செலவழிக்க முடியும்? சாந்தி விலாஸத்தின் இறுதியில் எண்ணிய மார்க்கத்தை ஊர்ஜிதம் செய்து பிரபத்தியிலேயே தம்முடைய மனக்கொந்தளிப்பிற்கு ஓய்வைப் பெறுகிறார். இந்த அனுபவத்தை ''ஆனந்த ஸாகரஸ்தவம்'' என்னும் காவ்யத்தில் எடுத்து விளக்குகிறார். மதுரை மீனாக்ஷியைக் குறித்துச் செய்த நூல். இதில் உணர்ச்சியின் நிறைவைக்காண்கிறோம். முதல் பகுதியில் இன்னது செய்வதென்று தெரியாத ஒரு தத்தளிப்பு. ஞான மார்க்கம், கர்ம மார்க்கம், பக்தி மார்க்கம் ஒவ்வொன்றையும் பரிசீலனை செய்கிறார். ஒன்றுவது அவருக்கு உய்யும் வழியைக் காட்டவில்லை.

वेदान्तवाक्यजनितं विमलं विचारै-
रासाद्य बोधमनुचिन्तनतोऽपरोक्षम् ।
मुक्तिं व्रजन्ति मनुजा इति सूक्तिमाद्या-
मालम्ब्य कस्तरितुमर्हति शैलकन्ये ॥

ஆனந்தஸாகரஸ்தவம் சு. 7

''மலையின் மகளே, உபநிஷத் வாக்யங்களுடைய உண்மையான அர்த்தத்தை நீண்டகாலம்

10

ஆராய்ந்து தெளிவான அறிவைப் பெற்று அதையே சிந்தனை செய்து கொண்டிருந்தால் முடிவில் அபரோக்ஷஞானம் ஏற்பட்டு மனிதர்கள் முக்தி அடைகிறார்கள் என்று வேதங்கள் சொல்லும் முறையைக் கடைப்பிடித்து துக்கத்தைக் கடக்க யாரால்தான் முடியும்?

कर्म त्यजेम यदि नूनमधःपतेम
यद्याचरेम न कदापि भवं तरेम ।
कर्म त्यजेदिति चरेदिति च प्रवृत्ता
भावेन केन निगमा इति न प्रतीमः ॥

—ஆனந்தஸாகரஸ்தவம் சு. 18

"கர்மத்தை விட்டால் கெடு பாதாளத்தில் விழுவோம். கர்மத்தைச் செய்து கொண்டேயிருந்தால் ஒரு நாளும் கரையேற மாட்டோம். ஆனால் கர்மத்தை விடு என்றும் கர்மத்தைச் செய்யென்றும் என்ன கருத்தில் வேதங்கள் சொல்லுகின்றன என்பது புரியவில்லை.

स्वात्मेतरत्वमवधार्य परत्वबुद्ध्या
यत्प्रीयते गुरुजनेष्विव सैव भक्तिः ।
स्यादेतदेवमियमेव तु मे जिहास्या
द्वैतभ्रमात्किमधिकं भवबन्धमूलम् ॥

—ஆனந்தஸாகரஸ்தவம் சு. 24

ஈசுவரனை தன்னைக் காட்டிலும் வேருகவும்,

தன்னைவிட மிக மேலானவராகவும் எண்ணி, பெரியோர்களிடம் காட்டுவதுபோல் அவரிடம் காட்டும் அன்புதான் பக்தியென்று சொன்னால் இக்காரணத்தாலேயே பக்தி மார்க்கத்தை கடைப்பிடிக்கக்கூடாதென்று தெரிகிறது. நம்மை ஸம்ஸார பந்தத்திற்குள்ளாக்குவதில் த்வைத ப்ரமத்தைவிட (இரண்டாகத்தோன்றும் ப்ரமம்) அதிகமாக (வேறு) என்ன இருக்கிறது?''

அடுத்தபடியாக இன்னும் சில கேள்விகள் எழுகின்றன.

का संसृतिः किमपचारनिबन्धनेयं
कीदृग्विधस्य तव किं क्षतमेतयेति ।
प्रश्ने तु नास्मि कुशलः प्रतिवक्तुमेव
खेदस्तु मे जननि कोऽप्ययमेवमास्ते ।।

—ஆனந்தஸாகரஸ்தவம் சு. 30

''வாழ்க்கையின் காரணமென்ன? யாது பாபத்தினால் நீ அதை அடைய நேரிட்டது? உன் தன்மை என்ன? உனக்கு இதனால் என்ன தீங்கு ஏற்பட்டது. இக்கேள்விகளுக்கு விடைகாணும் ஸாமர்த்யம் எனக்கில்லை. ஆனால் தாயே! சொல்லவொண்ணாத மனவேதனையொன்று என்னை வாட்டுகிறது''.

இவ்வாறு தத்தளிக்கும் நிலையில் திடீரென்று ஒரு வெளிச்சம் தோன்றுகிறது. ''பயனற்ற கேள்வி

கேட்பதை நிறுத்து. அன்னையின் பாதமே அடைக்கலம் என்று கண்டு கொள்'' என்று மனதில் ஒரு குரல் எழுகிறது.

न ज्ञायते मम हितं नितरामुपायो
दीनोऽस्मि देवि समयाचरणाक्षमोऽस्मि ।
तत्त्वामनन्यशरणः शरणं प्रपद्ये
मीनाक्षि विश्वजननीं जननीं ममैव ॥

ஆனந்தஸாகரஸ்தவம் சு. 32

''எனக்கு எது நன்மை என்பதை நான் அறியேன், அதைப்பெறும் வழியையும் அறியேன்; எளியேன் நான்; என் கடமைகளையே சரிவரச் செய்யும் திறமையைப் பெறவில்லை. உலகை எல்லாம் ஈன்ற அன்னையாகிய நீ எனக்கும் அன்னையன்றோ! உன்னைத்தவிர வேறு அடைக்கலம் எனக்கில்லை. உன் பாதமே எனக்குத்தஞ்சம்''.

கவியின் புண்பட்ட உள்ளம் நிம்மதியைப் பெறுகின்றது. துயரெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் அவரை விட்டகலுகிறது. அன்னை நாம் கேளாமலேயே—அருகதையில்லாமலிருக்கும் பொழுதே—நம் பால் கருணை காட்டுகின்றாள் என்பதை अव्याजभूतकरुणा (சு. 1) என்னும் பதத்தால் கவி குறிப்பிடுகிறார்.

இதிலிருந்து அம்பாளின் ஸௌந்தர்யானுபவம் கவிக்குக் கிடைக்கிறது. அது உயர்ந்த செய்யுட்

களாக வெளிப்படுகிறது. நீலகண்டரின் மிக உயர்ந்த கவிதைகள் இவை. ஆழ்ந்த கற்பனை, சிறந்த உவமை, உருவகங்கள், ரமணீயமான நடை இணையற்ற யாப்பு அமைதி-எல்லாவற்றிற்கும் மேல் பக்தி பரவசமடைந்த ஒரு ஜீவனின் உணர்ச்சியின் துடிதுடிப்பு-எல்லாமாய்ச் சேர்ந்து வாசிப்பவர்களுக்கு மட்டற்ற ஆனந்தத்தையும் உற்சாகத்தையும் உண்டுபண்ணுகின்றன. சொல் அழகும் பொருள் நயமும் ஒருங்கே அமைந்து செய்யுட்கள் மிகுந்த குழைவுடனும் கேட்போருக்கு இசை வடிவங்களாக தோன்றுகின்றன. வஸந்த திலக விருத்தத்தின் இனிய யாப்பு அமைப்பு செவிகளில் மனோஹரமாய் ஒலிக்கின்றது. ஒரு நிறைவும் உண்டாகிறது. நான்கு செய்யுட்களை மட்டும் இங்கு மொழி பெயர்த்திருக்கிறேன்.

आचूडमाचरणमम्ब तवानुवार-
मन्तःस्मरन्भुवनमङ्गलमङ्गमङ्गम् ।
आनन्दसागरतरङ्गपरम्पराभि-
रान्दोलितो न गणयामि गतान्यहानि ॥

—ஆனந்தஸாகரஸ்தவம் சு. 53

''தாயே! உலக முழுவதற்கும் மங்களத்தைக் கொடுக்கும் உச்சி முதல் உள்ளங்கால்வரை உன் ஒவ்வொரு அவயவத்தையும் அடிக்கடி மனதில் நினைந்து நினைந்து (அந்நினைவினால்எழும்)ஆனந்தக் கடலின் அலைவரிசைகளால் தாலாட்டப்பட்டவனாய் கழிந்த நாட்களின் கணக்கையே மறந்துவிட்டேன்''

गर्भे निवेश्य भुवनानि चतुर्दशापि
संरक्षितुं कलितनिश्चितया भवत्या ।
प्राकारमेव रचितं परितोऽपि नून-
मूहे सुवर्णमयमेदुरपट्टबन्धम् ॥

—ஆனந்தஸாகரஸ்தவம் சு. 70

''ஈரேழு உலகங்களையும் உனது உதரத்தில் வைத்திருக்கும் நீ அவைகளைக் காப்பாற்றுவதற்காக அதைச்சுற்றி ஒரு மதில் எழுப்பியதுபோல் உனது இடுப்பைச் சுற்றி நீ தங்க ஒட்டியாணம் தரித்திருப்பது''

नासामणिस्तव शिवे चिरसंस्तवेन
प्रत्याहृते मनसि भाति तपोधनानाम् ।
अज्ञानसंततिनिशात्ययसूचनार्थ-
माविर्भवन्त्यसुरदेशिकतारकेव ॥

—ஆனந்தஸாகரஸ்தவம் சு. 83

''மங்களகரமானவளே! நீண்டகால தபசினால் வெளியில் போகவிடாமல் தடுக்கப்பட்ட முனிவர்களின் மனதில் உன்னுடைய புல்லாக்கு நீண்ட அஞ்ஞான இரவின் அழிவைப் புகட்டும் வெள்ளி உதயமாய் விட்டது போல் பிரகாசிக்கின்றது. [வெள்ளி உதயமாவது விடியற்காலம் நெருங்கி விட்டதென்பதைக் குறிக்கின்றது]

आकर्णमुल्लसति मातरपाङ्गदेशे
कालाञ्जनेन घटिता तव भाति रेखा ।
शैवालपङ्क्तिरिव संततनिर्जिहान-
कारुण्यपूरपदवीकलितानुबन्धा ॥

—ஆனந்தஸாகரஸ்தவம் சு. 91

தாயே! காதுவரை நீண்டிருக்கும் உனது கண்களின் ஓரங்களில் தீட்டப்பட்டிருக்கும் கருப்பு மையானது உனது கண்ணென்னும் தடாகத்தில் இடைவிடாது எழும் கருணை வெள்ளத்தினுல் கரையோரமாய் ஒதுக்கப்பட்ட பாசி வரிசைகள் போல் தோன்றுகிறது''. [அம்பிகையின் கண்ணை ஒரு தடாகத்திற்கும் தீட்டியிருக்கும் மையை பாசி வரிசைக்கும் ஒப்பிட்டிருப்பது மிகப்பொருத்தமே]

ஆனந்த ஸாகர ஸ்தவத்தில் ஏற்பட்ட ஈசுவரானுபவம் கவிக்கு மனதில் மிகுந்த அமைதியைக் கொடுத்தது. இந்நிலையில் தான் மிகச்சிறந்த காவ்யத்தை அவர் உலகிற்களித்தார். சிவலீலார்ணவம் அவருடைய மேதையின் அழியாச்சின்னம். இது ஒரு மஹாகாவ்யம். இருபத்திரண்டு ஸர்க்கங்கள் கொண்டது. பரமசிவனின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப் பற்றிக்கூறுகின்றது. இக்காவ்யத்திற்கு மூலம் ஸ்கந்த புராணத்திலுள்ள ஹாலாஸ்ய மாஹாத்மியம் (45-வது கண்டம்). சிவனின் லீலைகளைக் கூறும் இக்கதைகள் ஒரு கவியின் சிறந்த

கவித்திறனை வெளிப்படுத்த உதவுமா என்று சிலர் சந்தேகிக்கக் கூடும். ஆனால் அவர்கள் சிவலீலார்ண வத்தை ஒரு முறை படித்தால் போதும். ஒரு மஹா கவியின் கையில் சாதாரண விஷயம்கூட புது மெருகு பெற்று உயிர் ஓவியமாக அமைகிறது என்பது நன்கு புலப்படும். இக்காவ்யத்தில் செய்யுட்களின் நடை நிதானமும் காம்பீர்யமும் பெற்று விளங்குகிறது. நீலகண்டருடைய நடையின் இரு சிறந்த அம்சங் களாகிய எளிமையும் (அவருடைய ரீதி வைதர்பீ எனப்படும்), அனாவசியமான அணியின்மையும் இதில் நன்றாய்க் காணப்படுகின்றன.

காவ்யம் பாண்டிய தேசத்தின் அழகான வர்ணனையுடன் ஆரம்பமாகிறது. மூன்று லோக சம்பத்தையும் ஒரு பொருட்டாகக் கருதாத பரமசிவனே பாண்டிய நாட்டின் ஆதிபத்தியத்தை விரும்பி சுந்தர பாண்டியனாக அவதரிக்கிறார். மணமான மலையமாருதம் கமழும் பிரதேசமிது. தாமிரபரணி நதி ஓடும் நாடு.

अन्या विशन्त्यः सरितः समुद्र-
मापूरयन्ते जलजन्तुभिः स्वैः ।
रत्नापगा यत्र तु संपतन्ती
रत्नाकरत्वं रमणस्य दत्ते ॥

—சிவலீலார்ணவம் ஸ. 2 சு. 17

கடலில் சேரும் மற்ற நதிகளெல்லாம் தங்களிட

மிருக்கும் மீன், தவளை, முதலை, பாம்பு முதலான பிராணிகளால் அதை நிரப்புகின்றன. ஆனால் தாமிர பர்ணியோ தான் ஸமுத்திரத்துடன் கலக்குமிடத்து முத்தைச் சொறிந்து தனது கணவனுக்கு ரத்னாகரம் என்னும் பெயரை அடையும் பாக்கியத்தைக் கொடுக்கிறாள்''.

இந்த நாட்டில் கதம்பவனத்தில், ஒரு கதம்ப மரத்தின் அடியில் பரமசிவன் ஒரு லிங்கமாக வடிவெடுத்து மூவுலகிற்கும் க்ஷேமத்தையே கொடுத்துக் கொண்டு வாஸம் செய்து வருகிறார். நாளடைவில் இந்தச் செய்தியை அறிந்த தேவர்கள் அங்கு ஒவ்வொரு நாளும் வந்து இறைவனை வணங்குகின்றனர். மனிதர்களும் அங்கு நிகழும் அற்புதத்தைக் காணுகின்றனர். ஆனால் பூஜிப்பதற்கு வேண்டிய தண்ணீர் அங்கு கிடைக்காது வருந்துகின்றனர். பக்தர்கள் துயர் தீர்க்கக் கருதி எம்பெருமான் தம்முடைய சூலத்தை பூமியில் ஊன்ற அவ்விடத்தில் ஒரு அழகிய தடாகம் ஏற்படுகிறது. இதையே சூலதீர்த்தம் என்று கூறுகிறார்கள். விருத்திராசுரனைக் கொன்றதால் பிரஹ்மஹத்தி தோஷம் இந்திரனுக்கு ஏற்படுகிறது. அதற்கு பயந்து எங்கெல்லாமோ அலைந்து திரிந்து முடிவில் கதம்பவனத்தில் சூலதீர்த்தத்தில் ஸ்னானம் செய்வதால் அந்த தோஷம் அவனை விட்டகலுகிறது. இந்திரன் மனமகிழ்ந்து சுந்தர நாதருக்கு ஒரு அழகான கோயில் ஒன்று நிர்மாணம் செய்கிறான். இதே தீர்த்தத்தில்

துர்வாஸ முனிவரின் கோபத்திற்கு ஆளாகி சபிக்கப்பட்ட ஐராவதமும் தன்னுடைய சாபத்திற்கு விமோசனத்தைப் பெறுகின்றது.

தனஞ்ஜயன் என்னும் வர்த்தகன் தன் தொழில் நிமித்தம் வெகுதூரம் பிரயாணம் செய்து ஒரு நாள் மாலை கதம்பவனத்திலுள்ள இப்புனிதமான இடத்தை அடைகிருன். இரவை அவ்விடமே கழிக்க விரும்பியவனுய் அவன் அங்கு அமர்ந்திருக்கும் பொழுது அவன் ஒரு ஆச்சரியமான காட்சியைக் காண்கின்ருன். தேவர்களும், முனிவர்களும் அவ் விடம் வந்து அங்கு கோயில் கொண்டிருக்கும் சுந்தர நாதரை வழிபடுகின்றனர். கந்தர்வர்கள் இசை பாட அப்ஸரப் பெண்கள் நடனம் புரிகின்றனர். பொழுது புலர்ந்ததும் அந்தக் காட்சி மறைந்து விடுகிறது. முனிவர்களும் தேவர்களும் முந்திய இரவு நின்ற இடத்தில் மரங்களும் மிருகங்களும் காலையில் தென்படுகின்றன. இந்த அனுபவத்திஞல் உள்ளம் பூரித்தவனுய் தனஞ்ஜயன், குலசேகர மன்னனின் நகரை அடைந்ததும், மன்னனிடம் கதம்பவனத்தில் தான் கண்டதைக் கூறுகிருன். இதற்கு முன்பே சுந்தரநாதர் மன்னனுடைய ஸ்வப்னத்தில் தோன்றி தாம் கோயில் கொண்டிருக்கும் வனத்தில் அரசனின் தலைநகரை அமைக்குமாறு கூறியிருக்கிருர். எம்பெருமானின் கட்டளையைத் தலைமேற்கொண்டு, கதம்பவனத்தை அழித்து மதுரை மாநகரத்தை நிர்மாணம் செய்து அங்கிருந்து கொண்டு செங்கோல் செலுத்துகின்ருன்

குலசேகரனுக்கு மலயத்வஜன் என்னும் பெயர் கொண்ட மகன் பிறக்கின்ருன். காஞ்சி தேசத்து மன்னனின் மகளாகிய காஞ்சன மாலே என்பாளே மலயத்வஜனுக்கு மணமுடித்து, மகனே மன்னனுக்கி அவனுக்கு நல்ல புத்திமதி கூறி தான் விச்ராந் தியைப் பெறுகிருன். மலயத்வஜன் நீதி வழுவாது அரசாண்டு வருகிருன். நாடு செழித்து வளம் பெற்று விளங்குகிறது. ஜனங்கள் ஆனந்தமாகவே இருக்கின்றனர். ஆனுல் அரசனுக்கு மக்கட்பேறு ஏற்படாததால் அவன் வருந்துகின்ருன். அரசியும் தன்னுடைய குறையை மன்னனிடம்சொல்லுகிருள். மன்னன் இந்த விஷயத்தை தன் குருவாகிய அகஸ் தியரிடம் சொல்லி அவர் கட்டளேப் பிரகாரம் செய்ய வேண்டியதைச் செய்வோம் என்று நினேக்கும் பொழுது அகஸ்தியர் அவன் முன் தோன்றுகிருர். அரசனின் விருப்பத்தை யறிந்து கொண்ட முனிவர் அரசனே அசுவமேத யாகம் பண்ணும்படி கூறு கின்ருர். மேலும் அரசி காஞ்சனமாலே தன்னுடைய முற்பிறப்பில் ஸாக்ஷாத் அம்பிகையே தனக்குக் குழந்தையாக பிறக்க வேண்டுமென்று தவம் செய் திருக்கிருளென்றும், அவள் விருப்பம் இப்பிறப்பில் நிறைவேறுமென்றும் சொல்லுகிருர். [ஸ. 1 to 5]

அசுவமேத யாகத்திற்கு வேண்டிய ஏற்பாடு களே அரசன் செய்கிருன். வஸந்த காலத்திலேயே இந்த யாகம் செய்யத்தகுந்தது. இதை வியாஜ மாகக் கொண்டு கவி வஸந்த காலத்தின் தன்

மையை அழகாக சில செய்யுட்களில் வர்ணிக்கிருர். பெரிய அரசர்களும், முனிவர்களும், மற்றும் எல்லோரும் அங்கு ஒருங்கே கூடுகின்றனர். அகஸ்தியரை அத்வர்யுவாக வரித்து, யாகத்தை விதிப்படி அரசன் செய்து முடிக்கின்ருன். அதன் பிறகு அம்பிகையின் அவதாரத்தை உத்தேசித்து வேருெரு யாகத்தையும் மன்னன் செய்கிருன். முனிவரின் ஆக்ஞையை அனுசரித்து அக்னியை ஸ்தோத்திரம் செய்து அழைக்கவும்,

आज्याहुत्यभिपतनप्रवर्धमाना-
दग्नेस्तत्क्षणमुदियाय कापि कन्या ।
उन्मीलत्कुवलयदामकोमलश्री-
र्लावण्यामृतलहरीविवर्तमूर्तिः ॥

—சிவலீலார்ணவம் ஸ. 6. சு. 72

"நெய்யினுல் செய்யப்படும் ஆஹுதியானது விழுந்து விருத்தியடைந்த அக்னியிலிருந்து, அப்பொழுதே மலர்ந்த அல்லியின் தண்டினும் மிருதுவான சரீரத்துடனும், எழில் பெருக்கின் அலைகள் எல்லாம் திரண்டு உருவெடுத்தது போலும் தோன்றிய ஒரு பெண் வெளிக்கிளம்பினுள்"

அப்பெண் நேராய் தன்னை அணைக்க ஆயத்தமாயிருந்த காஞ்சனமாலையை நோக்கிச் செல்லுகிருள். அரசனும் அரசியும் அடைந்த ஆனந்தத்திற்கு எல்லையில்லை. ஆனுல் அந்தப்பெண்ணின்

மார்பில் மூன்று ஸ்தனங்கள் இருப்பதைக் காணவும் அவர்கள் வருத்தமடைகின்றனர். அப்பொழுது ''வருந்த வேண்டாம். தடாதகை என்னும் பெயருடைய உங்கள் பெண், தனக்கு கணவனுக வரக் கூடியவனை என்று சந்திக்கிருளோ, அன்றே மூன்ருவது ஸ்தனம் மறையும்'' என்று ஒரு அசரீரி கேட்கின்றது. மகிழ்ச்சியடைந்த மன்னன் குழந்தையை அகஸ்தியர் கையில் கொடுத்து மனைவியுடன் முனிவரை வணங்கி நிற்கின்ருன். முனிவரேர மெய் மறந்து நிற்கின்ருர்.

हस्ते गृहीतां कलशोद्भवस्ता-
मध्यात्मविद्यां मुनिमण्डलाय ।
आनन्दबाष्पैः पुलकाङ्कुरैर-
प्यनक्षरं केवलमाचचक्षे ॥

—சிவலீலார்ணவம் ஸ. 6. சு. 85

''அகஸ்திய முனிவர் தம்கையில் தாங்கியிருந்த அத்யாத்ம வித்யா ரூபிணியாகிய அம்பிகையை தம் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுக்க ரோமம் சிலிர்க்க, அங்கு குழுமியிருந்த முனிவர்களுக்கு வார்த்தைகளின்றியே அறியப்படுத்தினுர்'' [அதாவது அகஸ்தியருடைய நிலையிலிருந்து முனிவர்களெல்லோரும் அக்குழந்தையின் உண்மை தத்வத்தை உணர்ந்தனர் என்பது கருத்து]. தடாதகையின் குழந்தைப் பருவம் கழிந்ததும், அவளை அகஸ்தியரிடம் கல்வி பயில வைக்கிருர்கள்.

निरवधिपरमात्मचिन्मयी सा
किमपि यदा निदधे कलासु दृष्टिम् ।
अहमहमिकया तदा परीयुः
सकलकलाश्च सखीजना इवैनाम् ॥

—சிவலீலார்ணவம் ஸ. 7 சு. 25

''பரமாத்மாவின் எல்லையில்லாத அறிவு மயமான அவள் எந்தக் கலைகளில் தன் பார்வையைச் செலுத்தினளோ, அப்பொழுதே நான் முதல் நான் முதல் என்று அந்த எல்லாக் கலைகளும் அவளுடைய தோழிகள் போல் அவளை வந்தடைந்தன''

மலயத்வஜ பாண்டியன் காலக்கிரமத்தில் சிவனடியைச் சேருகின்றான். தடாதகை பாண்டிய தேசத்திற்கு அரசியாக பட்டாபிஷேகம் செய்விக்கப் படுகிறாள். அரசகுல வழக்கத்தை அனுசரித்து தடாதகையும் ஜைத்ர யாத்திரையைத் தொடங்குகிறாள். முதல் நாள் மாலை காவேரி நதியின் கரையை அடைந்து தன் பரிவாரங்களுடன் இரவை அங்கே கழிக்கிறாள். பொழுது புலர்ந்ததும் பிரயாணத்தை மீண்டும் ஆரம்பித்து, எங்கும் வெற்றி முழக்கத்துடன் செல்லுகிறாள். பல நாட்களுக்குப் பிறகு கங்கா நதியின் சமீபத்திற்கு வந்து சேருகிறாள்.

प्रालेयशैलशिखरादवनौ निपत्य
भागीरथीं कनखलं परितो वहन्तीम् ।

दृष्ट्वैव सा स्वयमभूज्जननान्तरीय-
सोदर्यताप्रणयविद्रवदन्तरङ्गा ॥

—சிவலீலார்ணவம் ஸ. 9 சு. 27

''இமயமலையிலிருந்து பூமியில் விழுந்து புனிதமான கனகலம் என்னுமிடத்தைச் சுற்றி ஓடுகின்ற கங்கையை நோக்கியதும், முன் பிறப்பில் தன்னுடைய சகோதரியாயிருந்தாள் என்ற அன்பினுல் தடாதகை மனம் கசிந்து போயினுள்''.

தொன்று தொட்டு பாரத தேச மக்கள் போற்றி பூஜித்து வரும் புனித நதியை கவியும் பரவசத்துடன் வர்ணிக்கிருர்:—

*स्रोतांसि तानि कबळीकृतदिङ्मुखानि
यादांसि तत्र च महान्ति समुल्लसन्ति ।
अप्रेक्षितश्रुतचराण्यवितर्कितानि
चित्रार्पितेव चिरमैक्षत पाण्डचकन्या ॥

—சிவலீலார்ணவம் ஸ. 9 சு. 28

*இந்த சுலோகத்தில் த்வனியின் மூலம் கவி ஸ்வாரஸ்யமான சில கருத்துக்களைக் காட்டுகிருர். முன் சுலோகத்தில் ''கங்கையைப் பார்த்ததுமே முற்பிறவியில் தனக்கு ஸஹோதரியான அவளிடம் உடன்பிறந்த வாஞ்சையால் மனமுருகியவளாக ஆனுள்'' என்று முற்பிறவியின் ஞாபகம் வந்ததாக கூறப்பட்டிருக்கிறது. இந்த சுலோகத்தில் ''அந்த ப்ரவாஹங்களையும் அதிலுள்ள பிராணிகளையும் சித்திரத்தில் எழுதப்பட்டவள் போல் (அசைவற்று நின்று) வெகுநேரம் பார்த்

''பாண்டியகுமாரி தான் முன் பார்த்திராததும் கேட்டிராததும் ஊஹிக்க முடியாததும் திசைகளை மூழ்கடிக்கின்றதுமான அந்த பிரவாஹங்களையும் அதில் ஸஞ்சரிக்கும் நீரில் வாழும் பெரிய பிராணிகளையும், சித்திரத்தில் எழுதப்பட்டவள் போல் (அசைவற்று நின்று) வெகுநேரம் பார்த்தாள்''.

निश्रेणिकेयमपवर्गपदाधिरोहे

नौकेयमम्ब दुरितार्णवसंप्रतारे ।

தாள்'' என்று கூறுகிறார். கங்கையைப் பார்த்ததும் மீனாக்ஷிக்கு, தான் முற்பிறவியில் ஹிமவானின் குமாரியாக பார்வதியாக அவதரித்து இங்கு வஸித்த போது கண்ட காக்ஷிகளெல்லாம் ஞாபகத்திற்கு வந்துவிட்டன. பரமேசுவரனை அடைய தான் தவம் செய்ததும் தன்னுடைய விவாஹமும் ஞாபகத்திற்கு வந்தது. மேலும் பகீரதன் பிரார்த்தனைக்காக பரமசிவனுடைய சிரஸ்ஸில் மிகுந்த கர்வத்துடன் கங்கை விழும்பொழுது கண்ட பிரவாஹத்தின் காக்ஷிகளும் ஞாபகத்துக்கு வந்தன. இவ்விதம் பழைய ஞாபகங்களுடன் பார்த்தாள் என்பதை (तानि स्रोतांसि) அந்தப் பிரவாஹங்களையென்பதாலும் (चित्रार्पितेव चिरमैक्षत) சித்திரத்தில் எழுதப்பட்டவள் போல வெகு நேரம் பார்த்தாள் என்பதாலும் கவி உணர்த்துகிறார். நாம் நெருங்கிப் பழகியனுபவித்த பொருளை வெகு காலம் கழித்து பார்க்கும் பொழுது பழைய ஞாபகங்களுடன் அதையே கூர்ந்து கவனிப்பது வழக்கம். கவிக்கும் இந்த இடத்தில் தான் இயற்றிய கங்காவதரண காவ்ய வர்ணனைகள் ஞாபகத்திற்கு வந்திருக்கக்கூடும்.

एषा सुधा भवविषज्वलनाभिषङ्गे
ज्योत्स्नेयमान्तरतमोभिभवे जनानाम् ॥

—சிவலீலார்ணவம் ஸ. 9 சு. 33

"உலக மக்களுக்கு—மோக்ஷ பதவிக்கு ஏறிச் செல்லும் ஏணியாவாள் இந்த கங்கை; பாபக்கடலைக் கடப்பதற்கான ஓடம் இவள்; ஸம்ஸாரமாகிய விஷத்தின் அனலை அவிக்கும் அமிருதம் இவள்; அஞ்ஞானமாகிய இருளை அகற்றும் வெண்ணிலா இவள்"

கங்காநதியில் எல்லோரும் நீராடுகின்றனர். மறுபடியும் அங்கிருந்து புறப்பட்டு, இமயமலையைக் கடந்து கிம்புருஷவர்ஷம், ஹேமகூட பர்வதம், ஹரி வர்ஷம், நிஷத பர்வதம், கேதுமால வர்ஷம், நீல பர்வதம், ஹிரண்மயம், வெள்ளை மலை, சிருங்கிணம், குருவர்ஷம் முதலியவைகளையும் கடந்து வட கடலை அடைகின்றனர். அங்கு ஸமுத்திர ராஜன் தடாதகையைப் பணிந்து, அக்கடலில் கிடைக்கும் பலவித பொருள்களையும் மீன்களையும் காணிக்கையாகக் கொடுக்கிருன். பிறகு கௌஸ்துபம், சிந்தாமணி இவைகளுக்கு சமமான ஒரு மாலையையும் கொடுத்து,

.........हारलतेयमेनां
वैवाहिकोत्सवविधौ वह मद्विभूत्यै ।

—சிவலீலார்ணவம் ஸ. 9. சு. 96

என்கிருன். அம்பாளும் அதைப் பெற்றுக்கொள்கிருள்.

सख्याः श्रियो मम यतो जनकोऽसि ताव-

त्तद्धर्मतोऽसि जनको मम च त्वमेव ।

—சிவலீலார்ணவம் ஸ. 9 சு. 98

என்று மிகவும் அழகாக பதிலும் உரைக்கிருள். பிறகு பூர்வ வர்ஷம், ஸீதா நதி, இவைகள் வழியாக இளாவ்ருதத்தை அடைகின்றனர். அங்குள்ள ஜம்பூ நதியைக் கண்டு மகிழ்கின்றனர்.

அடுத்தபடியாக திக்பாலகர்களே ஜயிக்க இச்சை கொண்டவளாய் தடாதகை ஸ்வர்க்க லோகம் நோக்கிச் செல்லுகிருள். முதலில் இந்திரனை யுத்தத்தில் வெல்லுகிருள். அதன் பிறகு அக்னி, யமன், நிர்ருதி, வருணன், வாயு, குபேரன் இவர்களெல்லோரும் அம்பாளை வரவேற்று வணங்குகின்றனர். கடைசியில் கைலாஸ கிரியை அடைந்து சிவனின் பிரமத கணங்களுடன் போர் செய்கின்ருள் பிரமத கணங்கள் சிதறுண்டு ஓடுவதைக் கண்ட நந்தி, பரமசிவனிடம் நிலைமையைத் தெரியப்படுத்த அவரே நேரில் யுத்தகளத்திற்கு வருகிருர். பகவானைப் பார்த்ததும், தடாதகை தன்னுடைய மூன்ருவது ஸ்தனம் மறைந்து விட்டதை உணர்கின்ருள். தனக்குக் கணவனுகப் போகின்றவரை சந்தித்து விட்டோம் என்று தெரிந்ததும், நாணம் மேலிட்டுத் தலை குனிகின்ருள். பரமசிவனும், தடாதகையினுல் தான் யுத்தத்தில் ஜயிக்கப்பட்டதாயும், தன்பால் அவளுக்கு ஏற்பட்டிருக்கிற காதலை தாம் அறிந்து

கொண்டதாயும் அவளை மணப்பதற்காக தாம் சீக்கிரமே மதுரைக்கு விஜயம் செய்வதாகவும் சொல்லி மறைந்து விடுகிருர். [ஸ. 6 to 10]

தடாதகை மதுரை திரும்பியதும், அவளுடைய விவாஹத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன. தாம் கூறிய பிரகாரம் பரமசிவன் மதுரைக்கு விஜயம் செய்கிருர். அவருடைய ஸௌந்தர்யத்தைக் கண்ட மதுரை மக்கள்,

जिता त्वया यत्पृथिवी न तज्जितं
जिताश्च यद्देवि सुरा न ताज्जितम् ।
अनेन यूना यदनन्यनिर्जितं
जितं वधूजन्म तद्र्जितं जितम् ॥

சிவலீலார்ணவம் ஸ. 11 சு. 47

''தேவி உன்னுல் இந்த பூமி முழுதும் ஜயிக்கப் பட்டது என்பது ஒரு ஜயமாகாது. தேவர்கள் ஜயிக்கப்பட்டார்கள் என்பதும் ஜயமாக கருதப்பட மாட்டாது. ஆனுல் வேருெவராலும் ஜயிக்கப்படாத ஒரு பெண் பிறவி இந்த வாலிபனுல் ஜயிக்கப்பட்ட தென்பதே முக்காலும் ஜயமாகும்'' என்று கூறு கிருர்கள். அம்பிகையினுடைய லாவண்யத்தையும் கவி விஸ்தாரமாக வருணிக்கிருர்.

विधुं चतुर्धा प्रविभज्य तन्मुखे
त्रिभिः कपोलौ निटिलं च कल्पयन् ।

तुरीयमंशं क्विनियोगवर्जितं
न्यवेदयत्स्वामिनि शंकरे विधिः ॥

சிவலீலார்ணவம் ஸ. 11 73.

''சந்திரனை நான்கு பாகங்களாக பிரித்து, மூன்று பாகங்களினால் அவள் முகத்தில் இரு கன்னங்களையும் நெற்றியையும் நிர்மாணம் செய்து எஞ்சிய பாகத்தை இன்னது செய்வது என்று புரியாது அதை பரமசிவனின் சிரசில் வைத்தான் பிரம்மன்'.

பரமசிவன், பெண் வீட்டார்களால் மரியாதைகளுடன் வரவேற்கப்படுகிறார். விவாஹ மண்டபத்தினுள் அவர் நுழைகிறார் என்பதுடன் பதினோராவது ஸர்க்கம் முடிவடைகிறது. [ஸ. 11] ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேசுவரர்களின் விவாஹம் விமரிசையாய் நடைபெறுகிறது. இதிலிருந்து காவ்யத்தின் முடிவு வரை பகவான் தாமாகவோ அல்லது தம்முடைய பக்தர்களின் நலனுக்காகவோ நிகழ்த்திய திருவிளையாடல்கள் வர்ணிக்கப்படுகின்றன. அவை முறையே-பதஞ்ஜலி வியாக்ரபாதர் இவர்களுக்காக வெள்ளியம்பலத்தில் நடனம். குண்டோதரனுக்கு அன்னமிடுதல், அவன் தாகத்தைத் தீர்ப்பதற்காக வைகை நதியை சிருஷ்டி செய்தல், [ஸ. 12]

காஞ்சனமாலிகை ஸ்னானம் செய்வதற்காக ஏழு கடல்களையும் வரவழைத்து, அவள் அதில் ஸ்னானம் செய்யும் பொழுது ஸ்வர்க்கம் சென்ற அவள்

கணவனை அவளுக்குக் காண்பித்தல், தன் குமாரன் உக்ரபாண்டியனுக்கு சக்தி முதலிய ஆயுதங்களை வழங்குதல், சக்தியினல் கடலை வற்ற வைத்தல், சக்கரத்தால் இந்திரனின் கிரீடபங்கம், [ஸ. 13] தண்டாயுதத்தால் மேரு மலையை அடித்தல், முனிவர்களுக்கு வேதத்தின் உட்பொருளை உபதேசித்தல் ஸுந்தரேசர் கொடுத்த ரத்னங்களால் செய்த கிரீடத்தால் அபிஷேக பாண்டியனின் பட்டாபிஷேகம், [ஸ. 14]

கபர்தம் என்ற தன் ஜடையிலிருந்து மேகங்களை சிருஷ்டித்துக் கடலை வற்ற வைத்தல், அந்த மேகங்களையே திரையாகச் செய்து பெருமழையைத் தடுத்தல் ஸித்த வேஷத்தில் வந்து கல்லானைக்குக் கரும்பு கொடுத்தல், நரஸிம்மாஸ்திரத்தால் பௌத்தர்கள் அனுப்பிய மாய யானையைக் கொல்லுதல், [ஸ. 15] மாமியாரால் வீட்டை விட்டு விரட்டப்பட்ட பெண்ணைக் காப்பாற்றியது, பாண்டியனுடைய பிரார்த்தனைக்காக பரமசிவன் காலை மாற்றியாடுதல், பிராமண ஸ்திரீ மரணத்திற்கு வேடன் காரணமில்லையென்பதை நிரூபித்தல் பிராமணனுதமனை திருத்திய விந்தை, குருத்ரோஹியை தண்டித்தல், மாயப்பாம்பை அடக்குதல், மாயப்பசுவை வதைத்தல், [ஸ. 16]

ஸேனுபதிக்கு அநுக்ரஹம் செய்வதற்காக பாண்டிய மன்னன் முன்பு ஸேனையைக் காண்பித்தல் குல பூஷண பாண்டியனுக்கு அழிவற்ற தனத்தைக் கொடுத்தல், செட்டிப் பெண்களுக்கு வளையல்

விற்றல், யக்ஷப்பெண்களுக்கு அஷ்ட ஸித்திகளை உபதேசித்தல், இரவில் கோட்டை வாசலைத் திறந்து சோழ மன்னனுக்கு தரிசனம் கொடுத்தல், தண்ணீரளித்து பாண்டிய ஸேனையின் களை தீர்த்தல் [ஸ. 17] ஹேமநாயகிக்குத் தங்கம் வழங்குதல், சோழனை அகிழில் இறக்கி பாண்டியனுக்கு ஜயம் உண்டாகும்படி செய்தல், பக்தனுக்கு அரிசி கொடுத்து அநுக்ரஹம் செய்தல், செட்டிப் பையனுக்காக மாமன் வேஷத்தில் தோன்றி ஞாதிகளை வெல்லல், வரகுண பாண்டியனுடைய பிரஹ்மஹத்தியை நீக்குதல், விறகுவெட்டியாகத் தோன்றி ஸங்கீத வித்வான் பத்ரனைக் காப்பாற்றுதல், பத்ரனுக்கு ஸ்ரீமுகம் கொடுத்து சேர மன்னனிடம் அனுப்புதல், பத்ரனுக்கு பலகை அளித்தல், பத்ரன் மனைவி இலங்கையிலிருந்து வந்த ஸங்கீத விதுஷியை ஜயிக்கும்படி அனுக்ரஹித்தல் [ஸ. 18] பன்றிக் குட்டிகளுக்குப் பாலூட்டி அவைகளை மானிடராக்கிப் பாண்டிய மன்னன் மந்திரிகளாகச் செய்தல், கருங்குருவிக்கு அனுக்ரஹம் செய்தல், நாரைக்கு முக்தி கொடுத்தல் பாம்பின் மூலம் ஹாலாஸ்ய க்ஷேத்திரத்திற்கு எல்லையைக் காட்டுதல், தன் பேரிட்ட அம்பினால் விக்ரம சோழனின் ஸைன்யத்தை முறியடித்தல் [ஸ. 19]

கவிகளுக்கு சங்கப்பலகையளித்தல், உண்மை பக்தனுக்கு வம்ச சேகர பாண்டியன் மனதில் நினைத்ததை விளங்க வைத்து பொற்கிழி பெறச் செய்தல், கீரருக்கு அனுக்ரஹம் செய்தல், ஊமையினால் திரா

விட ஸ்தோத்ரத்திற்கு விருத்தி செய்வித்தல், தன் பக்தனுன ஒரு கவியை பாண்டிய மன்னன் அவமதித்ததற்காக சுந்தரர் நகரை விட்டு வெளியே செல்லல், செம்படவக் குலத்திலுதித்த அம்பாளை மணம் செய்து கொள்ளல். [ஸ. 20] வாதபுரீசுவரருக்கு அனுக்ரஹம் செய்தல், நரிகளைப் பரிகளாக்குதல், பிறகு அவைகளை நரிகளாக்குதல், வைகையை வெள்ளப் பெருக்கெடுக்கச் செய்து பிட்டுக்கு மண் சுமந்து பாண்டியனின் பிரம்பால் அடிக்கப்பட்ட பொழுது உலக முழுவதும் ஒவ்வொருவர் முதுகிலும் அவ்வடி விழுந்ததின் மூலம் தாம் ஸர்வ வியாபி என்பதை நிரூபித்தல் [ஸ. 21] ஸம்பந்தர் பாண்டியனின் ஜுரம் தீர்த்தல், பௌத்தர்களை விவாதத்தில் சம்பந்தர் வெல்லல், வைசிய விவாஹத்தில் கிணறு, வன்னிமரம், சிவலிங்கம் இம்மூன்றையும் ஸாக்ஷிகளாக ஏற்படுத்தல் [ஸ. 22]

பட்டியல் வரைவது போல் மேலே நாம் கொடுத்திருக்கும் விஷயங்களால் காவ்யத்தின் ஸ்வாரஸ்யத்தை ஒருக்காலும் விளக்க முடியாது. உயர்ந்த வர்ணனைகள் — தாமிரபர்ணி, கங்கை, காவேரி, காலை, மாலை, இரவு, கார்காலம், வஸந்த காலம் முதலியவைகளைப் பற்றிய வர்ணனைகள் கவர்ச்சி தருகின்றன. மனித ஸ்வபாவத்தையும், உலக இயல்பையும், அரசர்களின் கடமையையும் மற்றும் பல விஷயங்களையும் ஆழ்ந்த ஞானத்துடனும், முதிர்ந்த அனுபவத்துடனும் எடுத்துச் சொல்லுகிறுர். ஒரு நயமான ஹாஸ்ய உணர்ச்சி கதைக்கு அலாதி ருசியைத் தருகிறது.

இந்தக் காவ்யத்தில் கவியின் யாப்புத் திறமை நன்கு விளங்குகிறது. இருபத்தேழு விதமான விருத்த வகைகளைக் கையாண்டிருக்கிறார். அவை களில் வெகு அபூர்வமானவை சில—பிரமிதாக்ஷரா, மஞ்சுபாஷிணி, பஞ்சசாமரம், நாராசகம் முதலியன. மற்றும், இந்திர வஜ்ரா, உபேந்திர வஜ்ரா, உப ஜாதி, அனுஷ்டுப், வம்சஸ்தம், ப்ரஹர்ஷிணீ, புஷ் பிதாக்ரா, ஸ்வாகதா, வஸந்த திலகம், ரதோத் ததா, வியோகினி, சார்தூல விக்ரீடிதம், ஸ்ரக்தரா, சாலினி, த்ருத விலம்பிதம், ஹரிணீ, பிருதிவீ, மந் தாக்ராந்தா, ஆர்யா, உபகீதி, ருசிரா இந்த விருத் தங்களை வெகு அழகாய்க் கையாண்டிருக்கிறார். இதிலிருந்தே அவருடைய யாப்புத் திறனைக் கண்டு கொள்ளலாம்.

நீலகண்டருடைய நூல்கள் முழுவதையும் இப் பொழுது நாம் பரிசீலனை செய்துள்ளோம். பரிசீலனை செய்த கிரமத்தில் ஒரு நியதியைக் காண்கிறோம். அந்த நியதி கவியின் மேதையின் வளர்ச்சியை நன்கு விளக்கிக் காட்டுகின்றது. ஒவ்வொரு நூலும், அந்நூலை ஆக்கிய சமயத்தில் கவியின் மனோநிலை, சூழ்நிலை இவைகளின் பிரதிபலிப்பாக இருப்பதைக் காண்கிறோம். முதலிலிருந்து ஒரு கண்ணோட்டம் செலுத்துவோம்.

கவி செய்ய வேண்டும் என்னும் ஆர்வத்திவ் எழுந்த—சிவோத்கர்ஷ மஞ்சரி, ரகுவீரஸ்தவம் வழி யாய் வேதாந்த விசாரம் செய்த காலத்தில் சிவ தத்வ ரஹஸ்யத்தையும், அதன் பிறகு இலக்கியப்

பணியில் முழுதும் ஈடுபட்ட பொழுது நள சரித்திர நாடகம், கங்காவதரணம் இவ்விரண்டு காவ்யங்களையும், மதுரையில் அலுவலில் அமர்ந்த ஆரம்பத்தில் நீலகண்ட விஜய சம்பூவையும், மந்திரி வேலையிலிருந்த காலத்தில் விநோதமாகவும், ஹாஸ்யமாகவும் பொழுது போவதற்காக கலிவிடம்பனம், ஸபாரஞ்ஜனசதகம்—ஆகிய இரண்டு சிற்றிலக்கியங்களையும், ராஜ ஸேவையில் அலுப்புத்தட்டி மனம் வேதனையடைந்திருந்த நிலையில் சாந்தி விலாஸத்தையும், மனதை ஒரு நிலைப்படுத்துவதற்காகப் பாடுபட்ட காலத்தில் வைராக்ய சதகத்தையும், பின் பிரபத்தியின் பயனாக ஈசுவரானுபவ ஆனந்தம் ஏற்பட்ட காலத்தில் ஆனந்த ஸாகரஸ்தவத்தையும், முடிவில் சகலவிதமான சஞ்சலமும் தீர்ந்து அமைதி நிறைந்திருந்த காலத்தில் சிவலீலார்ணவத்தையும் செய்திருக்கலாம் என்று நாம் ஒருவாறு ஊஹிக்கலாம். வேறு குறிப்புக்கள் இல்லாததால், நூல்களின் பௌர்வாபர்யத்தை சந்தேகத்திற்கு இடமற நிர்ணயம் செய்வதற்கில்லை. ஊஹம்தான் செய்ய முடியும்

ஸ்ரீ நீலகண்டரும் காவ்ய தத்துவமும்

'கவி ஸஹ்ருதயர்' என்று நீலகண்டரை அறிஞர்கள் பாராட்டுகின்றனர். உண்மையில் இந்தப் பட்டம் ஒவ்வொரு கவிக்கும் உரித்தாகும். இவ்விஷயத்தைச் சற்று விஸ்தாரமாக ஆராய்வதற்கு முன் நீலகண்டர் காலத்தில் கவிதா உலகம் எந்நிலையிலிருந்தது, அதை அவர் எவ்வாறு மதிப்பிட்டார் என்பதை கவனிப்போம்.

பொதுவாக காவ்ய விமர்சன விஷயத்திலும் காவ்யானுபவத்திலும் நீலகண்டர் கையாளும் முறை நாம் முற்றிலும் ஆமோதிக்கக் கூடியதாக இருக்கிறது. அவருக்கு முன்னிருந்த அணிநூல் ஆசிரியர்களில் பெரும்பாலோர் சற்றும் சுவையில்லாத சில பழங்கருத்துக்களையே திரும்பத் திரும்பச் சொல்லி வந்தனர். கையாளுவதற்குக் கடினமானவையும் அவ்வாறு கையாளப்பட்டாலும் கேவலம் உயிரற்ற காவ்யங்களையே உருவாக்கும் சுவைக்குதவாத லக்ஷணங்களைச் சொல்லுவதில் நீலகண்டர் நோங்கவில்லை.

காளிதாஸனுக்குப் பிற்பட்ட காலத்தில் ஸம்ஸ்கிருத இலக்கியம் படிப்படியாய்ச் சிறப்புக் குறைந்து வந்தது என்பது உண்மைதான். ஒன்பதாவது நூற்றாண்டின் இறுதியிலிருந்த ஆனந்தவர்த்தனர், '**सरस्वती स्वादु**' என்னும் காரிகைக்கு விருத்தி செய்யுமிடத்தில்

"येनास्मिन्नतिविचित्रकविपरम्परावाहिनि संसारे कालिदासप्रभृतयो द्वित्राः पञ्चषा वा महाकवय इति गण्यन्ते ।"

என்று குறிப்பிடுவதிலிருந்து சிறந்த கவிகளின் எண்ணிக்கை எவ்வளவு சிறியது என்பது விளங்குகிறது. இதற்குக் காரணம் ஒரு வகையில் இலக்கண ஆசிரியர்களின் ஆதிக்கம் ஓங்கி இலக்கிய ஆசிரியர்களை அதற்கு உட்படுத்தியது எனலாம். ஆனால் இது முற்றிலும் உண்மையாகாது. "**काव्यस्य आत्मा ध्वनिः**" என்னும் ஸித்தாந்தத்தை நிலைநாட்டிய ஆனந்த வர்த்தனர்,

"अपूर्वं यद्वस्तु प्रथयति विना कारणकलां"

என்று கவியின் உயர்வை எடுத்துரைத்த அபிநவ குப்தர், மற்றும் மம்மடர், ஜகன்னாதன் இவர்களெல்லோரும் உண்மைக் கவிதை எது என்பதையும், கவி செய்பவனுக்கு ப்ரதிபை (**प्रतिभा**) அவசியமென்பதையும் ஐயமறக் கூறியிருக்கின்றனர். எனினும் இவர்களுடைய அடிப்படையான ஸித்தாந்தம் மறந்து போகும் முறையில் பெரும்பாலான ஆலங்காரிகர்கள் (அணி நூல் ஆசிரியர்கள்) அணி இலக்கணத்திற்கே அவர்கள் நூல்களில் இடம் கொடுத்ததால் எது காவ்யத்தின் சிறந்த அம்சம் என்பதே தெரியாது போயிற்று. தங்களுக்கு விமர்சகர்களின் மதிப்புக் கிடைக்க வேண்டுமானால் அணிகளையே மிகுதியாகக் கையாள வேண்டுமென்று கவிகள் எண்ணத் தொடங்கினர். இதன் பயனாய் இயற்கையான மேதையுள்ளவன் தன் கவிதா சக்தியை தடையின்றி உபயோகப்படுத்த முடியாது போயிற்று.

விமர்சகர்கள் தயாரித்த உயிரற்ற உடலுக்கே அலங்காரம் செய்ய நேர்ந்தது. அவர்கள் வகுத்த முறையிலிருந்து சிறிது விலகினாலும் கண்டனம் கிடைத்தது. இந்த மாதிரிக்கொடுங்கோலின் கீழ் உண்மை கவிதை விலாசம் அடையும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. வளர்ச்சி தடைபட்டு க்ஷீண தசையை நோக்கியே ஸம்ஸ்க்ருத இலக்கியம் சென்று கொண்டிருந்தது.

இந்த விபரீதத்தைத் தாம் கவி செய்ய ஆரம்பித்த காலத்தில் நீலகண்டர் கண்டு அதன் காரணத்தையும் ஆராய்ந்தார். மனதில் எவ்வளவு வேதனையடைந்தார் என்பது அவருடைய நள சரித்திர நாடகத்திலிருந்து தெரிகிறது.

स्वादूनेव रसान् कटून् विदधतां कर्षन्तु मा मेति च
क्रन्दन्त्येव पदानि वा कवयतां कुर्वन्तु लज्जां च वा ।
कुत्रैको मधुरो रसः क्व मधुरा वाणीति नो जीवतां
कर्णान्निष्करुणं दहन्ति कवयः कस्मादिदानीन्तनाः ॥

நளசரித்ரம் I-4

‘‘தித்திப்பைக் கசப்பாக மாற்றி அளிக்கட்டும். ‘வேண்டாமே, வேண்டாமே’ என்று கதறும் சொற்களை பலாத்காரமாக இட்டுச் செல்லட்டும். இவ்வாறு கவி செய்யட்டும் அல்லது தாமே வெட்கமடைந்து (சும்மா) இருக்கட்டும். ஆனால் நல்ல ரஸமான காவ்யத்தை அனுபவிப்போமா? நல்ல இனிமையான சொற்களை கேட்போமா என்று நினைந்

துருகும் எங்கள் காதுகளை ஏனோ இக்காலத்துக் கவிகள் கருணையின்றி சுடுகின்றனரே'' என்கிறார். ஸூத்ரதாரன் மேலும் சொல்லுகிறான்:—

यत्र चित्राः कथोद्घाता यत्र च स्यन्दते रसः ।
व्युत्पन्नस्य कवेः कर्म तत्किञ्चिदभिनीयताम् ॥

—நளசரித்ரம் I-5

''அழகான கதை அமைப்பும், மதுரமான ரஸம் பொங்கி எழுவதுமான ஒரு கவியின் நாடகத்தை நடத்துங்கள்'' என்று ரஸிகர்களின் ஆக்ஞையைத் தெரிவிக்கின்றான். அக்கால இலக்கியத்தின் நிலையை பாரிபார்ச்வகனின் பதில் தெளிவாக்குகிறது.

"साधु सामाजिकाः साधु! इदं खलु लवणोदादिक्षुरसानयनादेशनम् । कः पुनरस्मिन् काले तादृशः प्रबन्धः?"

''சபாஷ்! ரஸிகர்களே, சபாஷ்! (உப்பு) ஸமுத்திரத்திலிருந்து கரும்புச்சார் எடுக்கவல்லவோ உத்தரவிட்டிருக்கிறீர்கள்! இம்மாதிரி நாடகமும் இக்காலத்திலிருக்கின்றதா?''

நீலகண்டரைத் தவிர வேறு ஒருவரும் இச்சூழ்நிலையை மாற்ற தைர்யங்கொண்டிருக்க மாட்டார்கள். மறுமலர்ச்சிக் கொடியைத் தூக்கிப் பிடித்தார். அக்காலத்து மட்டரகக் கவிதையைத்தாக்கி ஏளனம் செய்தார். கவிதையின் போக்கை ஆதியிலிருந்து நோக்கிச் சொல்லுகிறார்:—

कृते युगे व्यञ्जनयावतीर्णं

त्रेतायुगे सैव गुणीबभूव ।

आसीत्तृतीये तु युगेऽर्थचित्रं

युगे तुरीये यमकप्रपञ्चः ॥

—சிவலீலார்ணவம் ஸ. 1. சு. 38

"ஆதியில் வியஞ்ஜனையிலேயே காவ்யம் சிறப்பைப் பெற்றது. அடுத்தபடியில் காவ்யம் வியஞ்ஜனைக்கு இரண்டாவது ஸ்தானத்தையே அளித்தது மூன்றுவது படியில் அது பொருள் அழகின் அடிப்படையிலேயே உயர்வை அடைந்தது. இறுதிப்படியிலோ வெறும் சொல் நயத்திலேயே அது பாராட்டு தலைப் பெறுகிறது"

ஸம்பிரதாயம், சூழ்நிலை இவைகளின் பலம் தம்மையும் அடிமைப்படுத்தி விடுமோ என்று கவி அஞ்சினர்.

देवानामपि दैवतं गुरुमपि प्राचां गुरूणामिह

श्रीमन्तं मदनान्तकं कथमपि स्तोतुं कृतो निश्चयः ।

तेन त्वां त्वरयामि भारति बलात्कृष्टापि दुष्टे पथि

प्रासेनोपहतापि जातु कुपिता मा स्म प्रसादं त्यजः ॥

நீலகண்ட விஜயசம்பூ I-7

"தேவதைகளுக்கெல்லாம் தெய்வமும் குருக்களுக்கெல்லாம் முதற் குருவும் மன்மதனை வென்ற

வருமான ஈசுவரனை துதிப்பதென்று துணிந்து விட்டேன். தாயே! ஸரஸ்வதி! கடினமான காவ்யப் பாதையில் உன்னைப் பலாத்காரமாய் நடத்திச் சென்றாலும், எதுகைகளினால் உன்னை துன்புறுத்தினாலும் கோபம் கொள்ளாது எனக்கு அருள்புரிய உன்னை வேண்டுகிறேன்''

மேற்சொன்னதிலிருந்து நீலகண்டர் அணிகள் நிறைந்த வெறும் ஓசைக் காவ்யங்களை வெறுத்தார் என்பது தெளிவாகிறது. அவருடைய இலக்கிய விமர்சனம் அனுபவத்திற்குகந்ததாயிருக்கிறது. காவ்யத்தைப் பொறுத்த மட்டில் அவர் உயர்ந்த லக்ஷயத்தைக் கைக்கொண்டார். சிவலீலார்ணவத்தின் முதல் ஸர்க்கம் முழுவதும் ஒரு காவ்ய இலக்கண நூல் என்றே கூறலாம். இன்னும் கங்காவதரணம், நீலகண்ட விஜயசம்பூ, நளசரித்திர நாடகம், கலிவிடம்பனம், ஸபாரஞ்ஜன சதகம் முதலிய நூல்களிலும் காவ்ய சம்பந்தமாக தம்முடைய அபிப்பிராயங்களைத் தெரிவித்திருக்கிறார். அவருடைய ஸித்தாந்தத்தை ஆராய்வோம்.

काव्यानि कर्तुं च परीक्षितुं च द्वित्रा भवेयुर्न तु वा भवेयुः

—சிவலீலார்ணவம் ஸ. 1 சு. 14

''(நன்றாய்க்) கவி செய்யவும் அதை விமர்சனம் செய்யவும் யோக்யதையுடையவர்கள் இரண்டு மூன்று பேர்கள் இருந்தால் அதுவே அதிகம் என்று கருத வேண்டும் என்று நீலகண்டர் ஆரம்பிக்கிறார்.

இந்த வாக்யத்தை நாம் ஊன்றி கவனிக்க வேண்டும். கவி, விமர்சகன் என்று இருவகை வகுப்பினர்கள் தனித்தனியாக இயங்குகிருர்கள் என்பதை நீலகண்டர் ஒப்பவில்லை. ஸஹ்ருதய பாவம் இல்லாதவன் கவியாக முடியாது. கவிதா ஹ்ருதயம் இல்லாதவன் விமர்சகனுக முடியாது. வால்மீகியைக் குறித்து நீலகண்டர் சொல்லுகிருர்:—

कान्तः सह यो वाचः कविरेव चिरन्तनः ।
जडे जगति येनैव छन्दः प्रागन्वरुध्यत ॥

கங்காவதரணம் 1-3

''இந்த ஸாரமில்லாத உலகத்தில் எவனுடைய மேதையினுல் கவிதை முதலில் தோன்றியதோ அந்தப் பழங்கவியே (வால்மீகியே) சொல்லின் செல்வன்; சிறந்த ஸஹ்ருதயனுமாவான்''. ஆதி காவ்யமான ராமாயணத்தின் உதயத்தை அறிந்தவர்களே இந்த சுலோகத்தின் ஸ்வாரஸ்யத்தை நன்கு அனுபவிக்க முடியும்.

निषादविद्धाण्डजदर्शनोत्थः श्लोकत्वमापद्यत यस्य शोकः ॥

—ரகுவம்சம் ஸ. 14-சு. 70

என்பது மஹாகவியின் அனுபவம்.

வேடனுடைய அம்பினுல் அடிபட்டு விழுந்த ஆண் பறவை, அதனைப் பிரிந்ததால் துயறுற்றுக் கதறும் பெண் பறவை. இந்தச் சோகக் காட்சியைக் காண்கிருர் மஹரிஷி. கருணைப்பெருக்கெடுத்த அவ

ருடைய உள்ளத்திலிருந்து உணர்ச்சி நிறைந்த வார்த்தைகள் வெளிவருகின்றன. அடுத்த நிமிடம் தாம் சொன்ன வார்த்தைகளை திருப்பத் திரும்ப சொல்லிப் பார்க்கிருர். அவை அழகிய செய்யுளாக காதில் ஒலிக்கின்றன. அவைகளின் எழிலைக் கண்டு அகமகிழ்ந்து தமது ஆனந்தானுபவத்துடன்,

पादबद्धोऽक्षरसमः तन्त्रीलयसमन्वितः ।
शोकार्तस्य प्रवृत्तो मे श्लोको भवतु नान्यथा ॥

—ஸ்ரீராமாயணம், பாலகாண்டம் ஸ. 2 சு. 18

என்று சொல்லும் பொழுது கவி ஸஹ்ருதயராக மாறுகிருர். இது நாம் காவ்ய உல த்தில் எங்கும் என்றும் காணும் ஒரு உண்மை. இதுவே ஸம்ஸ்க்ருத காவ்ய தத்வத்தின் அடிப்படை எனலாம். பெரிய ஆலங்காரிகரான அபிநவ குப்தர் லோசனத்தின் முதல் சுலோகத்தில்

... ... तत् ।
सरस्वत्यास्तत्त्वं कविसहृदयाख्यं विजयते ॥

என்று கவி-ஸஹ்ருதய அபேதத்தை ஸந்தேகமற அழுத்தமாக எடுத்துரைக்கிருர் இதே உண்மையை,

कविताबुधयोर्योगं नमामि शिवयोरिव ।

என்று பேராசிரியர் குப்புசாமி சாஸ்திரிகள் தம் உபலோசனம் என்னும் உரையில் அழகாகக் கூறியிருக்கிருர். விமர்சகன் என்பவன் எங்கோ காவ்ய லோகத்திற்கு வெளியேயிருந்து கொண்டு, காவ்யத்தைப் பரிசீலனை செய்து அதன் குண தோஷங்

களை எடுத்துக்காட்டுகிருன் என்னும் கருத்தை ஸம்ஸ்க்ருத இலக்கிய உலகில் ஒருவரும் ஆமோதித்தது இல்லை. ஸஹ்ருதயன் என்னும் பதமே அதற்குச் சான்று. காவ்யத்தின் சுவையில் தன்னை மறந்து அத்துடன் முற்றிலும் ஈடுபட்டவனே ஸஹ்ருதயன் ஆவான். அந்த நிலையில் அவன் ஒரு கவியாகவே மாறிவிடுகிருன் எனலாம். கவித்வம், ஸஹ்ருதயத்வம் இந்த இரண்டும் ஒரு கலையின் இரு பிரிக்க முடியாத அம்சங்கள். இதைத்தான் மேலே சொன்ன அபிநவ குப்தரின் ஸூக்தி கூறுகிறது. நீலகண்டரும் இந்த உண்மையை வெகு அழகாக விளக்குகிருர்:—

चिन्तासु संसर्गविशेषलाभे
संदर्भणे चाथ पदैः पदानाम् ।
पुनर्विमर्शे च भवन्कवीना-
मानन्दभूमा वचसामसीमा ॥

—சிவலீலார்ணவம் ஸ. 1-சு 25

''முதலில் காவ்ய சிருஷ்டியைப் பற்றி ஆலோசிக்கும் பொழுதும், அடுத்த படியாக அதற்குத் தகுந்த சிறந்த கருத்துக்கள் மனத்தில் உதிக்கும் பொழுதும், பிறகு அவைகளை சொற்களோடு சொற்களால் அமைத்துக் காவ்யத்தை உருவாக்கும் பொழுதும், இறுதியாக அந்தக் காவ்யத்தைத் தானே விமர்சனம் செய்து பார்க்கும் பொழுதும்,

கவிகளுக்கு வார்த்தைகளால் வர்ணிக்கவியலாத ஒரு மஹத்தான ஆனந்தம் ஏற்படுகிறது''.

"**वचसामसीमा आनन्दभूमा**" என்னும் சொற்றொட ரின் மொழிபெயர்ப்பால் அதன் முழு பாவத்தையும் வெளிப்படுத்த முடியாது ''வார்த்தைகளுக்கு எட் டாத ஒரு ஆனந்த ஸாம்ராஜ்யம்'' என்னும் நிலை யில், அது ஒரு அலௌகிகமான ஆனந்தத்தையே குறிக்கிறது. **भूमा** என்ற சொல்லிற்கு (**निरतिशयबहु**) எல்லையில்லாப் பெரிது என்று அர்த்தம். அது உப நிஷத் பிரஸித்தமான பதம்.

''यो वै भूमा तत्सुखं नाल्पे सुखमस्ति भूमैव सुखम्''

—சாந்தோக்யம்

என்று ஸனத்குமாரர் நாரதருக்கு உபதேசிக்கிறார். அந்த ஆனந்தத்திற்கு ஒப்பானது கவி ஸஹ்ருதயன் இவர்களின் ஆனந்தம் என்று பெரிய ஆலங்காரி கர்கள் ஸித்தாந்தம் செய்திருத்திருக்கின்றனர். கவி ஸஹ்ருதயன் இவர்களுக்கும், யோகிக்கும் நெருங் கிய தொடர்பு உண்டு. இருவகையினரும் நிரந்தர மான ஒரு ஆனந்தத்தை அடையவல்லவர்கள். அஷ்டாங்க யோகம் முதலிய கடுமையான பாதை வாயிலாக யோகி அதைத் தேடுகிறான். ஆனால் கவிக்கு அது தேவையில்லை. அவன் செல்ல வேண் டிய பாதை ராஜபாட்டை எனலாம்.

अनायतप्राणमसंयताक्ष-
मब्रह्मचर्यानशनादिखेदम् ।

चित्तं महेशे निभृतं निधातुं
सिद्धः कवीनां कवितैव योगः ॥

—சிவலீலார்ணவம் ஸ. I-சு. 26

''மூச்சையடக்காமலும், கண் காது முதலான புலன்களைக் கட்டுப்படுத்தாமலும், பிரஹ்மசர்யம், உணவில்லாமை முதலியவைகளாலுண்டாகும் சிரமமில்லாமலும் சித்தத்தை சிவன்பால் செலுத்துவதற்குக் கவிதை புனைவதே கவிகளுக்குக் கைகண்ட யோகமாம்''. இதே ரீதியில் ஸஹ்ருதயனும் காவ்யச்சுவையில் தன்னை மறந்து ஈடுபடும்பொழுது ஸமாதிக்கொப்பான ஒரு நிலையை அடைகிருன். கவியும் ஸஹ்ருதயனும் ஒருவித ஸம்ஸ்கார விசேஷத்துடனே பிறக்கிருர்கள்.

सव्यं वपुः शब्दमयं पुरारे-
रर्थात्मकं दक्षिणमामनन्ति ।
अङ्गं जगन्मङ्गलमैश्वरं त-
दर्हन्ति काव्यं कथमल्पपुण्याः ॥

—சிவலீலார்ணவம் ஸ. 1. சு. 15

''பரமசிவனுடைய சரீரத்தில் இடது பாகம் சொல் வடிவமானதென்றும், வலது பாகம் பொருள் வடிவமென்றும் கூறுகின்றனர். ஆகையால் உலகிற்கெல்லாம் நலம்புரியும் ஈசுவரனின் வடிவமாகிய காவ்யத்தை கொஞ்சம் புண்ணியம் செய்தோர்

அடைவது எங்ஙனம்?'' "कथं काव्यं अल्पपुण्याः अर्हन्ति" என்பதை கவிதை புனைவதற்கும், கவிதையை அனுபவிப்பதற்கும் மஹத்தான புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்று கொள்ளலாம். படிப்பு அவசியம் தான் எனினும், அதனுல் மட்டும் கவியாகவோ ஸஹ்ருதயனுகவோ ஆகமுடியாது. வெறும் சாஸ்திரப் பயிற்சி பெற்ருேர், கவிதையின் ஸாரத்தை அறிய முடியாது போகலாம். இவர்களை நீலகண்டர் ஏளனம் செய்கிருர்.

अप्यन्तिकस्थैरविभावनीयः
सूक्ष्मः प्रकृत्या मृदुसूक्तिजन्मा ।
कुतर्कविद्याव्यसनोपजातैः
कोलाहलैर्न ध्वनिरेष वेद्यः ॥

—சிவலீலார்ணவம் ஸ. 1 சு. 72

''(கவிகளின்) மிருதுவான ஸூக்திகளில் பொதிந்துள்ள இயற்கையிலேயே நுட்பமான த்வனியானது நெருங்கியுள்ளோர்களாலும் (சுலபமாக) ஊஹிக்க முடியாது. விதண்டாவாதப் படிப்பில் ஈடுபட்டவர்கள் செய்யும் கூச்சல்களால் (ஒரு நாளும்) அதைத் தெரிந்து கொள்ள முடியாது''

நீலகண்ட விஜயசம்பூவில் ஹாலாஹல விஷத்தின் கொடுமையை வர்ணிக்குமிடத்திலும்,

अजनि शनैर्विशदं जगदपसर्पति कालकूटसंतमसे ।
तात्पर्यमिव कवीनां तार्किककोलाहलोपरमे ॥

நீலகண்ட விஜயசம்பூ IV-30

''காலகூடமென்னும் இருளானது மறையவும், தர்க்க நிபுணர்களின் சர்ச்சை ஓய்ந்ததும் கவிகளின் உட்கருத்து நன்கு விளங்குவது போல் உலகம் முழுவதும் ஒரு தெளிவைப் பெற்றது'' என்கிறார்.

உண்மை ஸஹ்ருதயன் காவ்யத்தை நுகர்ந்து அனுபவிப்பதையும், மேற்சொன்ன தார்க்கிகன் அதை பரிசீலனை செய்து பார்க்கும் முறையையும் ஹாஸ்யம் ததும்பும் ஒரு செய்யுளின் மூலம் விளக்குகிறார்.

वाचं कवीनामुपलालयन् यां
भुङ्क्ते रसज्ञो युवतिं युवेव ।
तामेव भुङ्क्ते ननु तार्किकोऽपि
प्राणान्हरन्भूत इव प्रविष्टः ॥

—சிவலீலார்ணவம் ஸ. 1 சு. 69

''யௌவனப் பிராயத்திலுள்ள மங்கையை வாலிபன் அனுபவிப்பது போல் ரஸிகனான ஸஹ்ருதயன் கவிகளின் வாக்கைக் கொண்டாடி அனுபவிக்கிறான். அதே வாக்கை தார்க்கிகன், அழகிய மங்கையின் சரீரத்தில் புகுந்து பிராணனைக் குடிக்கும் பேய் பிடித்து ஆட்டுவது போல வெவ்வேறாக சிதைத்துப் பார்க்கிறான்''

மேற்சொன்னதிலிருந்து கவி ஸஹ்ருதயன் இவர்களின் பரஸ்பர அந்யோந்யமும், நீலகண்டரைப்போலுள்ள ஒரு கவி, எவ்வாறு ஸஹ்ருதயனின்

தன்மையை, தம்மையே அந்நிலையிலறிந்து வெளிப் படுத்துகிறார் என்பதும் நன்கு தெரியும். உண்மை ஸஹ்ருதயனின் போற்றுதலே கவிக்கு உயர்ந்த மகிழ்ச்சியைத் தரும். ஏனென்றால் கவியினுடைய ஹ்ருதயமே அவனுடைய அனுபவத்தில் பிரதிபலிக் கிறது.

"आ परितोषाद्विदुषां न साधु मन्ये प्रयोगविज्ञानम्"

—சாகுந்தலம் I-2

என்ற காளிதாஸன் கருத்தே, 1500 ஆண்டு களுக்குப் பிறகு தோன்றிய நீலகண்டராலும் போற்றப்படுகிறது.

कस्माद्विभीमः कवयो भवामः काव्यज्ञदण्डाद्वि

भिमस्तु कामम ।

—சிவலீலார்ணவம் ஸ. 1 சு. 21

கவிகள் ஒன்றையும் கண்டு அஞ்சுவதில்லை. காவ்யஞ்ஞரின் (ஸஹ்ருதயரின்) கண்டனத்தைக் கண்டு அஞ்சுகின்றனர். 'काव्यज्ञः' 'काव्यमर्मज्ञः' என்றே விமர்சகர்களை நீலகண்டர் குறிக்கின்றார். கவிகளும் காவ்யஞ்ஞர்கள் தாமே. ஆதலால் கவி, ஸஹ்ரு தயன் என்னும் இரண்டு பெயர்களும் ஒரே அடிப் படையான மேதையினின்று விகாசத்தை அடை கின்றனர். கவிகளெல்லோரும் ஸஹ்ருதயரே.

இனி காவ்யத்தின் தன்மையை கவிஸஹ்ருதய ராகிய நீலகண்டர் எவ்வாறு விளக்குகிறார் என்பதை நோக்குவோம்.

शब्दार्थौ सहितौ काव्यम् ।

என்று பாமஹர் காவ்யத்திற்கு இலக்கணம் கூறு கிறார். இதையே மம்மடரும் சிறிது விஸ்தாரமாக,

अदोषौ सगुणौ सालंकारौ शब्दार्थौ काव्यम् ।

என்கிருர். பொதுவாக இந்த அடிப்படையில்தான் நீலகண்டரும் காவ்யத்தின் இலக்கணத்தை விளக்கு கிருர் எனலாம். இருந்தாலும் சொல்லும் பொரு ளும் மட்டும் காவ்யமாக ஆகிவிட முடியுமா? அன்ருட வாழ்க்கையில் எல்லோரும் சொல்லையும் பொருளையும் தானே உபயோகிக்கின்றனர். உண்மை, ஆனுல் அதில் ஒரு வித்தியாசமிருக்கிறது.

यानेव शब्दान्वयमालपामो
यानेव चार्थान्वयमुल्लिखामः ।
तैरेव विन्यासविशेषभव्यैः
संमोहयन्ते कवयो जगन्ति ॥
प्रायस्तिरोभूतमहाप्रकाशाः
पाषाणखण्डेष्विव चन्द्रकान्ताः ।
शब्देषु शब्दा मिलिताश्चरन्ति
भाग्योत्तराः प्रत्यभिजानते तान् ॥

—சிவலீலார்ணவம் ஸ. 1-சு. 13, 12

"எந்தெந்தச் சொற்களை நம் அன்ருட வாழ்க் கையில் நாம் பேசுகிருேமோ, அவைகளுக்கு எவ் விதப் பொருள்கள் நாம் கொள்கிருேமோ—இதே முறையில் தான் கவிகளும் அவைகளை உபயோகப் படுத்துகின்றனர். ஆனுல் ஒரு சிறந்த அமைப்பு

விசேஷத்தினுல் உலகையே மயக்கும் வகையில் அவைகளைக் கையாளுகின்றனர். மேலும், சொற்களின் ஓசைகள் பலவிதமாயிருக்கின்றன. பாறைகளுக்கிடையே மிகுந்த பிரகாசமுள்ள சந்திரகாந்தகற்கள் மறைந்து கிடப்பது போல், இந்த ஓசை சமூகமாகிய சொற்களிடையே, இனிமையாய் ஒலிக்கும் சொற்களிருக்கின்றன. பெரும் பாக்கியம் செய்த சிலரே அவைகளைக் கண்டுகொள்ளுகிறுர்கள்''

பொருளும் இவ்வாறுதான்.

सदर्थमात्रग्रहणात्प्रतीता
सर्वज्ञता सापि शशाङ्कमौलेः ।
प्राप्ता विकासं प्रतिभा कवीनां
व्याप्नोति यद्वेत्ति न तच्छिवोऽपि ॥

तन्त्रान्तरेषु प्रतिपाद्यमाना-
स्ते ते पदार्था ननु ते त एव ।
निर्वेदभीशोकजुगुप्सितान्य-
प्यायान्ति साहित्यपथे रसत्वम् ॥

—சிவலீலார்ணவம் ஸ. 1-சு. 20, 22

''உலகத்தில் இருக்கும் பொருள்களை மட்டும் அறிந்தவரானதால்தான் பரமசிவனை ஸர்வக்ஞன் என்று கூறுகிறுர்கள். கவிகளின் மலர்ச்சியடைந்த புத்தி (இருப்பதும் இல்லாததுமான) எந்தெந்த பொருளை காட்டுகிறதோ அதெல்லாவற்றையும் அச்

சிவனும்கூட அறியமாட்டார். மற்ற கலைகளில் கூறப்படும் பொருள்களெல்லாம் அதனதன் நிலையிலேயே உள்ளன. (இந்த கலையின் ஸம்பந்தம் ஏற்பட்டதற்காக ஒரு பொருள் வேருெரு பொருளாக மாறுவதில்லை). ஆனல் ஸாஹித்யத்திலோ (துன்பத்தைக் கொடுக்கும்) நிர்வேதம், (வெறுப்பு) பயம் சோகம், அருவருப்பு, இவைகளும் (இன்பத்தைக் கொடுக்கும்) ரஸமாக மாறுகின்றன''.

ரஸானுபவம்—அது எவ்வகை ரஸமாயிருந்தாலும் ஆனந்த கனமானது என்பது மேற்சொன்ன செய்யுளின் பொருள். இதை ஆங்கிலத்தில் Catharsis என்று கூறுவார்கள்.

உத்தமக் கவிதைகளில் தான் சொல்லும் பொருளும் மேலே குறிப்பிட்டது போல் அமைகின்றன. வெறும் சொல் அணி, பொருள் அணி, இவைகளால் மட்டும் உயர்ந்த கவிதையை ரசனை செய்துவிட முடியாது. உண்மை ரஸிகர்களும ஏனையவைகளால் மகிழ்ச்சியடைய மாட்டார்கள்.

दिष्टयाधिरूढाः कविताधिराज्यं
धीरा रमन्ते न हि शब्दचित्रे ।
स्वर्गेऽपि गत्वाऽप्सरसां निवासे
काणैव किं कापि गवेषणीया ।।
पदानि भव्यान्यपि काव्यरीति-
मस्थानदत्तानि न शोभयन्ते ।

नासाग्रलग्नेन भवेन्मुखश्री-

स्ताटङ्कबिम्बेन कथं तरुण्याः ॥

साहित्यविद्यां पदमेकमेव

सर्वानवद्यामपि हन्ति दुःस्थम् ।

दन्तावलिं मौक्तिकदामरम्यां

दंष्ट्रेव वक्त्राद्बहिरुल्लसन्ती ॥

சிவலீலார்ணவம் ஸ. 1-சு. 39, 34, 35

''அதிருஷ்ட வசத்தால் கவிதா ராஜ்யத்தை யடைந்த பெரியோர் கேவலம் சொல் சித்ரத்தில் இன்புற மாட்டார்கள். அழகு வாய்ந்த அப்ஸரப் பெண்கள் வாழும் ஸ்வர்க்கத்திற்குச் சென்றும் யாராவது ஒரு கண் இழந்த மங்கையை வரிப்பானு? சொற்கள் சிறந்ததாயிருந்த போதிலும் அதைப் பொருந்தாத இடத்தில் உபயோகித்தால் அது காவ்யத்தை அழகுறச் செய்வதில்லை. மூக்கில் புல்லக் கணிவதல்லாது கம்மலையணிந்தால் அழகு தருமோ! கவிதையில் ஒருவித குற்றமுமில்லாத போதிலும் பொருத்தமில்லாமல் உபயோகிக்கப்பட்ட ஒரு சொல் அதை கெடுத்துவிடும். மற்ற பற்கள் முத்து கோத்தது போலிருந்தாலும் ஒரு பல் வெளியே நீட்டிக்கொண்டிருந்தால் முகத்தின் அழகு கெட்டு விடவில்லையா''.

நல்ல கவிதை என்பதுதான் என்ன?

सत्यर्थे सत्सु शब्देषु सति चाक्षरडम्बरे ।

शोभते यं विना नोक्तिः स पन्था इति घुष्यते ॥

—கங்காவதரணம் ஸ. 1-சு. 10

''சொல், பொருள், எழுத்துக்களின் விசித்திர மான சேர்க்கை இவைகளால் மட்டும் கவிதை உரு வாகாது. எது ஒன்று இல்லையேல் கவிதை அழகுடன் இயங்காதோ அதுவே நடை எனப்படும்''.

இந்தக் கருத்தை நீலகண்டரே மேலும் தெளிவாக விளக்குகிறார்:—

विद्वत्प्रियं व्यङ्गयपथं व्यतीत्य

शब्दार्थचित्रेषु कलेर्विलासात् ।

—சிவலீலார்ணவம் ஸ. 1 சு. 37

''கற்றோருக்குப் பிரியமான வியங்கிய நடையை புறக்கணித்து, கலிகாலத்தின் ஆதிக்கத்தினால், சொல் பொருள் சித்திரத்தில் (ஈடுபட்டிருக்கின்றனர் தற்கால கவிகள்)'' என்று சொல்லுவதால், உத்தம காவ்யம் வியங்கிய மார்க்கத்தை அனுசரிக்கிறது என்பது தெளிவாகிறது.

வியங்கியம் ஒரு காரியம், உத்தமக் கவிதையின் குறிக்கோள், லக்ஷணம் எனலாம். இதை அளிக்கும் காரணத்தை அல்லது விருத்தியை வியஞ்ஜனா என்று சொல்லுகிறார்கள். இந்த வியஞ்ஜனா ஒன்று இருப்பதால்தான் ஸாஹித்திய வித்யைக்கே ஒரு சிறப்பு ஏற்படுகிறது.

वाचस्पतिसहस्राणां सहस्रैरपि यत्नतः ।

निबद्धापि क्षयं नैति प्रकृतिर्जगतामिव ॥

என்று உத்கோஷிக்கிருர் த்வனிகாரர். ஆயிரமாயிரம் பிருஹஸ்பதிகள் கவி புனைந்த போதிலும் ஸாஹித்திய வித்யை அதனால் குறைவடைவதில்லை. இயற்கை அன்னையின் ஆற்றல் போல் அளவிட முடியாதது கவியின் சக்தி. இதே கருத்தைத்தான் நீலகண்டரும் ''सदर्थमात्रग्रहणात्'' (சிவலீலார்ணவம் ஸ. 1 சு. 20) என்னும் செய்யுளில் வேறு விதமாக வெளிப்படுத்துகிருர்.

சொல், பொருள், அணி, குணம், நடை இவைகளெல்லாம் வியஞ்ஜனை என்னும் ராஜபாட்டையில் வந்துசேரும் கிளை ரஸ்தாக்களே. வியஞ்ஜனையின் அடிப்படையிலேயே அவைகளுக்கு சோபை ஏற்படுகின்றது. செய்யுளும் ரமணீயமான பொருளை—சொற்கள் சாதாரணமாய் கொடுக்க முடியாத பொருளை உணர்த்துகிறது.

अन्योन्यसंसर्गविशेषरम्या-
प्यलंकृतिः प्रत्युत शोचनीया ।
निर्व्यङ्ग्यसारे कविसूक्तिबन्धे
निष्क्रान्तजीवे वपुषीव दत्ता ।।

—சிவலீலார்ணவம் ஸ. 1. சு. 36

''சரியான முறையில் உபயோகிக்கப்பட்டு அணிகள் விசேஷ அழகாயிருந்தாலும், வியங்கியம் இல்லாத காவ்யத்தில் அவைகள் வியர்த்தமே. அது உயிரில்லாத உடலுக்கு அழகு செய்வது போலேயாகும்''

உத்தமமான கவி செய்வது மிகவும் கஷ்டம் தான்.

क्वार्थाः क्व शब्दाः क्व रसाः क्व भावाः
क्व व्यङ्ग्यभेदाः क्व च वाक्यरीतिः ।
कियत्सु दृष्टिः कविना न देया
किमस्ति राज्ञामियतीह चिन्ता ।।

—சிவலீலார்ணவம் ஸ. 1-சு. 30

''சொல்லும், பொருளும், ரஸமும், பாவமும், வியங்கிய வகைகளும், நடை அழகும்—இவை எல்லாவற்றையும் ஒருங்கே கவனித்தல்லவா கவி புனைய வேண்டும். கவி செய்வதிலுள்ள பிர யாஸையைக் கவனித்தால் ஒரு ராஜ்யத்தை அர சாளும் பொறுப்பு விளையாட்டென்றே தோன்றும்''

உயர்ந்த கவிதை ஒன்றை ஆக்கிவிட்டோ மென்று வைத்துக்கொள்ளுவோம். அது என்ன இன்பத்தைத் தான் கொடுக்காது.

व्यामोहयन्ती विविधैर्वचोभि-
र्व्यावर्तयन्त्यन्यकलासु दृष्टिम् ।
कालं महान्तं क्षणवन्नयन्ती
कान्तेव दक्षा कविता धिनोति ।।

—சிவலீலார்ணவம் ஸ. 1-சு. 24

''பொருள் நிறைந்த வசனங்களால் நம் கருத் தைக் கவர்ந்து, இதர கலைகளிலிருந்து நம் மனத்

தைத் திருப்பி, திறமையுள்ள காமக்கிழத்தியைப் போல் நல்ல கவிதை காலங்கழிவதையே மறந்து போகும்படி செய்து விடுகிறது''. ஆனால் கவிதை இன்பத்தை நுகருவதிலும் ஒரு திறமையிருக்கின்றது.

रसं रसज्ञाः कलयन्ति वाचि
परे पदार्थानपरे पदानि ।
वस्त्रं कुविन्दा वणिजो विभूषां
रूपं युवानश्च यथा युवतीनाम् ॥

—சிவலீலார்ணவம் ஸ. 1 சு. 60

''காவ்யத்தில் உள்ளடங்கியிருக்கும் சுவையையே ரஸிகர்கள் மதிக்கின்றனர். ஏனையோர் பதங்களின் வெறும் பொருளையும், வேறு சிலர் சொல்லையும் ஒரு பொருட்டாகக் கருதுகின்றனர். பெண்ணின்அழகையே வாலிபர்கள் மதிக்கின்றனர். ஆனால் சாலியர்கள் அவள் கட்டியிருக்கும் சேலையை கண்டும் வியாபாரிகள் அவள் அணிந்திருக்கும் அணிகளைக் கண்டும் மதிக்கின்றனர்''.

உயர்ந்த கவிதையே மேற்சொன்னபடி இன்பத்தைக் கொடுக்கவல்லது. ஆதிகாலம் தொடங்கி பெரிய ஆலங்காரிகர்கள் மட்டரகமான கவிதை செய்பவர்களை வன்மையாகக் கண்டித்திருக்கின்றனர்.

''कुकवित्वं पुनः साक्षान्मृतिमाहुर्मनीषिणः''

—காவ்யாலங்காரம் I-12

''மட்டமான கவி செய்யும் தன்மையானது மரணத்திற்கு ஸமானமாகும் என்று பெரியோர் கருதுகின்றனர்'' என்கிருர் பாமஹர். நீலகண்டரோ மட்டமான கவி செய்பவன் நிலேயைப் பற்றி வருந்தவில்லே. அவனுடைய கவிதைகளால் ஏற்படும் விபரீதத்தை நினேந்தே வருந்துகிருர்.

वाचं हतो यद्यपि ते तथापि
न मूकता दुष्कवितैव दोषः ।
आद्या यदेकस्य विषादहेतुः
प्राणोपरोधाय परा बहूनाम् ॥

—சிவலீலார்ணவம் ஸ. 1 சு. 56

''ஊமையின் நிலேமை கஷ்டமானதுதான்; இருந்தாலும் அது மட்டமான கவி செய்பவனின் நிலேக்கு சமமாகாது. ஊமையாயிருப்பதால் அவன் ஒருவனுக்கே, கஷ்டம் உண்டாகிறது. ஆனுல் மட்டமான கவிதையாலோ எண்ணிறந்த பேர்களுக்கு மரணவேதனே ஏற்படுகிறது''

இவ்விதமாக கவிதையின் உயர்வு, உத்தமக் கவிதையின் லக்ஷணம், கவி-ஸஹ்ருதய ஒற்றுமை, காவ்யானுபவம், மட்டக் கவிதையின் கண்டனம் முதலிய விஷயங்களே மிகவும் அழகாகவும், சாதுர்யமாகவும், தமது ஆழ்ந்த அனுபவத்திஞல் நமக்கு எடுத்துரைக்கிருர் நீலகண்டர்.

நீலகண்டரின் கவிச்சிறப்பு

நீலகண்டருடைய நூல்களை ஆராயும்பொழுது ஓரளவு அவருடைய கவிதையின் சிறப்பையும் விளக்கினேம். இப்பொழுது காவ்யதத்வத்தின் அடிப்படையில் அவர் கவிதையின் சில முக்கியமான அம்சங்களை கவனிப்போம்.

முதலாவதாக நம் கவனத்தைக் கவருவது அவருடைய எளிய நடை. பிற்காலத்தவரின் கரடு முரடான நடையைக்கண்டு அஞ்சியவர்களுக்கு இது ஒரு உள்ள மகிழ்ச்சியைத் தருகின்றது. அர்த்தமற்ற சொல் அணியும்(யமகம் முதலியன) பொருள் அணியும் (சிலேஷை முதலியன), மற்றும் பந்தங்களும், அவருடைய நூல்களில் மிகக்குறைவே. வைதர்பீ என்னும் நடையைக்கையாளுகிருர். பிரயாசையால் உருவான செயற்கைக்கவிதையல்ல நீலகண்டருடையது.

தனது கற்பனுசக்தியால் உருவாக்கும் கவிதையின் மூலம் தேசம், காலம், இவைகளால் ஏற்படும் வித்தியாசங்களை மறக்கச்செய்து எப்பொழுதோ எங்கேயோ நடந்த சம்பவத்தை இங்கு இப்பொழுது நாம் அனுபவிக்கும்படி செய்கிருன் உத்தமக்கவி. நீலகண்டரின் காவ்யங்களை வாசிப்போர் இதை நன்ருய் உணரமுடியும். கதம்பவனத்தில் ஸுந்தர நாதரின் லிங்கத்தை வர்ணிக்கும் செய்யுட்களை வாசிக்குங்கால் நாம் நம்மையும் நம்மைச்சூழும்

உலகத்தையும் மறந்து பண்டைக்கால உலகிற்குச் சென்று விடுகின்ருேம். எங்கும் ஒரு அமைதி. கதம்பவனத்திலுள்ள மரங்களே ஈசுவரனுக்கு அஞ்ஜலி செய்வது போலிருக்கின்றன. செய்யுட்களின் முழு எழிலேயும் வர்ணிப்பது மிகுந்த சிரமம். ஆனுல் ஊன்றி வாசிக்கும் ஸஹ்ருதயனின் மனதில் என்னவென்ன அனுபவமெல்லாம் ஏற்படுகின்றன! ரமணீயமான ஆசிரமங்கள், அங்கே தவம் செய்து கொண்டிருந்த பெரியோர்கள், உலகெல்லாம் வியாபித்து நின்ற ஒரு ஈசுவரதத்துவம், அதில் உன்னதமான நம்பிக்கை, அதன் விளேவாக எழுந்த பக்தி இவையெல்லாம் ஒன்ருென்ருய்த்தோன்றி மறைந்துபோன காலத்தை நினேந்து மனம் கசியும் படி செய்கின்றது. இவ்விடத்தில் கவி நாகரீக வாழ்க்கையிலிருக்க நேரிடினும் அவருடைய உள்ளம் நமது பாரம்பரிய செல்வமாகிய ஆசிரம வாழ்க்கையிலேயே லயித்திருந்தது என்பது தெள்ளத்தெரிகின்றது. அவர் தமது அந்திய நாட்களேக் கழித்த கிராமம் முன்னூறு வருஷங்களுக்கு முன்—நாகரீகத்தின் ஆதிககம் தாம்ரபர்ணி நதியை பாழாக்குவதற்குமுன் — நம் பண்டைக்கால் ஆசிரமங்கள் போலவே இருந்திருக்கும் என்பது இன்று கூட நாம் அக்கிராமத்திற்குச் சென்ருல் ஊஹிக்க முடியும். தாம்ரபர்ணி நதியையும், அதன் அருகிலுள்ள பிரதேசத்தையும் அவர் வர்ணித்திருக்கும் அழகைச் சிந்தித்துப்பார்த்தால் சிவலீலார்ணவத்தை அவர் பாலாமடை சென்ற பிறகே எழுதியிருக்கலாம் என்று தோன்றுகிறது.

இயற்கையின் சிறந்த அம்சங்களை வர்ணிக்கும் சக்தி உண்மைக் கவிக்கு இன்றியமையாதது. ராஜ ஸபையிலேயே தம்வாழ்க்கையின் பெரும் பகுதியைக் கழித்தபோதிலும் நீலகண்டருடைய கவிதா உள்ளம் இயற்கையின் சோபையிலேயே ஈடுபட்டிருந்தது.

मन्दानिलोऽसौ मलयानिलोऽसौ
गन्धानिलोऽसावित्ति यं युवानः ।
संभावयन्ते चलितैः शिरोभिः
स कोऽपि यत्कोणभवः समीरः ॥

—சிவலீலார்ணவம் ஸ. 2-சு. 4

''மந்தமாருதம் இது; மலயமாருதம் இது; மணம் கமழும் காற்று இது'' என்றெல்லாம் தலைகளை அசைத்து எந்த மேல் காற்றை வாலிபர்கள் கௌரவிக்கிறார்களோ அந்த மேல் காற்று உற்பத்தியாகும் பாண்டிய நாடு'' என்று மேல் காற்றை அனுபவிக்கிறார் கவி. செய்யுளின் சொல் நயம் நோக்கத் தக்கது.

சூரியன் அஸ்தமித்து விட்டான். எங்கும் ஒரே இருள். குளத்தின் கரையில் அமர்த்த ஒருவனுக்கு,

शैवलोत्पलभृङ्गाणां सरसीषु निशामुखे ।
स्पर्शसौरभकूजाभिः स्वं स्वं रूपमबुध्यत ।
अयःश्रृङ्खलवत्क्रष्टुमाहर्तुं तृणपूलवत् ।
आश्यानपङ्कवच्छेत्तुमासीच्छक्यं तदा तमः ॥

—சிவலீலார்ணவம் ஸ 4 சு. 58, 60

''இரவின் ஆரம்பத்தில் பாசி, ஆம்பல், வண்டுகள் இவைகள் தங்கள் தங்கள் இருக்கையை முறையே ஸ்பர்சத்தாலும், மணத்தினுலும், ரீங்காரத்தினுலும் தெரியப்படுத்தின. அந்த இருளை இரும்புச் சங்கிலியைப்போல் இழுப்பதற்கும், கோரைப் பாயைப் போல் மடக்கிஎடுக்கவும், உலர்ந்த சேற்றைப்போல் வெட்டுவதற்கும் முடியும்'' என்று தோன்றுகிறது.

இரவு கழிகின்றது; சூரியன் உதயமாகிருன்.

आयास्यतो दिनमणेरभिकस्य वार्ता
प्राभातिकानिलमुखादवधारयन्ती ।
उद्दण्डपङ्कजतया किल पद्मिनीय-
मुद्ग्रीविकां वहति वासकसज्जिकेव ॥

—சிவலீலார்ணவம் ஸ 9-சு. 3

''குளத்தில் தாமரையின் நீண்டு உயர்ந்திருக்கும் தண்டின் நுனியில் தாமரைப்பூ மலர்ந்திருப்பதைப் பார்த்தால் பின்னுல் வரப்போகும் சூரியன் என்னும் தன் காதலனுடைய மொழிகளைக் காலைக் காற்று என்னும் தூதுவன் மூலம் அறிந்த தாமரை தன் கழுத்தை நீட்டிப்பார்க்கும்[1] வாஸக ஸஜ்ஜிகை போல் தோற்றமளிக்கிறது.

उन्मुद्रिते सति मनागरविन्दकोशे
भृङ्गैरहंप्रथमिकाकलितप्रवेशैः ।

---

1. தான் அலங்காரம் செய்து கொண்டு காதலனுடைய வரவை எதிர்பார்க்கும் காதலிக்கு வாஸக ஸஜ்ஜிகை என்று பெயர்.

आस्कन्द्यमानमपि सौरभमेकतस्त-
दादाय यान्त्यपरतो मरुतो यथेच्छम् ॥

—சிவலீலார்ணவம் ஸ. 9-சு. 6

''சிறிதே மலர்ந்த தாமரைகளில் 'நான் முதல் நான் முதல்' என்று வண்டினங்கள் வந்து நுழைந்து மொய்த்தபோதிலும் அங்குள்ள நறுமணத்தைச் சுமந்து காற்று ஒருபக்கமிருந்து மறு பக்கம் தன் விருப்பம் போல் வீசுகின்றது''

अम्भोनिधेस्तपनवाजिभिरुज्जिहानै-
राधूतकन्धरसटैरसकृद्विकीर्णा ।
सामुद्रविद्रुमलताशकलावलीयं
प्राचीमुखे विजयते न तु सान्ध्यरागः ॥

—சிவலீலார்ணவம் ஸ. 9-சு, 8

''ஸமுத்திரத்திலிருந்து கழுத்து மயிர்களை ஆட்டிக்கொண்டு கிளம்பிய சூரியனுடைய குதிரைகளால் கிளப்பி வாரி இரைக்கப்பட்ட ஸமுத்திரத்தில் உள்ள பவழக்கொடித் துண்டுகள்தான் காலை நேரத்தில் கிழக்கில் சிகப்பாகத் தெரிகின்றன.''

கோடைகாலத்தின் கொடுமையை நமக்கு கவி உணர்த்துகிறார் :-

कामिनः पथि तलेषु तरूणां गाढनम्रविटपेषु निवेश्य ।
अध्वखेदमहरन्त वधूनामम्बुभिः कमलिनीदलनीतैः ॥

उत्तरीयमहरत्कुम्भाद्दुग्मम जं मुखगर्भपयांसि ।
अङ्गभङ्गभपि पान्थमधून मालिलिङ्ग सुकृती वनवातः ॥

—கங்காவதரணம் ஸ. 2-சு. 38, 39

''மரங்களின் அடர்ந்து தணிந்திருந்த கிளைகளின் நிழலில் அமர்ந்த காதலர்கள் வழிநடந்த களைப்பினுல் வருந்திய பெண்டிரை தாமரை இலைகளில் எடுத்து வந்த தண்ணீரினுல் ஆச்வாசப் படுத்தினர்.''

''மார்பினின்று பெண்டிரின் மேலாடையை விலக்கிற்று; அவர்களின் முகத்தில் அரும்பிய வியர்வையை போக்கடித்தது; அவர்களின் ஒவ்வொரு அவயவத்தையும் வருடியது, என்னே அவ்வனமாருதம் செய்த புண்ணியம்!''

வஸந்தகாலம் வேறு விதமாய்த் தோற்றமளிக்கிறது.

प्रम्लाना धरणिरुहः स्वतः प्रसेदु-
निष्क्रान्ते मलयगिरेर्बहिः समीरः ।
वीरश्रीर्विषमशरस्य बाहुकाण्डे
विश्रान्तिं स्वयमभिरोचयांबभूव ॥

—சிவலீலார்ணவம் ஸ. 6 சு. 12

''உலர்ந்த மரங்களெல்லாம் தாமே தளிர்த்தன மலய பர்வதத்திலிருந்து மெல்லிய மேல் காற்று வெளியே வீசத்தொடங்கியது, வீரலக்ஷ்மியும் தானுகவே மதனனின் அரவணைப்பில் களைப்புத் தீர்க்க விரும்பினுள்.''

आचूड कुसुममया म ाया मधोः प्रसादा-
द्वासन्तीविचकिल कूरकाद्याः
धुत्तूरेष्वपि च निरीक्ष्य तां समृद्धि
मन्दाक्षादिव नतमौलयो बभूवुः ॥

சிவலீலார்ணவம் ஸ. 6-சு. 20

"வஸந்தனின் அருளால் பூத்துக் குலுங்கிய மல்லிகை, முல்லை, மா, சம்பகம் முதலியன (செடி, கொடிகள்) அதே நிறைவை ஊமத்தைச் செடியிலும் கண்டு வெட்கமடைந்தாற்போல் உச்சி வளைந்து நின்றன."

இயற்கை எழிலைக் கண்டு அனுபவிக்கும் திறமையுடன், மனித சுபாவத்தையும், மனித உள்ளத்தில் எழும் கிளர்ச்சிகளையும் நன்கு ஆராய்ந்து, அறிந்து அவைகளை அற்புதமாய்ச் சித்தரிக்கும் ஆற்றலும் அவரிடம் உயர்ந்த அளவில் இருக்கிறது.

தன்னை மறந்து தவம் செய்து கொண்டிருக்கும் விருத்ராஸுரனைக் கொன்று விட்டால் தாங்கள் வெற்றியடையலாம் என்று இந்திரன் தேவர்களிடம் சொல்ல அவர்களும் அதை ஆமோதிக்கின்றனர்.

प्रकृतिर्ह्युपथे रुचिः प्रजानां
किमुत स्वामिनि तादृशेऽपि लब्धे ॥

சிவலீலார்ணவம் ஸ. 3-சு. 7

"இயற்கையிலேயே ஜனங்களுக்குக் கெட்ட

வழியில் செல்வதில் ஒரு ருசியிருக்கின்றது. அவர்களை அவ்வாறு செய்யத்தூண்டும் அரசனும் கிடைத்து விட்டால் கேட்கவேண்டுமா?''

மதுரையை நோக்கி ஆக்ரமித்த ஸமுத்திரத்தை பரமேசுவரர் தம் ஜடையிலிருந்து மேகத்தை சிருஷ்டித்து வற்றவைக்கிறார்.

अपि वीक्ष्य तदद्भुतं मह-
द्वरुणो न व्यरमत्परीक्षणात् ।
विबुधेष्वपि चेदियं दशा
मतिभेदो मनुजेषु नाद्भुतः ॥

—சிவலீலார்ணவம் ஸ. 15-சு. 5

''அந்த அற்புதத்தை நோக்கியும் வருணன் மேலும் தான் பரிஷை செய்யக்கூடாதென்பதை அறியவில்லை. தேவர்களுக்கே இப்படிப்பட்ட நிலைமை வருமானால் மனிதர்கள் மதிகெட்டு நடக்கிறார்கள் என்பதில் ஆச்சரியமில்லை.''

மன்னன் எவ்வாறு குடிகளிடம் நடந்துகொள்ள வேண்டுமென்பதைச் சொல்லுகிறார் :—

जना जिहासन्ति नृपालमूष्मल
तिरश्चिकीर्षन्ति मृदुं निसर्गतः ।
अतोऽप्रमत्तस्त्वमनुष्णशीतलो
भव प्रजानां शरदीव भास्करः ॥

சிவலீலார்ணவம் ஸ. 5-சு. 20

''கடுமையாய் நடந்துகொள்ளும் மன்னனைக் குடிகள் வெறுக்கின்றனர். மிருதுவான சுபாவமுள்ளவனுயிருந்தால் அவனை அலஷ்யம் செய்கின்றனர். ஆகையால் புத்தியை இழக்காது அதிகச்சூடோ குளிரோ இல்லாத சரத்கால சூரியனைப்போல் குடிகளிடம் நடந்துகொள்'' சிறந்த உவமை அணி.

இவைகள் பொதுவாக உலக இயல்பையும் மனித ஸ்வபாவத்தையும் விளக்குகின்றன. மனித உள்ளத்தில் எழும் கிளர்ச்சியை-அது காதலோ, கோபமோ வேறு எந்த பாவமோ-அதை வர்ணிக்கும் கால் ஸஹ்ருதயனின் மனம் அதில் முற்றிலும் ஈடுபட்டு (தன்மயப்பட்டு) ஒரு அலௌகிகமான இன்பத்தை அனுபவிக்கிறது. இதுவே ரஸம் எனப்படும். பாத்திரங்களின் வேறுபட்ட லௌகிக பாவங்கள் கவியின் த்வனி விசேஷத்தினுல் அலௌகிக ரஸானுபவமாக முடிவடைகின்றன. எந்தரஸமும் இன்ப வடிவமாகவே உளது. உத்தமக் கவிதையின் சிறந்த அம்சமும் ரஸச் சித்திரங்களே. இப்பொழுது நீலகண்டரின் சில ரஸச் சித்திரங்களை நோக்குவோம்.

ஒரு அழகான மங்கை ஒருவனிடம் காதல் கொண்டிருக்கிருள். காதலனை சந்திக்க முடியவில்லை. அவனையே நினைந்து துன்பப்படுகிருள். அவளை கவி நமக்குக் காட்டுகிருர் :—

दीनां दृष्टिमजस्रबाष्पपतनोन्छूनां दिशन्ती पदे

क्षामं व्याकुलितालकं च दधती भूयः कपोलं करे ।

श्वासेन स्खलितान्तरेण कुचयोरुत्कम्पमातन्वती
केनेयं विधिवञ्चितेन तरुणी यूना शुचं नीयते ।।

— நளசரித்ரம் III-5

''ஓயாது அழுது கண்ணீர் வடித்ததனுல் வீங்கிய கண்களின் மகிழ்ச்சியற்ற பார்வையை தன் பாதங்களில் பதிய வைத்திருக்கிருள். கேசம் கலைந்து மெலிந்த கன்னத்தில் தொங்குகிறது. அந்தக் கன்னத்தைக் கையால் தாங்கிக்கொண்டிருக்கிருள். பெருமூச்சு அடிக்கடி விடுவதால் ஸ்தனங்கள் விம்மி விம்மி எழுகின்றன. ஐயோ விதியால் வஞ்சிக்கப் பட்ட எந்த வாலிபன் பொருட்டு இப்பெண்மணி சோகத்திற்கு ஆளாய் விட்டாள்''. நள சரித்திர நாடகத்தில் தமயந்தியின் நிலையை இவ்வாறு சித்தரிக்கிருர். இது ஒரு வண்ணம் பெற்ற ஓவியம். ஸ்வபாவோக்தி அலங்காரத்திற்கு [தன்மை நவிற்சி அணி] நல்ல பொருத்தமான உதாரணம்.

கோபமடைந்த துர்வாஸ முனிவர், அவர் கோபத்தைக் கண்டு அஞ்சும் அமரர்கள், இந்த இருவர்களின் பாவங்களையும் நீலகண்ட விஜயத்தி லிருந்து காண்போம்.

पश्यन् पदाग्रमृदितां महता गजेन
मालां प्रसादपरिपाकमयीं मृडान्या: ।
हस्तेन हस्तमभिहत्य स नित्यकोप:
कोपारुणं मुनिरधारयदक्षिकोणम् ।।

वीरभद्र इव क्रुद्धे वीरभाहेश्वरे मुनौ ।
इतिकर्तव्यतामूढमिन्द्रमैक्षन्त देवताः ॥
यावत्सान्त्वयितुं तदन्तिकभुवं धावन्ति मन्दीभव-
त्काकुव्याकुलगद्‌गदस्तुतिवचोगुम्फा निलिम्पाःस्वयम् ।
तावद्देवपतिं शशाप कुटिलक्रूरभ्रमत्तारक-
भ्रूभङ्गव्यतिषङ्गदत्तभुवनातङ्को मुनिः शाङ्करः ॥

— நீலகண்ட விஜயசம்பூ 1-24, 25 26

''அம்பாளின் சிறந்த பிரஸாதமாகிய பூமாலே அந்தப் பெரிய யானையின் காலடியில் மிதிக்கப் பட்டதை நோக்கியதும் நித்ய கோபராகிய அம் முனிவர் கையின்மேல் கையை வைத்து நெறித்து கண்களில் கோபக்கனல் வீசநின்ருர். வீர சைவ ராகிய முனிவர் வீரபத்திரர்போல் கோபம் கொண்டு நிற்க, என்ன செய்வது என்று தெரியாது நின்ற இந்திரனை தேவர்கள் நோக்கினர். எவ்வாருவது யஜமானனை காப்பாற்றவேண்டும் என்ற ஆவலுடன் முனிவரை சமதானப்படுத்த தேவர்கள் அவர் அருகாமையில் சென்று பயத்தால் குரல் கம்மி நாக்குழற ஏதோ வார்த்தைகளை ஸ்துதி பாடுவதாக நினைந்து உளறிக் கொண்டிருக்கும்பொழுதே சிவனடியாராகிய அம் முனிவர் பயங்கரமாய்க் கண் களைச் சுழட்டி புருவத்தை நெறித்து உலகெல்லாம் திடுக்கிடச்செய்து இந்திரனுக்கு சாபத்தைக் கொடுத்தார்,''

இம்மாதிரி பாவங்களை சிறந்த சொல் நயத்துடனும் [கோபத்தை வெளிப்படுத்தும் குடிலக்ரூர என்ற சொற்ருெடரில் வல்லினங்களை அதிகமாய்க் கையாண்டிருப்பது கவனிக்கத்தக்கது] பொருத்தத்துடனும் நம் கண் முன் கொண்டு நிறுத்தி விடுகிருர்.

தொன்று தொட்டு கவிஞர்கள் தங்கள் கற்பனு சக்தியின் உயர்வுக்கும் அழகுக்கும் எடுத்துக்காட்டாக தங்கள் செய்யுட்களில் அணிகளைக் கையாண்டிருக்கின்றனர். அணிகளின் எண்ணிக்கை ஸம்ஸ்க்ருத இலக்கியத்தில் நூற்றுக்கு மேற்பட்டது பெரும்பாலும் இவ்வணிகளின் வேறுபாடுகள் பெயரளவிலேயே. முக்கியமாக நாம் இங்கு உவமை, உருவகம், அர்த்தாந்தர ந்யாஸம், வக்ரோக்தி இவ்வணிகளையே எடுத்து விளக்குவோம்.

'नीलकण्ठस्य वक्रोक्तिः सा मुग्धेन्दुकलानिभा ।'

என்று மஹாமஹோபாத்தியாய S. குப்புஸ்வாமி சாஸ்திரியார் நீலகண்டரின் வக்ரோக்திகளை புகழ் கிருர் வக்ரோக்தி என்ருல் என்ன? ஸ்வபாவோக்தி இல்லாததெல்லாம் வக்ரோக்தியே என்று ஒரு பிரசித்தி பெற்ற ஆலங்காரிகர் கூறியிருக்கிருர். உள்ளதை அவ்வாறே உரைப்பது ஸ்வபாவோக்தி. அதை சமத்காரமாய் உரைப்பது வக்ரோக்தி எனலாம். ஆனுல் இது முற்றிலு ம்உண்மையாகாது,

सैषा सर्वैव वक्रोक्तिरनयाऽथ विभाव्यते ।

यत्नोऽस्यां कविना कार्यः कोऽलंकारोऽनया विना ॥

— காவ்யாலங்காரம் 11-85

என்று பாமஹரும், 'वक्रोक्तिः काव्यजीवितम' என்று குந்தகரும் கூறியிருப்பதால், காவ்யத்தின் உயர்வுச்கு வக்ரோக்தி இன்றியமையாதது என்று தெரிகிறது. ஆனந்த வர்த்தனரும், மம்மடரும், பாமஹரின் சித்தாந்தத்தை ஆதரிக்கின்றனர். எனவே வக்ரோக்தி எல்லா அணிகளுக்கும் அடிப்படையாக உள்ளது என்றும், அது கேவலம் சிலேஷைச் சித்திரமல்ல என்றும் தெளிவாகிறது. ஒரு விஷயத்தை சாதாரணமாய் சொல்லும் முறையிலிருந்து மாறுபட்டு உரைப்பதினல் அவ்விஷயம் அழகுடனும் தெளிவாகவும் ஸஹ்ருதயனின் மனதை வசீகரம் செய்யும் முறையிலும் அமைய வேண்டும். எல்லாவற்றிற்கும்மேல் ஔசித்யத்திற்குப் பங்கம் ஏற்படாது அவ்வக்ரோக்தி கையாளப்பட வேண்டும். தவிரவும் நீலகண்டரே,

वक्रोक्तये यत्र विभूषणानि
वाक्यार्थबाधः परमप्रकर्षः ।
अर्थेषु बोध्येष्वमिधैव दोषः
सा काचिदन्या सरणिः कवीनाम् ॥

— சிவலீலார்ணவம் ஸ. 1-சு. 19

''சிறந்த கவிகளின் நடையே ஒரு அலாதித்தன்மையை உடையது. அந்த நடைக்கு வக்ரோக்தி

களே ஆபரணங்களாகின்றன. வாக்கியத்தைக் கேட்டவுடன் ஸாதாரணமாகத் தோன்றும் அர்த்தத்தை புறக்கணிப்பதே அதன் தனிச் சிறப்பு. பதங்களிலிருந்து பொருளை உணர்த்துவதற்கு [1] அபிதா (आभिधा) என்னும் விருத்தியைக் கைக்கொள்வதே. அதற்கு இழுக்கைத் தருவது'' என்று கூறுவதிலிருந்து வக்ரோக்தியும் த்வனி மார்க்கத்தையே அனுஸரிக்கிறது என்பதும் தெரிகிறது. உத்தமமான வக்ரோக்தியை (चन्द्रशकलवत) சந்திரகலைபோல் என்று ஆலங்காரிகர்கள் வர்ணிக்கின்றனர். வக்ரோக்தியைப் பற்றிப் பொதுவாக சில தப்பிதமான அபிப்பிராயங்கள் நிலவி வருவதால் அதன் தத்துவத்தைச் சற்று விளக்கினேம். இனி நீலகண்டருடைய காவயங்களிலிருந்து சில உதாஹரணங்களை நோக்குவோம்.

अन्या विशन्त्य: सरित: समुद्र-
मापूरयन्ते जलजन्तुभि: स्वै: ।
रत्नापगा यत्र तु संपतन्ती
रत्नाकरत्वं रमणस्य तत्ते ॥

— சிவலீலார்ணவம் ஸ. 2-சு. 17

''கடலில் சேரும் மற்ற நதிகளெல்லாம் தங்களிடமிருக்கும் மீன், தவளை, முதலை, பாம்பு முதலான பிராணிகளால் அதை நிரப்புகின்றன.

1. அபிதா (अभिधा), லக்ஷணா (लक्षणा), வ்யஞ்ஜனா (व्यञ्जना) என்னும் மூன்று முறைகளால் சொற்கள் பொருளை உணர்த்துகின்றன.

ஆனுல் தாமிர பர்ணியோ (தான் ஸமுத்திரத்துடன் கலக்குமிடத்துமுத்தைச் சொரிந்து) தனது கணவனுக்கு 'ரத்னுகரம்' என்னும் பெயரை அடை யும் பாக்யத்தைக் கொடுக்கிருள்''.

ரத்னுகரம் என்று தென் ஸமுத்திரத்திற்குப் பெயர். தாமிரபர்ணி ஸங்கமத்தில் முத்து உற்பத்தி யாகிறது என்பது பிரஸித்தம். இந்த உண்மையை, பிற நதிகளினின்றும் மாறுபட்ட முறையில் முத்துக் களால் கடலை நிரப்புகிருள் என்பதை த்வனியினுல் நமக்கு உணர்த்தி, இக்காரணத்தினுலேதான் இங்கு கடலுக்கும் ரத்னுகரம் என்ற பெயர் கிடைத்தது என்று வெகு சாதுர்யமாக கவி நமக்கு விளக்குகிருர்.

कवितामफलद्वीटी कालिदासमुखेऽर्पिता ।
पत्युर्मुखे तु सा गौर्याः परुषं निगमाक्षरम् ॥

— கங்காவதரணம் ஸ. 1-சு. 4

''காளிதாஸனுடைய வாயில் ஈயப்பட்ட அம்பா ளின் தாம்பூல ரஸம் உலகிற்கு கவிதையை அளித்தது. ஆனுல் தன்னுடைய நாயகனின் வாயில் அர்ப்பணம் செய்யப்பட்ட அதே தாம்பூல ரஸம் கடுமையான நடையுள்ள வேதத்தை ஈன்றது''.

இந்தச் செய்யுளில் அடங்கியிருக்கும் பொருளின் சிறப்பு நன்ருய் அனுபவிக்க வேண்டியது. உலகில் வித்யாரூபிணியாகிய அம்பாளின் அருளினுலேதான் சொல் வெளிப்படுகிறது. ஈசனுல் அருளப்பட்ட

மறையும், காளிதாஸனல் ஆக்கப்பட்ட கவிதையும் அவள் செயல்களே. வேதம் கடினமானது; எல்லோரும் பயிலமுடியாது. அதனல் அதன் நோக்கத்தையே எளிய முறையில் புகட்ட கவிதை ஏற்பட்டது. காளிதாஸன் அம்பாளின் கிருபைக்குப் பாத்திரமானதால் நிகரற்ற கவியாக விளங்குகிருன். இதுபோன்று பலவிதமான பொருள்கள் இந்தச் செய்யுளினின்று நமக்குக் கிடைக்கின்றன.

वन्दे वाञ्छितलाभाय कर्म किं तन्न कथ्यते ।
किं दम्पतिमिति ब्रूयामुताहो दम्पती इति ॥

— நீலகண்டவிஜயசம்பூ I-1

இது நீலகண்ட விஜயசம்பூவின் முதல் சுலோகம். ''நான் விரும்பும் பலனை அடைவதற்காக வணங்குகிறேன். யாரை? அது சொல்லப்படவில்லை. 'தம்பதிம்' (दम्पतिं) என்று சொல்வதா அல்லது 'தம்பதீ' (दम्पती) என்று சொல்வதா என்பது தெரியவில்லை''. தம்பதீ (दम्पती) என்னும் பதம் ஒரு பெண்ணும் ஒரு ஆணும் சேர்ந்த ஜோடியைக் (இருவர்களை) குறிக்குமாதலால் ஒரே மூர்த்தியானஅர்த்தநாரீசுவரரை (கவியின் இஷ்ட தேவதையை) அச்சொல்லால் குறிப்பிட முடியாது. தம்பதிம் (दपदिंतीं) என்று சொன்னல் அது இலக்கணப் பிழையாகும். ஆதலால் தம் இஷ்ட தேவதையை எவ்வாறு குறிப்பிடுவது என்று ஒரு கேள்வியையே விடையாக கவி தருகிருர். இந்த வக்ரோக்தியின் த்வனியாக பிரஹ்ம

ஸ்வரூபம் அத்வைதம் அவாங்மனஸ கோசரம் என்னும் வேதாந்த ஸித்தாந்தத்தை நமக்கு கவி புகட்டி விடுகிருர்.

வாதபுரீசுவரரின் துயர் நீக்கக் கருதி சிவபிரான் காட்டிலுள்ள நரிகளை குதிரைகளாக்கி அவைகளை குப்ஜ பாண்டியன் முன்னிலையில் நிறுத்துகிருர். அவனிடம் அவைகளை கிரயத்திற்குக் கொடுக்க சம்மதித்துச்சொல்லுகிருர்—

....।
...................पश्य शिवास्तुरङ्गाः ॥

गुल्मेषु कुञ्चेषु वनोदरेषु
केदारकेषूपवनेषु चामी ।
स्वच्छन्दचारा लघुविक्रमाश्च
तरन्ति तोयेष्वपि दुस्तरेषु ॥
न श्वोऽयमस्तीति किलाश्वशब्द-
स्तन्त्रैर्निरुक्तो विदितस्तवापि ।
सम्यक्परीक्ष्य त्वमिमान्गृहाण
धनं ममैतत्तरगास्तुवेमे ॥

—சிவலீலார்ணவம் ஸ 21 சு. 47, 48, 49

''மங்களகரமான (நரிகளான) குதிரைகளைப் பாருங்கள். புதர்களிலும், குஹைகளிலும், காடுகளிலும், மலைகளிலும் தோட்டங்களிலும் இஷ்டம்போல்

இவைகள் சஞ்சரிக்கும். வேகமாய் ஓட வல்லவை. நீரிலும் இவைகள் அலக்ஷ்யமாய்ச் செல்லும். அச்வ; (अश्वः) என்னும் பதத்திற்கு (न श्वः) ந-ச்வ: (நாளை யில்லை) என்னும் பொருள் சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது. இவ்விஷயம் நீங்களும் அறிந்ததே. நன்ருய்க் குதிரைகளைப் பார்த்துக் கொள்ளுங்கள். அப்புறம் வாங்குங்கள். பணம் எனக்கு. இக்குதிரைகள் உங்களுக்கு,''

இதை வாசிப்போர் அர்த்தம் பண்ணிக்கொள்ளுவதிலும், அரசன் எவ்வாறு அர்த்தம் செய்துகொண்டான் என்பதை எண்ணுவதிலும் கவியின் சாதுர்யம் நன்கு தெரிகிறது. இதில் ஒரு சொல்லேனும் பொய்யாக உரைக்கப்படவில்லை என்பது கவனிக்கத் தகுந்தது. இதை ஆங்கிலத்தில் dramatic irony என்பர்.

दिगम्बरः काञ्चनमम्बरं हरः
कथं बभारेति न विस्मयाय नः ।
तनुत्विषा तस्य दिशो दशापि यत्
प्रतप्तकार्तस्वरभास्वरीकृताः ॥

—சிவலீலார்ணவம் ஸ. 11-சு. 28

''திகம்பரரான (திசைகளையே ஆடையாகக் கொண்ட) பரமசிவன் பொன்னுடையை அணிந்துள்ளார் என்பது ஆச்சரியமல்ல. அவருடைய சரீர காந்தியால் பத்து திசைகளும் உருக்கின தங்கம் போல் ஒளியை அடைந்தன.'' பரமசிவனை திகம்பரர்

என்று கூறுகின்றார்கள். இங்கே பொன்னுடை அணிந்தவர் என்று கூறுவதால் அவருக்கு திகம்பரர், வேறு ஆடையில்லாதவர், பிக்ஷாடனர். இவருக்கு பொன்னுடை வாங்கும் சக்தி எப்படி வந்தது என்று ஆச்சர்யம் ஏற்படுகிறது. எல்லாவற்றிற்கும் ஸமா தானம் கூறுகிறார். திகம்பரர்தான், ஆனாலும் இவர் ஆடையான திசைகளே சரீரகாந்தியால் தங்கமாக பிரகாசிக்கிற படியால் காஞ்சனாம்பரர் ஆகிறார்.

நீலகண்டர் உவமைகளை வெகு அழகாகக் கையாளுகிறார்.

கனத்தமழை பெய்தது. குளத்திலிருந்த தாமரை யெல்லாம் அமுங்கி அழிந்து விட்டன. ஆனால் குளத் தைச் சுற்றிலும் தாழை, மற்றுப் பலவகைச் செடிகள் அடர்ந்து வளர்ந்திருந்தன. இந்தக் காக்ஷியை கவி வர்ணிக்கிறார்:—

विरमत्कमलोत्पलं सरो
व्यरुचत्पुष्पितकैतकैस्तटैः ।
गजवाजिसमाकुलं बहि-
र्भवनं राज्ञ इवान्ततोऽधनम् ।।

—சிவலீலார்ணவம் ஸ. 15-சு. 20

"தாமரையும் அல்லியும் குளத்திலிருந்து மறைந்து விட்டன. நான்கு கரைகளிலும் நறுமணம் கமழும் தாழை பூத்துச் செழித்திருந்தது. வெளியே

யானை, குதிரைகள் சூழ்ந்திருக்க, உள்ளே பணமே யில்லாத அரசன் மாளிகைபோலிருந்தது குளத்தின் தோற்றம்''.

தடாதகையின் ஸேனைகளுக்கும், மஹேசுவர னுடைய பிரமத கணங்களுக்கும் கடும் போர் நடக் கின்றது. பிரமதகணங்கள் படுதோல்வியடை கின்றன.

क्षुद्रदीपमिव चण्डमारुतः ।
शुष्कगुल्ममिव दावपावकः ।
ध्वान्तबृन्दमिव भास्करोदय-
स्तद्बलं नरबलं व्यनीनशत् ॥

சிவலீலார்ணவம் ஸ. 10-சு. 81

''சிறு விளக்கை பெரும் காற்றுப்போலும், உலர்ந்த புதரை காட்டுத் தீபோலும், இருள் சமூகத்தை சூரிய உதயம் போலும் பிரமதகணங்களை அம்பாளின் சேனைகள் நாசமடித்தன''. இதை மாலோபமா (मालोपमा) என்று அலங்கார நூல்கள் குறிப்பிடுகின்றன.

கலியாணத்திற்காக அலங்காரம் செய்து வரு கிறார் சிவபிரான்.

पृथग्विधाभिर्मणिहारयष्टिभिः
परिष्कृतं तद्वपुरैन्दुशेखरम् ।
अलक्ष्यताखण्डलचापमण्डितः
पयोधरः सान्ध्यरुचेव पाटलः ॥

—சிவலீலார்ணவம் ஸ. 11-சு. 26

''விதவிதமான ரத்னமாலைகளால் அலங்கரிக் கப்பட்ட சந்திரசேகரனின் திருமேனி, ஸந்தியா காலத்திய சிவப்புடன் வான வில்லால் அழகு பெற்ற மேகம் போல் தோற்றமளித்தது.''

தமயந்தியையே நினைந்துருகும் நளன் தன் நிலையை,

अप्राप्य बहिरुपायानन्तस्संभ्रान्तपिण्डितं चेतः ।
पय इव निबिडोत्पीडं प्रार्थयते कियदपि द्वारम् ॥

—நள சரித்ரம் 1-22

''வெளியில் வழியொன்றும் காணுது உள்ளுக் குள்ளே சுற்றிச் சுற்றி வேதனை நிரம்பிய என் மனம் அதைப்போக்க தண்ணீரின் மிகுதியினுல் பீடிக்கப் பட்ட ஒரு குளம், அதை வெளியேற்ற ஒரு சிறு துவாரத்தை நாடுவதுபோல் ஏதாவது உபாயத்தை விரும்புகின்றது'' என்று குறிக்கின்ருன்.

தடாதகையின் மணி பாதுகையை கவி வர்ணிக் குங்கால்

अलक्ष्यतास्या मणिपादुकाञ्चले
समन्ततो मौक्तिकपङ्क्तिरुज्ज्वला ।
अदूरलग्ना चरणारविन्दयो-
रनुश्रवाणामिव वर्णपद्धतिः ॥

—சிவலீலார்ணவம் ஸ. 11-சு. 61

''இவளுடைய மணி பாதுகைகளின் ஓரங்களில் பதிக்கப்பட்டதும் தாமரை போன்ற பாதங்களில்

நெருங்கி தொட்டுக்கொண்டிருக்கும் நல் முத்து வரிசையானது வேதங்களின் ஆரம்பத்தில் இயங்கும் எழுத்து வரிசைபோல் தோற்றமளித்தது''.

இதில் அம்பாளின் பாதத்தின் அடியிலுள்ள முத்துக்களை எழுத்துக்களுக்கு ஒப்பிடுவதால், அம்பாள் வேத ஸ்வரூபம் என்னும் உயர்ந்த தத்துவத்தை கவி இந்த உவமையின் மூலம் நமக்கு விளக்குகிருர்.

அசுவமேத யாகம் வஸந்த காலத்தில்தான் நடத்தப்படும். அதேபோல் மலயத்துவஜன் யாகத்திற்கு ஏற்பாடு செய்கிருன். இந்த சமயத்தில் அத்தேசத்திலுள்ள வாலிபர்களும் ஒரு யக்ஞம் நடத்துகிருர்கள் என்கிருர் கவி. ஒரு அருமையான ரூபகத்தின் மூலம் அதை நமக்கு அவர் விளக்குகிருர்:—

अध्वर्युं मलयसमीरमन्यपुष्टं
होतारं वनभुवि सामगं द्विरेफम् ।
ब्रह्माणं मधुमपि सादरं वृणाना
अजह्मर्मदनमहाध्वरं युवानः ॥

—சிவலீலார்ணவம் ஸ. 6-சு. 16

''மலயமாருதத்தை அத்வர்யுவாகவும் குயிலை ஹோதாவாகவும் வண்டை உத்காதாவாகவும் வஸந்த காலத்தை பிரம்மாவாகவும் ஆதரவுடன் வரித்து வாலிபர்கள் வனபூமியில் காம மஹா யாகத்தைச் செய்தனர்''.

அர்த்தாந்தர ந்யாஸம் என்னும் அணியையும் வெகு அழகாகக் கையாளுகிருர்.

वलिनो बलिनः स्निह्यन्त्यबलं तु निगृह्णते ।
दावं दीपयते चण्डो दीपं व्याहन्ति मारुतः ॥

—ஸபாரஞ்ஜன சதகம் சு.

''வலியோர் வலியோரையே நேசிக்கின்றனர் எளியோரையோ அழித்து விடுகின்றனர். காட்டுத் தீயை காற்று மேலும் அதிகரிக்கச் செய்கிறது. ஆனல் சிறு விளக்கை அது அணைத்து விடுகிறது''.

न्याय्यादर्थादपि किमधिकं लभ्यमुन्मार्गवृत्त्या
वैधादन्नादपि किमधिकं पर्युदस्तेषु भोज्यम् ।
भार्याभोगादपि भवति कः पण्यकान्तासु भोगः
प्रायो नेतिश्रुतिविषयता विश्वमाधुर्यहेतुः ॥

— சாந்தி விலாஸம் சு. 28

''நல்ல வழியில் அடையும் திரவியத்தைவிட கெட்ட வழியில் திரட்டும் பணம் சிறந்ததா? விஹித மான உணவைவிட சாஸ்திரங்களில் தடுக்கப்பட்ட இடங்களில் சாப்பிடும் உணவு சிறந்ததா? மனைவி யிடம் அடையும் இபத்தைவிட விலைமாதர்களிடம் அடையும் இன்பம் சிறந்ததா? பொதுவாக வேதங் கள் சில விஷயங்களைக் கூடாது (வேண்டாம்) என்று சொல்லியிருப்பதாலேயே அவைகளை உலக மக்கள் ருசியுடன் நாடுகின்றனர்.''

अन्तर्निगीर्णमपि तेन तदाविरासी-
त्कालोन्मिषत्कुवलयच्छवि कण्ठमूले ।
आयस्य गुप्तमपि[1] खल्वनृतं कदापि
सद्यः स्फुटीभवति साधुषु निर्मलेषु ॥

நீலகண்ட விஜய சம்பூ IV-35

''அப்பொழுது அந்த விஷமானது பரமசிவனுல் உள்ளே விழுங்கப்பட்டிருந்தாலும், காலத்தில் மலர்ந்த நீல ஆம்பல் புஷ்பம்போல் அவர் கழுத்தின் அடிபாகத்தில் விளங்கியது. எவ்வளவோ பிரயாசையுடன் மறைக்கப்பட்டாலும் பொய்மையானது களங்கமற்ற நல்லோர்களின் கோஷ்டியில் உடனேயே அம்பலமாய் விடுகிறது''.

நீலகண்டருடைய கவிதையின் ஒரு சிறந்த அம்சம் அவருடைய நகைச்சுவையெனலாம். பொதுவாக நோக்குமிடத்து இந்த அம்சம் ஸம்ஸ்க்ருத இலக்கியத்தில் சற்று குறைவே, அதிலும் காவ்யங்களில் நயமான ஹாஸ்ய ரஸம் இன்னும் அபூர்வம். நீலகண்டரோ ஹாஸ்யத்தை பலவகை ரூபங்களில் வெளிப்படுத்துகிருர். ஆழ்ந்த அனுபவம், மனித ஸ்வபாவத்தை பல்வேறு துறைகளிலும் ஸந்தர்ப்பங்களிலும் கண்ட அறிவு, இயற்கையிலேயே சிறந்த ஹாஸ்ய நவிற்சி இவைகளின் காரணமாக அவர் காவ்யங்கள் எல்லா

1, 'खवकृतं' इति पाठान्तरम् । இந்த பாடத்தில் களின் கார்யம்' எஉறு பொருள் கொள்ள வேண்டும்.

வற்றிற்குமே ருசி கொடுக்கும் முறையில் அவருடைய நகைச்சுவை அமைந்திருக்கின்றது. சில உதாஹரணங்களைக் கீழே கொடுக்கின்ருேம்.

गोकर्णे भद्रकर्णे च जपो दुष्कर्मनाशनः ।
राजकर्णे जपः सद्यः सर्वकर्मविनाशनः ॥

கலிவிடம்பனம் சு. 72

''கோகர்ணத்திலும் பத்ரகர்ணத்திலும் செய்யும் ஜபம் பாபகர்மங்களைப் போக்கும். அரசன் காதில் செய்யும் ஜபம் எல்லாக் கர்மங்களையும் போக்கும். (அரசன் காதில் கோள் சொல்பவன் எல்லா காரியங்களையும் கெடுத்து விடுவான்)''.

यथा जानन्ति बहवो यथा वक्ष्यन्ति दातरि ।
तथा धर्मं चरेत्सर्वं न वृथा किंचिदाचरेत् ॥

கலிவிடம்பனம் சு. 89

நாம் செய்யும் தர்மத்தையெல்லாம் பிறர் அறியும்படியாகவும் கொடையாளியிடம் பலர் சொல்லும்படியாகவும் (வெளிப்படையாக) செய்ய வேண்டும். இப்படியில்லாமல் வீணுக ஒன்றையும் செய்யக் கூடாது.

कोपो मैत्रावरुणेः शापो वा तार्किकस्य मुनेः ।
संस्मर्यते यदि सकृच्छत्नोरपि मास्तु शक्रपदम् ॥

வைராக்ய சதகம் சு. 61

''அகஸ்தியரின் கோபத்தையும் கௌதமரின் சாபத்தையும் நன்ருய் ஞாபகப்படுத்திக் கொண்டால் விரோதிக்குக்கூட இந்திர பதவி வேண்டாம் என்று சொல்வோம்''.

यन्मूले निखिलागमानुपदिशत्तत्त्वं परं शांकरं
यत्पर्णे जगतां निधिः स तु वटो नाम्नापि न स्वीकृतः ।
यच्छाखानिलयः पिशाचनिचयो यन्मूलगाः पन्नगा-
स्तस्याश्वत्थतरोः पुनः कति नमस्काराः कति प्रार्थनाः ।।

அந்யாபதேச சதகம் சு. 29

''எந்த மரத்தினடியில் ஸகல வேதங்களின் உண்மையையும் பரதத்வமாகிய சங்கரர் (தக்ஷிணுமூர்த்தி) உபதேசித்தாரோ, எதன் இலையில் பகவான் விஷ்ணு பிரளய காலத்தில் சயனித்திருந்தாரோ, அந்த ஆல மரத்தை பெயரளவில்கூட மதிப்பாரில்லை. ஆனல் எதன் கிளைகள் பிசாசின் இருப்பிடமோ, எதன் அடிப்பொந்துகள் பாம்புகளின் வாசஸ்தலமோ, அந்த அரச மரத்திற்குத்தான் எத்தனை நமஸ்காரங்கள், எத்தனை பிரார்த்தனைகள்'

கங்கா நதியின் கதியை நோக்கிச்சொல்லுகிருர்

जातैव नीता विबुधैरियं द्यां
शप्ता निरुद्धापि च वेधसास्याम् ।

ग्रस्ता शिवेनाप्यथ जह्नुना च
कस्मिन्क्षणेऽजायत न प्रतीमः ।।

கங்காவதரணம் சு. 6-சு. 40

''பிறந்தவுடனேயே தேவர்களால் ஸ்வர்க்க லோகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டாள்; பிரம்மா வினல் சபிக்கப்பட்டுச் சிறையிலிடப்பட்டாள்; சிவ பிரானுல் முடியில் அடக்கம் செய்யப்பட்டாள். இப் பொழுது ஜஹ்னுவினல் பானம் செய்யப்பட்டாள் எந்த வேளையில்தான் இவள் பிறந்தாளோ! நாம் அறியோம்''.

கர்மானுஷ்டானம் செய்து ஸ்வர்க்கத்தை அடைந்தோரை ஏளனம் கலந்த வருத்தத்துடன் வர்ணிக்கிருர்:—

अस्ति स्वादयितुं सुधासिन वसितुं वासो नभश्चारिणां
धर्तुं सन्ति च भूषणानि शतशो न त्वस्ति धीर्जीवितुम् ।
येनान्यानुपजीव्यसर्वविभवे कर्मैकलभ्ये पदे-
ऽप्यायस्यन्ति वृथैव सेवक इति स्वामीति दुर्मेधसः ।।

நீலகண்டவிஜயசம்பூ I-12

''ஸ்வர்க்கவாஸிகளுக்கு அருந்துவதற்கு அமிருதம் இருக்கின்றது; உடுத்திக் கொள்ளுவ தற்கு சிறந்த ஆடைகள் இருக்கின்றன; அணிந்து கொள்ளப் பலவித ஆபரணங்கள் இருக்கின்றன. ஆனல் சௌகரியமாய் வாழ்வதற்கு வேண்டிய புத்தி

மட்டும் இல்லை. இந்தக் காரணத்தினால் பிறருக்குக் கிட்டாத இந்த ஸகல ஸம்பத்தையும் தான் செய்த பூர்வஸுகிருதத்தால் பெற்றும் வீணே எஜமானன் என்றும் ஸேவகன் என்றும் சொல்லிக் கொண்டு இந்த மதி கெட்டவர்கள் கஷ்டப்படுகின்றனர். (ஸ்வர்க்கமடைந்த மனிதர்களுக்கு அங்குகூட பிராரப்தம் விலக்கமுடியாததாயிருக்கின்றது என்பதை சூசிப்பிக்கிறார்)

இந்திர பதவியைப் பெற்ற நஹுஷன் தேவ லோகத்தில் எவ்வாறு நடந்து கொண்டான்? நீல கண்டர் சொல்லுகிறார்:—

अयथावदनुष्ठिताश्वमेधः
 कियता चैव दिवं गतः शुभेन ।
प्रभुतामपि वर्तयन्सुराणां
 प्रकृतिं स्वां न जहौ तमः प्रधानाम् ।।

—சிவலீலார்ணவம் ஸ.3-சு. 61

''முறைப்படி பூர்ணமாக அசுவமேத யாகங்களை அனுஷ்டிக்காது போனாலும் ஏதோ புண்யகர்ம பலத்தால் ஸ்வர்க்கலோகமடைந்து அங்கே தேவ ராஜ பதவியைப் பெற்றும் (நஹுஷன்) தன் தமோ குணம் மேலிட்ட ஸ்வபாவத்தை விடவில்லை''.

சிவலீலார்ணவத்தில் ஒன்பதாவது ஸர்க்கத்தில் கங்கைக் கரையின் சோபையை வர்ணிக்கும் ஸந்தர்ப்பத்தில்,

रत्नानि तत्र वणिजो भिषजोऽग्रहीषु-
र्दिव्यौषधीर्गजवरानपि राजकीयाः ।
अस्मादृशाः क्षितिसुराः पुनराहरन्त
भागीरथीतटरुहाणि कुशांकुराणि ॥

—சிவலீலார்ணவம் ஸ. 9 சு. 57

என்ற ஸ்வபாவோக்தியின் த்வனி விசேஷம் கவனிக்கத்தக்கது. ''அங்குள்ள ரத்தினங்களை திரட்டிச் செல்கின்றனர் வியாபாரிகள்; அபூர்வமான மூலிகைகளை வைத்தியர்கள் எடுத்துக் கொள்ளுகிறார்கள். சிறந்த யானைகளை அரசாங்க வேலைக்காரர்கள் பிடித்துச் செல்கின்றனர். நம் போலுள்ள அந்தணர்களோ புனித கங்கையின் கரையில் முளைத்து நிற்கும் தர்ப்பைப் புல்லைப் பறித்துச் செல்லுகின்றனர்''. மேலெழுந்தவாறு பார்த்தால் ஹாஸ்யமாய்த் தோன்றுகிறது. ஆனால் நன்றாய் செய்யுளின் பொருளை கவனித்தால் என்ன என்னவெல்லாம் பாவங்கள் நமக்கு விளங்குகின்றன. கவியின் உயர் குலம், அவருடைய சீரிய ஒழுக்கம், பொதுவாக அந்தணனின் உயர்வும் செல்வமும் அவன் தன் கர்மானுஷ்டானத்தை வழுவாது செய்வதில் தான் என்பது போன்ற பொருட்கள் புகட்டப்படுகின்றன.

நீலகண்டருடைய நூல்களிலிருந்து நாம் அறிந்து கொள்வது

நீலகண்டருடைய நூல்களிலிருந்து அவரைப் பற்றியும் அவர் இருந்த சமூகத்தைப் பற்றியும் நாம் ஏதாவது தெரிந்து கொள்ள முடிகின்றதா என்று பார்ப்போம். அவருடைய வாழ்க்கையை ஒட்டிய குறிப்புக்களை நாம் ஏற்கெனவே வரைந்திருக்கிருேம். இப்பொழுது அவருடைய மனோபாவத்தையும் அவருடைய விருப்பு வெறுப்புக்களையும் காட்டும் சில விஷயங்களை ஆராய்வோம்.

அவர் மிகவும் விரும்பிய விஷயம் ஒன்று. அது தான் காசி யாத்திரை. நள சரித்திரத்தின் ஆரம்பத்தில் ''கலியின் கொடுமையை வெல்லுவதற்கு இரு உபாயங்களே உளன. ஒன்று நளன் கதையை கேட்பது, மற்றொன்று புனித க்ஷேத்ரமான காசியை அடைவது'' என்கிருர். அடுத்தபடியாக கங்காவதரணத்தில் ''எவ்வாருவது கங்கை செல்வதென்று தீர்மானித்து விட்டேன். அதாவது கங்கையின் கதையைச் சொல்லியாவது கங்கையை அடைந்த அனுபவத்தைப் பெறுகிறேன்'' என்கிருர். வெகு காலம் வரை அவருடைய மனோரதம் நிறைவேறவில்லை என்றே தோன்றுகிறது. வைராக்ய சதகத்தில்,

न गृहीतं श्रुतिहृदयं
न च निगृहीतं परिप्लवं हृदयम् ।

इच्छामि च धाम परं
गच्छामि च विश्वनाथपुरम् ।।

வைராக்யசதகம் சு. 101

என்றும், ஆனந்த ஸாகரஸ்தவத்தில்

वारणसीमपि न याचितुमुत्सुकोऽस्मि ।।

ஆனந்தஸாகரஸ்தவம் சு. 27

என்றும் கூறப்படுவதால் மேற்சொன்னபடி எண்ண இடமிருக்கிறது. முடிவில் அவர் காசியை அடைந்து கங்கையில் நீராடி தன் வாழ்நாள் விருப்பத்தைப் பெற்ருர் என்பது அவருடைய சிவலீலார்ணவத்தி லிருந்து தெளிவாகிறது. சிவலீலார்ணவத்தில் முதல் சுலோகம்

पूतं स्वतः पूततरं ततो य-
द्गाङ्गं पयः शंकरमौलिसङ्गात् ।
तत्पातु मातुः प्रणयापराध-
पादाहतैः पूततमं ततो नः ।।

—சிவலீலார்ணவம் ஸ. 1-சு. 1

என்பது. தவிர ஒன்பதாவது ஸர்க்கத்தில் தடாதகை யின் ஜைத்ர யாத்திரையை வர்ணிக்குமிடத்தில் கங் கையின் அழகையும் கங்கைக்கரைப் பிரதேசத்தின் சோபையையும் பரவசமாய் அனுபவிக்கிருர். 'இதி

---

(1) अस्मादृशाः क्षितिसुराः पुनराहरन्त
भागीरथीतटरुहाणि कुशांकुराणि ।

—சிவலீலார்ணவம் ஸ. 9-சு. 57

லிருந்து, அவர் திருமலை நாயக்கனின் மந்திரி பதவி யிலிருந்து விலகிய பிறகே கங்கா யாத்திரை செய் தாரென்றும், அதை முடித்த பின் அவரே 'தக்ஷிண கங்கை என்று கூறப்படும் தாமிரபர்ணீ நதிக்கரை யில் தம் அந்திம நாட்களை கழிக்கத் தீர்மானித்தார் என்றும் ஊஹம் செய்ய முடிகிறது.

தம்முடைய திறமையினால் மந்திரி பதவியை யடைந்த போதிலும், அவர் அதனால் அதிக ஸந் தோஷம் அடைந்தாரென்று சொல்லுவதற்கில்லை. நள சரித்திர நாடகம் அவர் மதுரை வருமுன்பே எழுதப்பட்டது என்பது உண்மையானால், அவர் மந்திரியாவதற்கு முன்பே, அமைச்சர் பதவியின் தன்மையை நன்கு பரிசீலனை செய்து அறிந்திருந் தார் என்று தெரிகிறது. கீழ்வரும் வாசகங்கள் எல் லாம் நள சரித்திரத்தில் உள்ளவை.

राज्यग्रहगृहीतानां राज्ञामन्यादृशी मतिः ।
असिद्धिर्मन्त्रिमन्त्रेण सिद्धिस्स्वस्यैव वैभवात् ॥

—நளசரித்ரம் II-10

---

(1) यत्सङ्गमादेव भवन्ति मुक्ताः
सा जाह्नवी सर्वजनीनमेतत् ।
ततो विदुर्दक्षिणजाह्नवीति
तादृग्विधां यत्र हि ताम्रपर्णीम् ॥

சிவலீலார்ணவம் ஸ. 2 சு.—18

'प्रकृतिरियं जीवलोकस्य यत्किल प्रासादप्रतिमा इव सकलभारवहनमभिनयन्तः परिक्लिश्यन्ते राजपिण्डोपजीविनो मन्त्रिजनाः ।'

'सचिवसम्पत्तिर्हि भूभुजां सर्वकामदुघा कल्पलता ।'

निरालम्बाः श्रियो राज्ञां लोका इव नभस्सदाम् ।
ध्रियन्ते मन्त्रिणो मन्त्रैस्स्कन्धैरिव नभस्वतः ॥

—நளசரித்ரம் II-12

'मन्त्रिणः किल नाम मन्त्रयितुं प्रभवः शास्त्रदृष्टेन पथा, न पुनः संपादयितुमपि कार्याणि ।'

--நளசரித்ரம் II

''நல்ல மந்திரி அரசர்களுடைய எல்லா விருப்பங்களையும் பூர்த்தி செய்து வைக்கும் கற்பகக் கொடிக்கு ஒப்பாவான். ஆனுல் ஒரு வித்தியாஸமுண்டு. காரியம் நிறைவேறுவதற்குக் கையாளவேண்டிய உபாயத்தை தன் அறிவினுலும் ஆற்றலினுலும் எடுத்து உரைக்க மட்டும் மந்திரி வல்லவன். அந்தக் காரியத்தையே நிறைவேற்றிக் கொடுக்க அவனுல் முடியாது. இதை அறியாத, அரசனை அண்டிப்பிழைக்கும் சில மந்திரிகள் ஏதோ பொம்மை கோபுரத்தைத் தாங்கும் கணக்கில் அரசாங்கத்தின் முழுப்பொறுப்பையும் தாமே வகிப்பதாக நினைந்து வீணே தங்களைக் கஷ்டப்படுத்திக் கொள்ளுகின்றனர். இது பொதுவாக மனிதர்களின் இயல்பு.

ராஜ்ய லக்ஷ்மிக்குத் தானே தன்னை காப்பாற்றி

கொள்ளும் வழி தெரியாது என்பது உண்மையே. நல்ல மந்திரிகளின் அறிவே அதற்கு ஆதாரம். ஆனால் இந்த ராஜ்ய லக்ஷ்மியை வகிக்கும் அரசர் களின் போக்கே அலாதியானது. ஒரு காரியத்தில் வெற்றி கண்டால் அதற்கு தன்னுடைய பிரபாவமே காரணம் என்கின்றனர். தோல்வியடைந்தாலோ மந்திரியின் ஆலோசனையைக் குறை கூறுகின்றனர்.

பின்னால் அவர் மந்திரியாய் இருந்த காலத்தில் மேற்கூறிய உண்மைகளை நினைந்தே அவர் தம் அலுவல்களைச் செய்திருப்பார் என்பதில் சந்தேக மில்லை.

नहि किञ्चिदवमं नाम कर्मास्ति राजोपजीविनाम्' ।

''அரசனை அண்டிப் பிழைப்போர்களுக்கு செய்யத் தகாத காரியமே கிடையாது'' என்று அவர் நீலகண்ட விஜயசம்பூவில் கூறுமிடத்து தம் நிலையை நினைந்தே அவர் வருந்துகிறார் என்று தோன்றுகிறது. இந்த மனோநிலை இன்னும் தெளி வாக,

आ कौमाराद्गुरुचरणशुश्रूषया ब्रह्मविद्या-
स्वास्थायास्थामहह महतीमार्जितं कौशलं यत् ।
निद्राहेतोर्निशि निशि कथाः शृण्वतां पार्थिवानां
कालक्षेपौपयिकमिदमप्याः! कथं पर्यणंसीत् ॥

சாந்தி விலாஸம் சு. 8

என்னும் சாந்தி விலாஸ சுலோகத்தில் வெளியா கிறது. முடிவில் தம்முடைய படிப்பை இம்மாதிரி

ராஜ ஸேவையில் செலவிட்டதே தவறு என்று கருதி தம் பதவியைத் துறந்தார்.

दत्ते त्वया वाङ्मयरत्नकोशे
विक्रीय भुक्तं किल भुक्तमेव ।
शिष्टं त्वदङ्घ्रयोः पुनरर्पयेयं
दयस्व मीनाक्षि पुरेव मह्यम् ।।

—சிவலீலார்ணவம் ஸ. 1-சு. 80

''உன்னுல் அளிக்கப்பட்ட வாக்குவன்மை என்னும் ரத்ன பொக்கிஷத்தில் சிலவற்றை நான் விலைக்கு விற்று சாப்பிட்டு விட்டேன். போனது போகட்டும். எஞ்சியதையாவது உன் பாத கமலத்தில் அர்ப்பணம் செய்கின்றேன். தாயே! மீனுக்ஷி! முன்போல் எனக்கு அருள்வாயாக'' என்பதே அவருடைய கடைசி நிலை.

கலிவிடம்பனம் என்ற நூலினின்றும் மற்றும் அவருடைய இதர நூல்களினின்றும் நீலகண்டரின் காலத்தில் மக்களின் அன்ருட வாழ்க்கையைப்பற்றி நாம் தெரிந்து கொள்ள முடிகிறது. இன்று நாம் காணும் சமூகம், முன்னூறு வருஷங்களுக்கு முன் நீலகண்டர் கண்ட சமூகத்தினின்றும் அதிகமாக மாறியிருக்கவில்லை. அன்றும்—சோதிடரை நாடி மக்கள் சென்றனர். பெண்களின் கலியாணம் முதலியவைகளுக்கு ஏராளமாய் பணம் செலவழித்தனர் அதிக வட்டிக்கு பணத்தை பிராமிஸரி நோட்டு எழுதி வாங்கிக் கொண்டு கடன் கொடுத்தனர்.

இன்னும் அநேக விஷயங்களில் இன்று போல்தான். ஆனால் ஜனங்களின் ஒழுக்கம் உயர்வாக இருந்தது. கடன் வாங்கினவன் கடன் கொடுத்தவனைக் கண்டு பயப்பட்டான். படித்தவனுக்குத்தான் நல்ல கௌரவம் இருந்தது. ஈசுவர பக்தியும் ஆஸ்திக்ய புத்தியும் பெருமளவில் ஜனங்களிடமிருந்தது. அவை மதிக்கவும் பட்டன. அவர்கள் வாழ்க்கையில் ஒரு நிம்மதியும் உள்ளத்தில் ஒரு நிறைவும், இருந்தன. இயற்கையுடன் ஒன்றி எளிய முறையில் வாழ்ந்தனர்

அன்றுடப் பேச்சில் கையாளப்படும் அநேக தமிழ் வசனங்களை தம்முடைய நூல்களில் ஸ்ரீ நீல கண்டர் புகுந்திருக்கிறார். கீழே சில உதாஹரணங்களைக் காணலாம்.

पश्य कालि मलयध्वजकन्यां
कुब्जिके जनकवन्मुखमस्याः ।
ज्यायसी हि दुहितुर्मम मासैः
पञ्चषैरियमहो शिशुरेव ॥

—சிவலீலார்ணவம் ஸ. 8-சு. 44

सा दुष्टा जरती किमौषधमदात्तत्वेति न ज्ञायते ।

—சிவலீலார்ணவம் ஸ. 21-சு. 95

कस्मिन्क्षणेऽजायत न प्रतीमः ।

—கங்காவதரணம் ஸ. 6-சு. 40

यत्र भार्यागिरो वेदाः

கலிவிடம்பனம் சு. 100

दुःस्वातन्त्र्यमिदं विधेः कथय तत्कस्याग्रतो रुद्यताम् ।

அன்யாபதேசசதகம் சு. 8

ஸ்ரீ நீலகண்டரின் நூல்களிலிருந்து அவருக்கு சைவ ஸித்தாந்தத்திலிருந்த தீவிரமான ஈடுபாடு தெளிவாய்த் தெரிகின்றது.

'स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते'

என்று சிவோத்கர்ஷ மஞ்சரியில் பிரகடனம் செய்கிருர் கங்காவதரணத்தில்'गर्भदासा महेशस्य' என்று தம்மையும் தம் ஸஹோதரர்களேயும் பெயரிட்டுக் கொள்கிருர்.

நீலகண்ட விஜய சம்பூவில்

देवानामपि दैवतं गुरुमपि प्राचां गुरूणामिह
श्रीमन्तं मदनान्तकं कथमपि स्तोतुं कृतो निश्चयः ।

—நீலகண்ட விஜயசம்பூ 1-7

என்றும்,

निष्क्रान्ते गरले द्रुते सुरगणे निश्चेष्टिते विष्टपे
मा भैष्टेति गिराविरास धुरि यो देवस्तमेव स्तुमः।

—நீலகண்ட விஜயசம்பூ 1-2

என்றும் சிவனின் மஹிமையைப் பாடுகிருர். கலி விடம்பனத்தில்

'कालकालं प्रपन्नानां कालः किं नः करिष्यति'

கலிவிடம்பனம் சு. 101

என்கிறார்.

'आ गर्भादा कुलपरिवृढादा चतुर्वक्त्रतोऽपि
त्वत्पादाब्जप्रपदनपरान्वेत्सि नश्चन्द्रमौले'

என்பது சாந்தி விலாஸத்தில். இதேகருத்தை வைராக்ய சதகத்திலும் 'शिवा वयमा चतुर्वदनात्' என்றும் வாசகத்தில் உறுதிப் படுத்துகிறார். தம் கடைசி நூலாகிய சிவலீலார்ணவத்தில் தம்முடைய சிவ பக்தியின் தன்மையை நன்கு வெளியிடுகிறார் :—

शिवं यजाग्नौ शिवमर्च भास्करे
शिवं स्मरान्तः शिवमेव कीर्तय ।
शिवं द्विजेषु प्रतिपूजयानिशं
शिवैकनिष्टो भव तात सर्वथा ।।
शिवात्परं नास्ति ।

சிவலீலார்ணவம் ஸ. 5 சு. 28, 29

''அக்னியில் சிவனைக் கண்டு ஹோமம் செய், சூரியனிடம் சிவ ஸ்வரூபத்தைக் கண்டு பூஜை செய்; சிவனை மனதில் தியானம் செய், சிவன் புகழையே பாடு. பிராம்மணர்களிடமும் சிவனைக் கண்டு அனவரதமும் பூஜை செய். சிவன் நினைவாகவே எப்பொழுதுமிருப்பாயாக. சிவனிலும் மேலான தத்துவம் ஒன்றுமில்லை'.

இவ்வளவு அத்யந்த பக்தி சிவனிடம் கொண்டிருந்த போதிலும், பிற தெய்வ நிந்தனையை நீலகண்டரிடம் காணமுடியாது.

भवानिति भवानीति पश्य भेदः कियानयम् ।
विग्रहं प्राप्तयोरेकं विश्लेषः क इवावयोः ।।

—நீலகண்ட விஜயசம்பூ 4-43

यदेतद्वामाङ्गं घनजघनकेशस्तनभरं
कदाचित्तच्छम्भोर्भवति कमलाकौस्तुभधरम् ।
जगन्मातर्येवं यदपचरितं तन्मघवता
जगन्माता देवः प्रभवति स एव क्षपयितुम् ।।

—நீலகண்ட விஜயசம்பூ 2-20

ओमित्युमेति युवयोरभिधानमेकं
सृष्टयादिसृष्टयवधितागुणमात्रभिन्नम् ।
एकं च तावदभिधेयमपीह रूपं
वेणी जटेति कचसंहृतिभेदभिन्नम् ।।

—நீலகண்ட விஜயசம்பூ 4-24

மேலுள்ள சுலோகங்களில் சைவம், வைஷ்ணவம் சாக்தம் என்ற மூன்று மதங்களையும் ஸமரஸப்படுத்தி அவைகளின் உண்மை தத்துவம் அபேதத்தில்தான் என்பதை அழகாக நமக்கு உணர்த்துகிருர். தம்மைப் பொருத்தமட்டில் தம் உண்மை முடிவு எப்படியிருந்தது என்பதை,

वेधाः कथं हरिः कथमिति तु प्रश्ने वयं मूकाः ।

शिवमेकं जानीमस्तस्मादन्यं न जानीमः ॥

—வைராக்யசதகம் சு. 93

என்னும் வைராக்ய சதக சுலோகத்தில் அழுத்தம் திருத்தமாய்க் கூறுகிருர்.

''பிரம்மா எப்படி? விஷ்ணு எப்படி? இது போன்ற கேள்விகள் எழுந்தால் நாங்கள் ஊமைகளுக்கு ஒப்பாகிருேம். ஏனென்ருல், சிவன் ஒருவனையே நாங்கள் அறிவோம். வேருெரு தெய்வத்தை நாங்கள் அறியோம்''. இவ்வளவு சலனமற்ற ஒரு நிலைப்பட்ட பக்தியை குறைகூற நாம் யார்? அல்லது புகழத்தான் நாம் யார்?

முற்றும்.

APPENDIX I

"In the year S. S. 1544, in Dundubhi year, the 17th of Masi month, Muthu Tirumalai Naicker came to Madura in order to be appointed (or installed) to receive the sceptre and other ensigns of royal authority."

"Having thus arranged the plan, the whole was thus begun to be carried into execution at once on the 10th of Vyasi month, of Akshaya year during the increase of the moon. From that time forward as the master came duly to inspect the work it was carried on with great care. As they were first in excavating the Teppakulam they dug up from the middle a Ganapati (or image of Ganesa) and caused the same to condescend to dwell in a temple built for the purpose. As they were placing the sculptured pillar of the Vasanta-mandapam and were about to fix the one which bore the representation of Yekapada-Murti they were opposed by the Vaishnavas. Hence a dispute arose between them and the Saivas which lasted during six months and was carried on in the presence of the Sovereign. Two arbitrators were appointed, Appa Dikshitar on the part of the Saivas, and Ayya

Dikshitar on the part of the Vaishnavas; these then consulted Sanskrit authorities and made the Sastras agree; after which the Yekapada Murti was fixed in its place."

—Oriental Historical Manuscripts translated by W. Taylor, Vol. II. p. 149.

[The opinion expressed by Sri Y. Mahalinga Sastri that due to some mistake there has been interchange of name of Ayya and Appa in the above document and that if this mistake is rectified it would be clear that Ayya Dikshitar (an alias for Nilakantha) represented the Saivas and some Appa Dikshitar the Vaishnavites must be the correct one. It is absurd to suggest that Sri Nilakantha and Appayya took opposite sides in the above controversy. Nor is there any warrant to disbelieve the traditional view that Sri Appayya Dikshita passed away when Sri Nilakantha was only 12 years old.]

APPENDIX II

இரு நூல்களில் ஒரேமாதிரியும் சிறிது மாறுதலுடனும் காணப்படும் சுலோகங்கள்

अद्भुतं किमपि द्वन्द्वमस्तु तन्मम शर्मणे ।
स्वस्तिकस्तनुते यस्य सुदृगाश्लेषनिर्वृतिम् ॥

— கங்காவதரணம் ஸ. 1 சு. 1
நளசரித்திரம் I-1

चन्द्रशेखरसव्याङ्गचरणोन्मार्जनाम्भसाम्।
विवर्ता जगदुत्सङ्गे विहरन्ति मदुक्तयः ॥

கங்காவதரணம் I-58
நளசரித்திரம் 1-9

नारायणाध्वरीन्द्राय नमोऽस्तु ज्ञानसिन्धवे ।
शारदा यत्कटाक्षाणां साप्यवेतनकिंकरा ॥

கங்காவதரணம் 1-5
நளசரித்திரம் 1-10

परिज्ञातुं तत्त्वं निखिलमपि विद्यासु विदुषां
परिज्ञातं भूयः परिषदि सतां श्लाघितुमपि ।
फलैर्योक्तुं तत्तत्क्रमसमुचितैः श्लाघितमपि
प्रगल्भः कोऽन्यः स्यात्त्रिभुवनवदान्यो यदि न सः।

கங்காவதரணம் 1 85

(கடைசிப் பாதத்தில் न सः என்பதற்குப் பதிலாக व लः என்று நளசரித்திரம் I-31 சுலோகத்தில் மாறுதல் காணப்படுகிறது)

एकैकां क्रमभाविनीमपि कलामिन्दोः समास्वाद्य यैः
कण्ठोद्ग्रीवितजीवितैर्निरवधिः कालः कथंचिज्जितः ।
तैरेवोदरपूरमध्वरहविः **स्फार तदावर्जितं**
भुञ्जानैस्त्रिदशै **रधारि जठरप्रायं तदानीं वपुः** ।।

கங்காவதரணம் I-84

(பெரிய எழுத்தில் காட்டியிருக்கும் பதங்களில்மட்டும் நளசரித்திரம் IV-8ல் மாறுதல்கள் காணப்படு கின்றன)

साम्राज्यं यदि **सप्तमार्णवतटीविश्राम्यदाज्ञाक्षरं**
सौन्दर्यं यदि मुद्रिताः स्मरगिरः सा चेन्मतिः को गुरुः ।
शौर्यं चेत्पुनरन्यदेव तदिति **स्तोत्रं विचित्रं सतां**
शृण्वन्नेव भगीरथक्षितिपतिर्निन्ये सहस्रं समाः

கங்காவதரணம் I-86

(பெரிய எழுத்தில் காட்டியிருக்கும் பதங்களில்மட்டும் நளசரித்திரம் II-13ம் சுலோகத்தில் மாறுதல்கள் காணப்படுகின்றன)

त्रय्यन्तसिद्धाञ्जननिर्मलाक्षैस्तपोधनैरप्यनवेक्षितं यत् ।
आलक्ष्यते धाम तदेव यस्यामात्यन्तिकेनाक्षिनिमीलनेन ।।

கங்காவதரணம் VI-52
நளசரித்திரம் II-24

APPENDIX III

ஸ்ரீ தீக்ஷிதரின் ஆனந்த ஸாகரஸ்தவம் ஸம் பந்தமாக கீழ்க்கண்ட கதை வழங்கி வருகிறது:—

மதுரைப் புது மண்டபத்தில் நடு வரிசைத் தூண்களில் நாயக்க மன்னர்களின் சிலைகள் செதுக் கப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஒரு தூணில் திருமலை நாயக்கர், அவருடைய ஏழு பத்தினிகள் இவர்களின் சிலைகளைக் காணலாம். திருமலை நாயக்கரின் பட்ட மஹிஷியின் சிலையைச் சில்பி செதுக்கும்பொழுது அவ்வுருவத்தின் இடது துடையி லிருந்து ஒரு சில்லுப்பெயர்ந்து விட்டதால் சிலையில் பின்னம் ஏற்பட்டு விட்டது. சில்பி சுமந்திர மூர்த்திக்கு அது ஒரு புது அனுபவம். மிகவும் வருத்தமடைந்தவனாய் மறுபடியும் சிலையைச் செதுக் குவதற்கு யத்தனிக்கையில், அப்பொழுது அங்கு வந்த மந்திரி ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் சில்பியின் கவலை தோய்ந்த முகத்தைக் கண்டு அவன் வருத்தத் திற்குக் காரணம் வினவினார். அவன் நடந்ததைச் சொல்லவும் ஸ்ரீ நீலகண்டர் சற்று யோஜனை செய்து சுமந்திரமூர்த்தியிடம் கீழ்க்கண்டவாறு கூறினார். "அப்பா, வீணாக வருந்தாதே. உன்னுடைய உத்தமக் கலைப் பணியினால் தெய்வமே உன்னிடம் மகிழ்ந்து உனக்குத் தெரியாத உண்மைகள்கூட உன் வேலைகளில் அமையும்படி செய்கின்றது. ஆதலால் நீ இந்தச் சிலையை இருப்பதுபோலவே விட்டு விடு" என்றார். மறுநாள் சிலையில் பின்னத்தைக் கண்ட

அரசன் சில்பியிடம் அதைக் காண்பிக்க, சில்பி நடந்த சம்பவத்தை அரசனிடம் தெரிவித்தான். அரசனுக்கு அடங்காக் கோபம் வந்தது. நீக்ஷிதர் எவ்வாறு மஹாராணியின் துடையிலுள்ள மச்சத்தைப் பற்றித் தெரிந்து கொண்டிருக்க முடியும்? அவரிடம் விபரீதமான சந்தேகம் கொண்டவனாய் அவருடைய கண்களை வாங்கிவிட வேண்டும் என்று மனதில் தீர்மானித்து அவரை உடனே தன்னிடம் அழைத்து வருமாறு தன் காவலாளிகளை அனுப்பினான். காவலாளிகள் தீக்ஷிதரின் வீட்டை அடைந்த சமயம் அவர் பூஜையில் இருந்தார். தம்மை அழைக்க அரண்மனையிலிருந்து ஸேவகர்கள் வந்திருக்கின்றனர் என்று தெரிந்ததும் ஆச்சரியமடைந்தார். ஆனால் சற்று ஆலோசித்ததும் உண்மை புலப்பட்டது. அரசன் தம்மை சந்தேகித்ததை எண்ணி மிகவும் வருத்தமடைந்தவராய் ஸ்ரீ அம்பாளுக்கு கர்ப்பூரஹாரத்தி செய்து விட்டு அந்த எரியும் கர்ப்பூரத்தைத் தம் கண்களில் கட்டிக் கொண்டு வெளியில் காத்திருந்த காவலாளிகளிடம் அரசன் தமக்கு அளிக்கவிருந்த தண்டனையைத் தாமே செய்து கொண்டுவிட்டதாக அரசனிடம் தெரிவிக்கும்படி கூறினார். இவ்விபரத்தை அரசன் கேட்டதும் மனம் பதறி ஸ்ரீ தீக்ஷிதர் கிருஹத்திற்கு ஓடோடியும் வந்து நொந்த கண்களுடன் வீற்றிருந்த மஹானின் அடிபணிந்து தன் மடமையினால் அவருடைய உண்மையான பெருமையை தான் அறியாமல் போய்விட்டதாகவும் தன்னை எவ்விதத்திலும் மன்னிக்க வேண்டுமென்றும் கதறினான். அவன் வருத்தத்தைக் கண்ட தீக்ஷிதர் அவனுடைய

மனம் சமாதானம் அடைய வேண்டுமென விரும்பி ஸ்ரீ மீனாக்ஷியை ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித்தார். இந்த ஸ்தோத்திரமே பிரசித்தி பெற்ற ஆனந்தஸாகரஸ்தவம். இதில்

अव्याजसुन्दरमनुत्तरमप्रमेय-
मप्राकृतं परमममङ्गलमंघ्रिपद्मम् ।
संदर्शयेदपि सकृद्भवती दयार्द्रा
द्रष्टास्मि केन तदहं तु विलोचनेत ॥

என்னும் சுலோகத்தைப் பாடியதும் இழந்த பார்வையை அவர் பெற்றார். அரசனும் மனம் தேறினான்.

APPENDIX IV

A Short Bibliography of Sri Nilakantha's Works

1. SIVALILARNAVA-Published by Sri Vani Vilas Press, Srirangam as No. 8 of the Sri Vani Vilas Sanskrit Series from manuscripts supplied by

(i) His Holiness Sri Jagadguru Sri Sacchidananda Sivabhinava Narasimha Bharathi Swamigal of Sri Sringeri.

(ii) Sri T. S. Kuppuswamy Sastri of the Government Training School Tanjore.

2. Laghu Kavyas—(Minor poems) (Kalividambana, Sabharanjana Sataka, Santi-Vilasa, Vairagya Sataka, Ananda Sagara Stava, Sivotkarsha Manjari, Anyapadesa Sataka)—Published by Sri Vani Vilas Press in 1914. A second edition was also issued. The Balamanorama Press, Madras, also published these poems in one volume.

3. NILAKANTHA VIJAYA CHAMPU—with the commentary Vibudhananda of Mahadeva Sastri—published as No. 7 of Sri Balamanorama series by the Sri Balamanorama Press, Madras in 1924 and by the Sanskrit Education Society (Regd) Madras-4 in 1972.

4. NALA CARITRA NATAKA—Published as No. 8 of Sri Balamanorama Series in 1925.

5, Gangavataranam—Published as No. 76 of the Kavyamala series by the Nirnaya Sagar Press, Bombay in 1916.

6. The Sivatatva Rahasyam—Published by Sri Vani Vilas Press in 1915.

7. Raghuvirastavam and the Candirahasyam —Published by Sri Vani Vilas Press.

8. The Sivotkarsha Manjari with the Sanskrit commentary of Sivananda Yogi—Published in Benares.

9. The SANTIVILASAand the ANANDA SAGARASTAVA have been published as Nos. 9 & 12 respectively of the Sri Kamakoti Granthavali by the Kamakoti Kosasthanam with Tamil (and in No. 12 also English) translation by Sri Y. Mahalinga Sastri.

10. The MUKUNDA VILASA in manuscript form in the Manuscript Library, Adyar.

11. The Kaiyata Vyakhyana has not so far been Published

    The SIVALILARNAVA has also been published in the Trivandrum Sanskrit series No 4 1909

12. The Saubhagyachandratara in Journal of Oriental Research Vol XVI.

13. All the minor poems including Gurutatva-malika, Chandi Rahasyam and Ramayana-sarasamgraka Raghuvirastava

    by Pierre Sylvain Filliozat as

    No, 36, institut

    Francais, D' Indological

॥ श्रीः ॥

॥ श्लोकानुक्रमणिका ॥

	पृष्ठम्
अ	
अजनि शनै	109
अतिगम्भीर	4
अद्यैव त्वत्पद	13
अध्वर्यु मलय	142
अनायतप्राण	107
अनालोच्य निजां	49
अन्तर्निगीर्ण	144
अन्या विशन्त्यः	80, 134
अन्योन्यससर्ग	117
अपि वीक्ष्य	128
अपि सागर	60
अप्यन्तिकस्थै	109
अप्रतर्क्यं	37
अप्राप्य बहिः	141
अभ्यग्रावतरि	55
अमोघ : णीयै	8
अम्भोनिधे	125
अयःश्रृङ्खल	123
अयथावदनुष्ठिता	148
अर्धे तनोरद्रि	15
अलक्ष्यतास्या	141
अस्ति स्वादयितुं	147
आ	
आकर्णमुल्लस	79
आ कौमाराद्गुरु	19
आगर्भादा	158
आचूडं कुसुम	127
आचूडमाचरण	77
आज्याहुत्यभि	84
आपरितोषाद्विदुषां	111
आयस्तापि	29

	पृष्ठम्		पृष्ठम
आयान्त्ग्रे	67	कामिनः पथिः	125
आयास्यतो	124	कालं जेतुमुपायौ	25
आविर्भूत	16	कालकालं	157
उ		कालकूटमिव	36
उत्तरीयमहर	126	काव्यानि कर्तुं	103
उद्यन्तु शतं	62	का संसृतिः	75
उन्मुद्रिते सति	124	किं दातुरखिलैः	63
ऊ		किं न निगृह्णन्ति	44
ऊष्माणाववह	51	कुकवित्वं पुनः	119
ओ		कुल्याः कृताः	70
ओमित्युमेति	159	कृते युगे	102
क		कोपो मैत्रावरुणेः	145
कः प्रसूते पुरो	62	क्वार्थाः क्व शब्दाः	118
कतीन्द्राः कति	45	क्ष	
कर्म त्यजेम	74	क्षुद्रदीपमिव	140
कवितावुधयो	105	ग	
कवितामफलद्वीटीं	135	गच्छत्वमरावत्यां	71
कस्माद्विभीमः	111	गर्भे निवेश्य	78
काञ्चित्काञ्चन	6	गुल्मेषु कुञ्जेषु	137
कान्तः सहृदयो	104	गृहिणी भगिनी	60

	पृष्ठम्
गोकर्णे भद्रकर्णे च	145
च	
चक्षुष्यन्धे	66
चिन्तासु संसर्ग	106
ज	
जना जिहासन्ति	128
जयन्ति तनया	11
जातं जात	67
जातैव नीता	146
जिता त्वया	92
त	
तज्जटापटल	37
तन्त्रान्तरेषु	113
तस्यान्वये	7
तेषामहं द्वितीयो	12
त्यज संसारं	71
त्वत्प्रसूतास्त्वया	54
वद्गृहे स्थितवती	36
वय्यर्पितं प्रथम	13
द	
दत्ते त्वया	155

	पृष्ठम
दाराः पुत्रेषु	69
दिगम्बरः	138
दिष्ट्याधिरूढाः	114
दीनां दृष्टि	129
दुःस्वातन्त्र्यमिदं	157
देवानामपि	102
द्वौ हि तेजस्विनौ	35
ध	
धीसचिवं धैर्य	72
न	
न गृहीतं	150
न ज्ञायते मम	76
न श्वोऽयमस्तीति	137
नारायणाध्वरी	9
नासामणिस्तव	78
नासौ वह्निर्न	52
निमिषन्त्यत्र	71
निरवधिपर	86
निरालम्बाः	153
निर्माय रत्नं	27

	पृष्ठम्		पृष्ठम
निश्रेणिकेयं	88	प्रायस्तिरोभूत	112
निषादविद्धा	104	प्रालेयशैल	86
निष्क्रान्ते गरले	157	**ब**	
नीलच्छण्ठस्य	132	बलिनो बलिनः	143
पतिस्त्रिजग	35	**भ**	
त्याय्यादर्थादपि	143	भवानिति भवानीति	159
प		भव्ये देहे पटुषु	68
पदानि भव्यानि	114	भिक्षाप्रदा जनन्यः	72
पश्य कालि	156	भुञ्जीथा न	53
पश्यन् पदाग्र	130	भैषज्यं तु यथाकामं	60
पादबद्धोऽक्षर	105	भ्रामं भ्रामं	56
पायं पायं पवन	50	**म**	
पुत्र इत्येव पितरि	59	मन्दानिलोऽसौ	123
पुरा पतन्ती	38	मानप स्मर	31
पूतं स्वतः पूत	151	मुनिरस्ति	7
पृथग्विधाभि	140	मूर्ध्नि तस्य मुहु	37
प्रकृतिर्ह्यपथे	127	म्लायन्त्यां	52
प्रकृत्या कामुके	29	**य**	
प्रम्लाना धरणि	126	यं विद्म इति	8
प्रामाण्यबुद्धिः	61	यः संरम्भः	41

	पृष्ठम्
यत्र चित्ताः	101
यत्र भार्यागिरो	59
यत्सङ्गमादेव	152
यथा जानन्ति	145
यथा यथा विप	44
यदि त्वलंघ्यं	34
यदेतद्वतमाङ्गं	159
यन्मूले निखिला	146
यानेव शब्दान्	112
यामे यामे	66
यावत्सान्त्वयितुं	131
र	
रत्नानि तत्र वणिजो	149
रसं रसज्ञाः	119
राज्यग्रह	152
व	
वक्रोक्तयो यत्र	133
वङ्गाः कथमङ्गाः	70
वन्दे वांछित	136
वर्णयन्ति नरा	19
वाचं कवीनां	110
वाचं हतो यद्यपि	120
वाचस्पति	116
वाग्वर्कशक्र	46
वाराणसीमपि	151
वार्तिकाभरण	51
विद्वत्प्रियं व्यंग्य	116
विधुं चतुर्धा	91
विरमत्कमलो	139
वीरभद्र इव	131
वेदान्तवाक्य	73
वेधाः कथं	159
व्यामोहयन्ती	118
श	
शब्दब्रह्म	8
शास्त्रेषु दुर्ग्रहो	62
शिवं यज्ञाग्नौ	158
शिवात्परं नास्ति	158
शैवलोत्पल	123
श्रीकण्ठदेशिक	7

	पृष्ठम्
स	
सन्धानं कुरुता	48
सख्याः श्रियो	90
सति सह्यसुता	24
सत्यर्थे सत्सु	115
सदर्थमात्र	113
सदा जपपटो	61
सव्यं वपुः शब्द	108
सा दुष्टा जरती	156
सावलेपनिपत	36
साहित्यविद्यां	115
सैषा सर्वैव	132
स्रोतांसि तानि	87
स्वात्मेतरत्व	74
स्वादूनेव रसान्	100
ह	
हरः प्रतस्थे तं	36
हस्ते गृहीतां	85